
பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-1-9





கி இராஜநாராயணன்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/117.%20%E0%AE%95%E0%AE%BF.%E0%AE%87%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9C%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%A3%E0%AE%A9%E0%AF%8D_1923

செந்தமிழ்சிற்பிகள்

கி.இராஜநாராயணன் (1923 – 2021)



அறிமுகம்

கி. ரா என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் (16 செப்டம்பர் 1922 – 17 மே 2021), கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர். கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவர். கி.ரா என்கிற கி.ராஜநாராயணனின் முழுப்பெயர், ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜ நாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர். ஸ்ரீகிருஷ்ண ராமானுஜம், லட்சுமி அம்மாள் தம்பதியரின் ஐந்தாவது பிள்ளை கி.ரா.

1958இல் சரஸ்வதி இதழில் இவரது முதல் கதை வெளியானது. இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் விவரிப்பவை.

கி.ராஜநாராயணன் இயல்பில் ஒரு விவசாயி. ஒரு தேர்ந்த கதை சொல்லி. ‘நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்’ என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா., பாண்டிச்சேரி

பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர். நல்ல இசை ஞானம் கொண்டவர் , கவியரசு நா.காமராசன் அவர்கள் நடத்திய இலக்கிய பத்திரிகையான " சோதனை"யின் ஆலோசகர் ஆக இருந்துள்ளார்.

கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி இவரே. சாகித்ய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பெற்ற, 98 வயதான கி.ரா. தனது இறுதி காலத்தில் புதுச்சேரியில் வாழ்ந்தார். 2016-17 ஆம் ஆண்டுக்கான மனோன்மணியம் சுந்தரனார் விருது கி.ராவிற்கு வழங்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் தனது 99ஆம் வயதில் புதுச்சேரியில் இயற்கை எய்தினார். இவரது உடல் இவரது சொந்த ஊரான இடைசெவலில் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

விருதுகள்

- 1971- தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் விருது
- 1979-இலக்கிய சிந்தணை விருது
- 1991 – சாகித்திய அகாதமி விருது
- 2008 - மா.சிதம்பரம் விருது

2016-தமிழ் இலக்கிய தோட்டம்

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் மையமாக்கப்பட்ட விளிம்பினர் பின்நவீன நோக்கு

ரெ.காயத்ரி

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-sep25/48597-ki-rajanarayanan-cirukataikalil-maiyamakkappatta-vilimpinar-pinnavina-nokku

பின்நவீனமும் விளிம்பு நிலையினரும்

தொடக்க காலப் பின்நவீனச் சிந்தனைகளில் அரசியல் என்பது மையப்படுத்தப்பட்டதாக இருப்பதே அநீதியாக அறிவிக்கப்பட்டது. அரசனின் அதிகாரத்திற்கு நான்கு வகையான படைகளும் மக்களைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன. அதையே இன்றைய அரசுகள் நவீன ஆயுதங்கள் கொண்டு செய்கின்றன. ஏதோ ஒரு வகையில் அதிகாரம் மக்களை விளிம்பு நிலையாக்கி வைத்து தன் ஆட்சியை நிகழ்த்துகிறது என்றனர். ஒரு சமூகத்தில் பல்வேறு அடுக்குகள் உள்ளன. அதில் விளிம்பாக்கப்பட்ட மக்கள் என்போர் வெகு மக்களின் நியதிகளுக்கு உட்படாதவர்கள் ஆவர். குடும்ப அமைப்பில் தன்னை இணைத்துக் கொள்ளாத பெண்கள் பரத்தையர் ஆக்கப்படுவது போல, மனநிலை பிறழ்ச்சியானவர்கள், நோயுற்றவர்கள், வறுமைக்கு ஆளானவர்கள், பிச்சைக்காரர்கள், அரவாணிகள் எனப் பலரும் விளிம்பாக்கப்பட்டவர்கள் ஆவர். பெருங்கதையாடலுக்கு மாற்றான சிறுகதையாடலை முன்னிறுத்தல் என்று இதனை பின்நவீனத்துவம் கூறுகிறது, “விளிம்புகள் ஒரு படித்தனாவை அல்ல. ஒற்றைக் கருத்தியல் கொண்டவையுமல்ல. விளிம்பு என்பது ஒரு ஒப்பீடான கருத்தாக்கமும் கூட ஒரு மையத்திற்கு விளிம்பாக இருக்கின்ற ஒன்று அதனினும் விளிம்புடன் ஒப்பிடும் போது மையமாகச் செயல்படுகிற வாய்ப்பு உண்டு”[1] என்று அதிகாரத்துவம் செயல்படுவது போல ஒற்றைத் தன்மையில் விளிம்பினர் இருப்பதில்லை. அதன் அடிப்படையே பன்மைத்துவம் அல்லது வித்தியாசம்தான். வித்தியாசம் என்பது ஒரு படித்தானது என்பதிலிருந்து வேறுபட்டது. ஒரே உண்மை, ஒரே நீதி என்பது எப்படி சாத்தியமில்லையோ அது போல ஒரே மாதிரியான பாத்திரங்கள் சமூகத்தில் இருப்பதில்லை.தமிழ்ச் சமூகத்தில் இலக்கியங்களில் பாண்டித்யம் என்பது போற்றப்பட்ட சூழலில் பேச்சு மொழியையும் எளிய மக்களையும் பாத்திரங்களாகக் கொள்ளும் போக்கு உருவானது. அது இலக்கியத்தில் நிகழ்ந்த பெரிய மாற்றம் என்றே கொள்ளலாம். குறிப்பாக பார்ப்பன, வெள்ளாளச் சாதியினரின் எழுத்துக்கள் மேட்டிமைத் தன்மையோடு இருந்ததற்கு மாறாக ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, பாட்டாளி மக்களை பாத்திரங்களாகச் சித்திரிக்கும் போக்கு திராவிட இயக்கக் கருத்தியல்களால் உருவானது. அது மார்க்சிய சிந்தனையினாலும் ஏற்பட்டது. “தமிழகத்தில் ஐம்பது, அறுபதுகளில் திராவிட எதிர்ப்பிலக்கியதில் ஒரு புனித ஏழை கதாநாயகனான். பண்ணைகளிடம் வேலை பார்க்கின்ற வேலையாட்கள்,

வண்டிக்காரர்கள், நகரங்களிலிருந்த ரிக்ஷாக்காரர்கள், குப்பை கூட்டுபவர்கள், விதவைகள், விபச்சாரிகள், அனாதைகள் போன்றவர்கள் இத்தகைய புனித ஏழையின் பிம்பத்தை அடைந்தார்கள்"[2] என்று அடித்தட்டு மக்கள் விளிம்பிலிருந்து மையப் பாத்திரங்களாக மாறிய நிலைமையைப் பற்றிக் கூறுகிறார் ராஜ்கௌதமன். ஏழை என்னும் புனிதப் பாத்திரம் என்ற அடிப்படையில் அவர்கள் கடுமையான ஒடுக்குமுறைகளை பண்ணையார்களால் எதிர்கொள்கிறார்கள் என்று சித்திரிக்கப்பட்டமையைப் பற்றிய பகடியை இக்கூற்றில் வெளிப்படுத்துகிறார்.

அவரே விளிம்பு நிலைப் பட்ட மக்களை புறக்கணிக்கப்பட்ட மக்கள் என்று அழைக்கிறார். Subaltern என்பதற்கு விளிம்பு நிலை மக்கள், ஓரப்பகுதி மக்கள் என்று பொருள் கூறப்படுகிறது. குறிப்பாக இனம், வர்க்கம், பண்பாட்டுப் பால், சாதி, இனக்குழு ஆகிய பிரிவுகளில் தள்ளப்பட்ட மக்கள் திரள்களை இச்சொல் குறிப்பது வழக்கம். வேறு விதத்தில் கூறுவதானால் இதுவரை புனைந்துரைக்கப்பட்ட மேலாதிக்கப் பிரிவினரின் வரலாறுகளால் பொருட்படுத்தப்படாத அல்லது புறக்கணிக்கப்பட்ட மக்கள் திரள்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது."[3] என்று குறிப்பிடுகிறார். புறக்கணிக்கப்பட்ட மக்கள் திரளில் அடையாளப்படுத்தப்படும் மக்களை மூன்று வகையாகவும் சிலர் மேலும் சிலரை இணைத்துக் கூறுவது வழக்கமாக இருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார்.

சமூகத்தின் பார்வையில் மனிதர்களின் செயல்பாடுகள் பல்வேறு மதிப்பீடுகளுக்கு உள்ளாகின்றன. நாகரிக மனிதன், நாகரிகமற்ற மனிதன் என்ற பகுப்புகள் காணப்படுகின்றன. அறிதல் முறையிலும் இத்தகைய பாகுபாடு இருக்கிறது. அறிவாளி, முட்டாள் என்பது போன்ற பகுப்புகள் ஒதுக்குதலுக்கும் விலக்கப்படுதலுக்கும் காரணமாகின்றன. இதனை பகுத்தறிவின் வன்முறை என்று பின்நவீனத்துவம் கூறுகிறது. அறிதல் முறையில் அறிஞர், முட்டாள், பைத்தியம் என யாவருடைய கருத்தையும் ஒதுக்க முடியாது என்று குறிப்பிடுகிறது. "மாறாக அறிவு முற்றிலும் ஒன்றுடன் ஒன்று பொருந்தாத எண்ணற்ற பல்வேறு மாற்றுச் சாத்தியக் கூறுகள் நிரம்பிய பெரும் சமுத்திரமாக இருக்கிறது. எந்தப் பிரச்சினையும் என்றென்றைக்குமாய்த் தீர்க்கப்படுவதில்லை. எனவே எந்தக் கருத்தையும் நாம் ஒவ்வாது எனத் தூக்கி எறிய முடியாது. துறை வல்லுநர்கள், மாபெரும் அறிஞர்கள் போன்றோரின் கருத்துக்கள் மட்டுமின்றி சாதாரண மக்கள், முட்டாள்கள், பொய்யர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள், பைத்தியங்களின் உளறல்கள் என எதையும் பயன்படாது உண்மைக்குப் பொருந்தாது எனத் தூக்கி எறியும் உரிமை நமக்கு இல்லை"[4] என்று குறிப்பிடுகிறார் அ.மார்க்ஸ். எனவே உயரிய அறிவையும், நுட்பமான திறனையும் கொண்டவர்களே

அறிவுக்குச் சொந்தக்காரர்கள் என்னும் பகுத்தறிவு சார்ந்த வன்முறைக்கு ஒழுங்கவிழ்ப்பாளர்களான பின்நவீனத்துவர் முடிவு கட்டுகின்றனர்.

பகுத்தறிவின் வன்முறையைப் போலவே பண்பாட்டின் வன்முறையும் பிறரை ஒடுக்கும் வகையிலானது என்பதை அறிய முடிகிறது.

விளிம்பு நிலை பற்றிய அசூயை இருந்து வருகிறது. "மரபு வழி நமக்குக் கையளிக்கப்பட்டுள்ள இலக்கியத் தொகுதியில் விளிம்பு நிலை மக்கள் குறித்த மேட்டிமைச் சக்திகளின் பார்வையினூடான பதிவுகள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. மிகச் சமீப காலம் வரை விளிம்பு நிலைக் குரல்கள் இங்கு பதிவு செய்யப்படவில்லை."[5] என்ற கருத்தின் அடிப்படையில் இரண்டாயிரமாண்டு கால இலக்கிய வரலாற்றில் மேட்டிமைப் பார்வையினூடாகவே பதிவுகள் காணப்படுகின்றன. திராவிட, மார்க்சி, தலித்திய, பெண்ணிய மற்றும் விளிம்பு நிலை கருத்தாக்கங்கள் மேலெழுந்து வந்த சூழலில்தான் விளிம்பு நிலையில் ஆட்படுத்தப்பட்டகள் முதன்மைப் பாத்திரங்களாக உருவாகும் நிலை ஏற்பட்டது. ஆனால் பார்ப்பனிய, வெள்ளாளர்களின் பிரதிகளில் அடித்தட்டு மக்கள் சித்திரிக்கப்படும் விதம் கீழ்மையாக இருக்கிறது. இதற்கு புதுமைப்பித்தனின் சிறுகதைகள் உதாரணம் கொள்ளலாம் "புதுமைப்பித்தனுக்கு ஊர் என்றால் அது பார்ப்பனர், வெள்ளாளர் மற்றும் அவர்களுக்குச் சேவகமும் திருட்டுத் தொழிலும் செய்கிற மறவர்களும் மற்றவர்களும் வசிக்கும் இடம்தான். சேரிப் பறையருக்கு இதில் இடமில்லை. பறையர்களும் மற்றவர்களும் மனித மேன்மையில் ஒரு படி குறைந்தவர்கள் என்கிற சாய்வுடனேயே புதுமைப்பித்தன் பிரதிகளில் காட்டப்படுகின்றனர். குடிகாரர்கள், அசுத்தமானவர்கள் இவற்றின் விளைவாக இழிநிலை எய்தியவர்கள், தங்களின் இழிவு பற்றிய பிரக்ஞையற்றவர்கள், உரிமை வேட்கையைச் சீர்திருத்த மனம் கொண்ட பார்ப்பன வேளாளர் ஊட்டினால் கூட அதனை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள், முரடர்கள், எடுபிடிகளாகவும், அடியாட்களாகவும், வைப்பாட்டிகளாகவும், விபச்சாரிகளாகவும் இருக்கத் தகுதியானவர்கள் என்பதாகவே பறையர்களும் மறவர்களும் புதுமைப்பித்தனின் பிரதிகளில் இடம்பெறுகின்றனர்"[6] என்று அ.மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இத்தகைய விளிம்பு நிலையினர் குறித்த பார்வை காலப் போக்கில் மாற்றம் பெற்றிருக்கிறது. அதாவது விளிம்பில் உள்ள மக்கள் மையத்திற்கு வந்துள்ளனர். அவர்கள் வாழ்வு மேம்பாட்டினை அடைந்திருக்கிறது.

அந்த வகையில் விளிம்பு நிலை மக்களை மையப் பாத்திரங்களாக்கிய கூர்ந்த நோக்கினை கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் காணமுடிகிறது.

கோமதி செட்டியார் திருநங்கை

சமூகத்தில் அரவாணிகள் என்றும் மூன்றாம் பாலினத்தவர் என்றும் அழைக்கப்படுபவர்கள். சிலர் இவர்களை இழிவாக 'அசக்கு' என்றும் ஒம்போது என்றும் அலி என்றும் அடையாளம் சொல்வார்கள். அவர்கள் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட பாலினத்தவராக இருக்கின்றார்கள். இன்றைக்கும் கூட அந்நிலை மாறவில்லை. ஆயினும் சிலர் தம் நிலையை கல்வி, வேலை வாய்ப்புகளால் உயர்த்திக் கொண்டுள்ளனர் என்பதைக் காணமுடிகிறது.

கி.ரா.வின் கோமதி என்னும் சிறுகதையில் மூன்றாம் பாலினத்தவராக கோமதி குறிப்பிடப்படுகிறார். அவரை பெண்பாலாகக் குறிக்காமல் ஆண்பாலாகக் குறிக்கும் பொருட்டு கோமதி செட்டியார் என்றே குறிப்பிடுகிறார். ஒதுக்கப்பட்ட தன்னிலையாக இருக்கும் கோமதி அக்கதையின் நாயகத் தன்மையை அடைய கி.ரா.வின் முற்போக்குச் சிந்தனையே காரணமாக அமைந்திருக்கிறது. குழந்தையிலிருந்தே பாலின மாறுபாடு ஏற்படுவது பற்றிய பிரக்ஞை அற்று வளரும் நிலையினைப் பற்றி "இவனுக்குச் சிறு பிராயத்திலிருந்தே ஜடை போட்டு பூ வைத்துக் கொள்வதிலும், வளை அணிந்து கொள்வதிலும் கொள்ளை ஆசை. உருவம் ஆணாக இருந்தாலும் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி, நீட்டி தலை அசைத்துப் பேசுவது அவனுக்குக் குழந்தையாக இருக்கும் போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண் குழந்தைகளோடுதான் விருப்பமாக விளையாடப் போனான்" (கி.ரா. சிறுகதைகள், ப.123) என்ற கூற்றில் குழந்தையாக இருக்கும் கோமதி என்று பெயர் வைத்து விடுகிறார்கள். ஆனால் அவன் பெண்ணின் பண்புகளைக் கொண்டிருக்கிறான்.

பெண்களோடு பெண்களாகவே வளர்ந்து வந்தான். பெண்களும் இவனை வேறுபாடுடன் நடத்துவதில்லை. சமூகத்தில் ஒதுக்கப்படும் நிலையில் உள்ள ஒருவன் மீது சமூகம் கொண்டிருக்கும் ஆதர்சம் இவருடைய கதையில் வெளிப்படுகிறது. "பெண்கள் இவனை வித்தியாசமாக நினைப்பது இல்லை. நடத்துவதும் இல்லை. இவன் எங்கு சென்றாலும் இவனைப் பிரியமாக வைத்துக் கொள்வார்கள்" (கி.ரா.சிறுகதைகள், ப.125) இவனுக்குச் சமையலில் மிகுந்த திறமை இருந்தது என்பதால் ஒரு கல்யாணத்தில் சென்ற இடத்தில் ரகுபதி நாயக்கரின் வீட்டில் சமையல் வேலைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

அவனுடைய நடையுடை பாவனைகள் மற்றவர்களிடமிருந்து வித்தியாக இருப்பதை கேலி செய்யாமல் ரஸித்து சிரித்தார்கள் என்று கூறப்படுவதைக் காணமுடிகிறது. "பக்கத்து வீட்டுப் பெண்களெல்லாம் இவனைப் பார்க்க

வந்து விட்டார்கள். இவனுடைய நடையையும் நீட்டிப் பேசுகிற பேச்சையும் அசைவுகளையும் கண்ட பெண்கள் சிரித்து ரஸித்தார்கள்" (கி.ரா.சிறுகதைகள், ப.126) இவ்வாறு கேலி செய்து ஒதுக்கம் செய்ய வேண்டிய பாத்திரமான கோமதி பாத்திரம் பிற பாத்திரங்களை விடவும் தகுதி வாய்ந்த முதன்மையான பாத்திரமாக வார்க்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

வேறுபட்ட பாலாக இருந்தாலும் கோமதிக்கும் காதல் உணர்வுகள் வருகிறது என கி.ரா. சுட்டுகிறார். ரகுபதி நாயக்கரின் மகன் இவளுடைய சமையல் குறித்துப் பாராட்டுகிறார். கோமதியைப் பார்க்கவும் விரும்புகிறார். ஆனால் கோமதியை நேருக்கு நேராகப் பார்த்து அதிர்ச்சி அடைகிறார். "ரகு திரும்பிப் பார்த்தான், முகத்தச் சுழித்தான். இந்த ரஸவிஹாரத்தை அவன் ஆண்மை நிறைந்த உள்ளத்தால் தாங்க முடியவில்லை" (கி.ரா.சிறுகதைகள், ப.129) என்று குறிப்பிடுவதில் ரகு கோமதியைப் பார்த்து சிறிது அருவருப்பை வெளிப்படுத்துவது கூறப்படுகிறது. சீ வெளியே போ என்றும் உதாசீனம் செய்கிறான். இதனால் மனம் உடைந்து போகிறான் கோமதி. அவன் அவ்வாறு நடந்து கொண்டதை ஆட்சேபித்த அவனுடைய தங்கை இரக்கம் கொள்ள வேண்டிய ஒருவனிடம் உதாசீனத்துடன் நடந்து கொண்டது தவறு என்று சுட்டிக் காட்டுகிறாள். அவன் கோமதி மேல் இரக்கம் கொள்கிறான். கோமதியை நல்லமுறையில் நடத்த தீர்மானிக்கிறான். அவனுக்கு கோமதி பால் கொண்டு போய் கொடுக்கிறான். ரகுவின் நாடியைப் பிடித்து கொஞ்சுவது போல் பாலைக் குடிக்கச் சொல்கிறான். இதனால் எரிச்சல் அடைந்த ரகு அவனை ஓங்கி அறைந்து விடுகிறான். ரகுவின் மேல் அவனுக்கு சிறிது காதல் இருந்திருக்கும் அதனால்தான் உரிமையோடு தொட அவனோ வெறுப்படைந்தான். ரகு ஊருக்குச் சென்று விடுகிறான். வழக்கம் போல கோமதி தன் வேலைகளைச் செய்தாலும் ஈடுபாட்டினை இழந்தவன் போல இருக்கிறான். பின்பு அந்த வீட்டை விட்டு வெளியேறிச் சென்று விடுகிறான். இவ்வாறு ஒரு பாத்திரத்தை முதன்மைப் பாத்திரமாக படைத்து அக்கதையின் நடுநாயகமாக நிறுத்துகிறார் கி.ரா.

அவத் தொழிலாளர்

இச்சிறுகதை அரை ஊமையும் வாய் கொன்னிப் பேசும் மூட்டை தூக்கும் தொழிலாளி. கருகருவென்று இருக்கும் அவனைக் கண்டாலே யாராயிருந்தாலும் ஒரு அறை விடணும் போல இருக்கும் என்று கூறுகிறார். அவனைச் சீண்டுவது பிறருக்கு மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் அவன் அவர்கள் மேல் எரிச்சலும் கோபமும் வந்து அடிக்கப் பாய்வான். கல்லைத் தூக்கி எறியப் போவான். ஆனால் எறிய மாட்டான். "எதிர்பாரா சமயத்தில் ஒரு கண்டக்டரோ, டிரைவரோ அவன் முதுகில் ஒரு குடுப்புக் குடுப்பான். வீல் என்று அவன் அடித்தவன் மேல் பாயும் போது மற்றவன் அதை விட

வேகமாக ஊமையின் முதுகில் ஒன்று கொடுத்து அவனை திசை திருப்புவான். அடிகளும் வேதனையும் தாங்க முடியாமல் போகும் போது அந்த அனாதை ஓடிச் சென்று ஒரு பெரிய்ய கல்லை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு வருவான். ஆனால் அவனிடமுள்ள நல்லகுணம் யார் மீதும் அதைப் போடமாட்டான்" (கி.ரா.சிறுகதைகள், ப.139) அவனை மேலும் பலபேர் அடித்துத் துன்புறுத்துவார்கள் என்று கூறுகிறார். மாற்றுத் திறனாளிகள் மற்றும் வயதானவர்களை உதாசீனப்படுத்தும் நிலை படிப்படியாக மறைந்து இன்று அவர்கள் அனைவரும் முதன்மை இடம் கொடுக்கப்படுபவர்களாக மாறிய நிலைமையினை ஒரு கிழவி இடைச் செவல் செல்ல பஸ் பயணத்திற்கான டிக்கெட் எடுப்பதற்காக நிற்பதும் திருநெல்வேலி பேருந்துகள் இடையில் நில்லா பேருந்து ஆகையால் கிழவியைக் கண்டு கொள்ளாமல் இருப்பதையும் பற்றிக் கூறி அத்தகைய நடத்துனர்கள், ஓட்டுநர்கள், பேருந்து உரிமையாளர்கள் இன்று இல்லை என்பதை உணர்த்தும் முகமாக "இதோ இருக்கும் இவர்களெல்லாம் தேவர்களா கண்டக்டர்கள்தானா? வயசான ஒரு கிழவியைக் கைலாகு கொடுத்து காரில் ஏற்றி விடுகிறானே. இப்போதெல்லாம் கிழவர்களுக்கும் குழந்தைகளுக்கும்தான் முதல் மரியாதை" (கி.ரா.சிறுகதைகள், ப.143) என்று பின்நவீனத்துவ உலகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் முதல் மரியாதைத் தரப்படும் நிலை பற்றிக் கூறப்படுகிறது,

கறிவேப்பிலைகள்

முதியவர்களைத்தான் இந்தப் பெயர் இட்டு ஆசிரியர் குறிப்பிடுகிறார். கறிவேப்பிலைகள் தாளித்தவுடன் அதன் பணி முடிந்தது. அதை கீழே பொறுக்கிப் போட்டு விட்டுத்தான் சாப்பிடுவார்கள். அப்படித்தான் பப்புத் தம்பதியினர் இந்தக் கதையில் குறிப்பிடப்படுகின்றனர். அவர்களுக்கு சிறு இடம் குடியிருக்க இருந்தால் போதும். ஏதேனும் ஒரு வேலை பார்த்துக் கொண்டு காலத்தை ஓட்டி விடலாம். நல்ல சாப்பாடு கிடையாது, பார்த்துக் கொள்ள ஆட்கள் கிடையாது. சொந்த பந்தம் யாரும் இல்லை. இளவயதில் ஊருக்கு உழைத்தவராக பப்புத் தாத்தா குறிப்பிடப்படுகிறார். வயதாக வயதாக அவருடைய தேவை யாருக்கும் அவசியம் இன்றி போய் விட்டது. பப்புக் கிழவனும் கிழவியும் மட்டும் தங்களுக்குள் ஆதரவாக இருந்து கொள்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை லட்சியம் என்று எதுவுமில்லை. நல்ல சாப்பாடுதான் என்று கூறுகிறார் "அந்த வங்கிழடு தம்பதியர்க்கு இப்பொழுதெல்லாம் ஒரே ஒரு ஆசைதான். இழவு வீடுகளில் போய் உட்கார்ந்து இலை போட்டு அதில் நிறைய்ய நெல்லுச் சோறு போட்டு காரமும் புளிப்புமாயுள்ள பூசணிக்காய்க் குழம்பை தாராளமாய் விட்டு மூக்கில் நீர் சொட்டச் சொட்ட பெரிய பெரிய கவளமாகச் செய்து ஆசைதீரச் சாப்பிட வேண்டும் என்பதுதான்" (கி.ரா.சிறுகதைகள். ப.202) என்று

கூறப்படுகிறது. அவர்களின் வாழ்வு ஒதுக்கப்பட்டதாக இக்கதையில் கூறப்படுகிறது. அதனால்தான் அவர்கள் கறிவேப்பிலைக்கு ஒப்பாக வாழ்கின்றனர் என்றும் கொள்ளமுடிகிறது.

ஜீவன்

ஊர்ப் பெண்கள் பகடி செய்து சிரித்து விளையாடும் ஆகருதியும் மனவளமும் கொண்டவனாக அங்குப்பிள்ளை இந்தக் கதையில் கூறப்படுகிறது. பெண்கள் தங்களுக்குள் சீண்டுவதற்கு அங்குபிள்ளையைத்தான் பயன்படுத்துவார்கள். "கிராமத்திலுள்ள குமரிப் பெண்டுகளுக்கு அங்குப்பிள்ளையைக் கண்டு விட்டாலே ஒரு வித குஷி வந்து விடும். ஜாடை செய்து ஒவ்வொரு வார்த்தைக்குமே ஜாடை செய்து ஒனக்கு (அங்குப்பிள்ளையைக் காட்டி) கலியாணம் (தாலி) கட்டுவதைப் போல கழுத்துப் பக்கம் கைகளைக் கொண்டு போய்) எப்போ (விரல்களை முஷ்டி மடக்கிக் குலுக்க வேண்டும்" (கி.ரா.சிறுகதைகள், ப.239) என்று அங்குப் பிள்ளையை பெரிதும் பகடியும் எள்ளலும் செய்வார்கள். அங்குப்பிள்ளை ஒரு அரைக்கால் பேச்சு ஊமை அவன் முன்னால் மூக்கில் கை வைத்து விட்டால் பழியாகக் கோபம் வரும். அவனது உடை உடுத்தும் விதமே எத்தகைய நிலையில் அவன் இருக்கிறான் என்பதை சுட்டுவதாக அமைந்து விடுகிறது "அவன் எப்பவும் துவைத்து நிழலில் உலர்த்திய ஒரு புழுக்க வாடையுள்ள பளுப்பு நிற வேட்டியையே உடுத்திக் கொண்டிருப்பான். துண்டுக்குப் பதிலாக மேலே போர்த்திக் கொண்டிருப்பதும் ஒரு வேட்டிதான். அதை ரெண்டாக மடித்துக் குறுக்கு வசத்தில் மேலே போட்டு இடது கக்ககத்துக்குள் அதன் மல்க்கோடிகளை இடுக்கிக் கொண்டிருப்பான்" (கி.ரா.சிறுகதைகள், ப.240) என்று அவனது உடை உடுத்தும் தன்மையில் அவனது இயல்பற்ற மனநிலை கூறப்படுகிறது. மேலும் அவனது முகலட்சணமும் பொருந்தா நிலையில் இருக்கும். "அவனுக்கு நான்கு முன்னத்தம் பற்கள் மிகவும் நீளம் பெரியவர்களின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் போது பற்கள் தெரியாமல் மரியாதைக்காக மூடிக் கொள்ள வேண்டும் என்று நினைத்து உதடுகளால் மறைத்துக் கொண்டு ஊ என்று இருப்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும்" (கி.ரா.சிறுகதைகள், ப.240)

இத்தகைய ஒருவனை தன் கதையின் மையப் புள்ளியில் வைத்து நகர்த்துகிறார் ஆசிரியர். அவனைச் சீண்டும் போது அவனது செயல்களை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. "நல்ல இளவட்டமான அங்குவை குமரிப் பெண்டுகள் விஷமில்லாத தண்ணிப் பாம்பு போல் நினைத்து நடத்தி வந்தார்கள்."
(கி.ரா.சிறுகதைகள், ப.241) என்று அங்குப் பிள்ளை பெண்களால்

பரிகசிக்கப்படும் ஆகுருதியாக இருப்பதும் அவர்களால் ஏளனத்திற்கு உள்ளாகும் தன்னிலையாக இருப்பதும் சுட்டப்படுகிறது.

இத்தகைய பாத்திரங்கள் ஏளனத்திற்கு மட்டும் ஆட்படுவதில்லை. சுயவதைகக்கும் உள்ளாகிறார்கள். அங்குப்பிள்ளைக்கு பெண் தர மறுக்கும் சொந்தக்காரர்கள் அவனை உதாசீனம் செய்யும் போது மனமொடிந்து போகிறவனாக மாறி விடுகிறான். அவனிடம் கல்யாணம் பற்றிக் கேட்கும் போது வெட்கம் கொள்கிறான். தனக்கும் தன் தந்தை திருமணம் செய்து வைப்பார் என்று நம்புகிறான். அவனுடைய தம்பி ஆதிலிங்கத்திற்குக் கல்யாணம் நடக்கும் போது தனக்கும் கல்யாணம் நடக்கும் என்று அவனது தந்தை விளையாட்டாகச் சொன்னதை நம்பிக் கொள்கிறான். ஊமைகள் யாருக்கும் கல்யாணம் பெரும்பாலும் ஆவதில்லை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அங்குவுக்கும் அதுதான் நிலைமை என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்கு யார் பெண் தருவார்கள். "ஆதிலிங்கத்திற்குக் கலியாணம் என்ற போது தமக்கும் சேர்த்தே கலியாணம் என்று நம்பி இருந்தான் அங்கு. கல்யாணம் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது எங்கள் அப்பாவிடம் வந்து அங்கு தனக்குக் கலியாணம் என்ற பெருமையோடு சொன்னான். நாங்கள் எல்லோரும் அது நிஜம் என்றே நினைத்தோம். (ஆனால் பொதுவாக ஊமைகள் யாருக்கும் அநேகமாகக் கல்யாணம் ஆவது இல்லை)" (கி.ரா. சிறுகதைகள், ப.246) என்று அங்கு தனக்கும் கல்யாணம் என்று நம்பிக் கொண்டிருந்தவனுக்கு அவ்வாறு இல்லை என்று தெரிந்த போது ஆற்றாமையும் சுயபச்சாதாபமும் கூடி விடுகிறது. அழுது கொண்டே இருந்தவன் வீட்டிற்குள் சென்று விறகுக் கட்டையை எடுத்து சமையலறைப் பாத்திரங்களை எல்லாம் நொறுக்க ஆரம்பித்தான். அவனுடைய தந்தை வந்த போது விறகுக் கட்டையைக் காண்பித்து அடித்து விடுவதாக ஜாடை செய்கிறான். பின்பு இளந்தாரிகள் கூடி அவனைப் பிடித்து ஒரு அறையில் போட்டு அடைத்து விடுகிறார்கள். அப்பா அவனை எங்கே என்று கேட்ட போது அறைக்குள் மூடி வைத்ததாகக் கூறவும் அறையைத் திறந்து பார்க்க அங்குப்பிள்ளை அலங்கோலமாகக் கிடக்கிறான். "அவன் இறந்து போய் விட்டானா? மயங்கிக் கிடக்கிறானா என்று தெரியவில்லை. வேட்டி பூராவும் முன் பக்கத்தில் ரத்தத்தால் நனைந்து இருந்தது. உடம்பில் எங்கும் காயம் தட்டுப்படவில்லை எங்களுக்கு. கொஞ்சம் விலகியிருந்த நனைந்த வேட்டியை நீக்கிப் பார்த்த போதுதான் தெரிந்தது. ஓரே ஒரு கழிப்பட்ட இரும்புத் தகட்டினால் அங்கு தன்னுடைய உயிர்த் தலத்தை அறுத்துக் கொண்டான்" (கி.ரா.சிறுகதைகள், ப.249) என்று அங்கு தன் முடிவைத் தானே எழுதிக் கொள்கிறான்.

இவ்வாறு விளிம்பு நிலைப் பாத்திரங்களை தன் சிறுகதைகளில் மையமாக்கி அவர்களை உரிய மதிப்போடு நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் எழுதினார்.

முடிவுரை

விளிம்பு நிலை ஆய்வுகளில் மக்களின் வாழ்வியல் நிலை என்பது பல அடுக்குகளில் பகுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிட்ட சாதி அல்லது வர்க்கத்தினர் மட்டும் மேல் நோக்கிய வளர்ச்சியில் இருப்பதும் பெருவாரியான அடித்தட்டு மக்கள் போதிய கவனிப்பற்று வாழ்தலை ஒரு கடமையாகச் செய்யும் நிலையும் இருந்து வந்தமை சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலைப்பட்ட மக்கள் பல வகையினராக இருக்கின்றனர். அவர்கள் பற்றிய ஒவ்வாமையை தமிழ் இலக்கிய வரலாற்றில் பார்ப்பனிய, வேளாள எழுத்தாளர்கள் வெளிப்படுத்தினர். திராவிட, மார்க்சிய, பெண்ணிய, தலித்திய நோக்கிலான எழுத்துக்கள் ஒதுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, பாட்டாளி வர்க்கத்தினரை தம் கதைகளில் முதன்மைப் பாத்திரங்களாக்கினர். அவர்களது வாழ்வியலும் கண்டுணரப்பட வேண்டியவையே என்று உணர்த்தினர். அந்த வகையில் விளிம்பு நிலைப் பாத்திரங்களை மையப் பாத்திரங்களாக்கியவர்கள் என்று இவர்களைக் கருதலாம். அந்த வரிசையில் கரிசல் காட்டு மக்களில் பண்ணையார், இடைநிலைச் சாதியினரின் வாழ்வியலை மட்டுமின்றி ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட தன்னிலைகளாக வாழும் மக்களையும் தம் சிறுகதைகளில் முதன்மைப்படுத்தியவராக கி.ரா. விளங்குகிறார். அவருடைய சிறுகதைகளில் திருநங்கைகள், மூப்பினை உடைய வயதானவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், அடித்தட்டு மக்கள் எனப் பலரும் முதன்மைப் பாத்திரங்களாக்கப்பட்டு அவர்களது வாழ்வியல், அவர்களது உணர்வுகள் மையப்படுத்தப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ்; விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், ப.30
2. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், ப.20
3. ராஜ்கௌதமன், ராஜ்கௌதமன் கட்டுரைகள், ப.131
4. அ.மார்க்ஸ், பின்நவீன நிலை, ப.75
5. மேலது, ப.31
6. அ.மார்க்ஸ், உடைபடும் மௌனங்களும் சிதறுண்ட புனிதங்களும், ப.412

துணை நூற்பட்டியல்

1. கி.ராஜநாராயணன், கி.ரா.சிறுகதைகள், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர், 2022

2. பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ், விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், புலம் வெளியீடு, சென்னை, 2010

3. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2011

4. ராஜ்கௌதமன், ராஜ்கௌதமன் கட்டுரைகள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2021

5. அ.மார்க்ஸ், பின்நவீன நிலை, புலம் வெளியீடு, சென்னை, 2010

6. அ.மார்க்ஸ், உடைபடும் மௌனங்களும் சிதறுண்ட புனிதங்களும், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2019

கட்டுரையாளர்கள்:


ரெ.காயத்ரி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ எஸ் இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.

& முனைவர் இரா.பூங்கோதை, இணைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்.

காலச்சுவடு

https://books.kalachuvadu.com/kcbooks/AuthorDetailView/ki--rajanarayanan_38/

பிறப்பு: 1923 :: இறப்பு: 2021



கி. ராஜநாராயணன் (1923) கோவில்பட்டி அருகே இடைசெவல் கிராமத்தில் ஸ்ரீ கிருஷ்ண ராமானுஜம் - லக்ஷ்மி அம்மாள் தம்பதியரின் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயண பெருமாள் ராமானுஜம் நாயக்கர். இவரது முன்னோர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் தெலுங்கு தேசத்திலிருந்து வந்து இங்கே குடியேறியவர்கள். கி.ரா. வின் படிப்பு எட்டாவது வகுப்புடன் நின்றுவிட்டது. ஆனால் நிறைய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினார். கரிசல் பூமியும் அதன் மக்களும் இவரை எழுதத் தூண்டின. தந்தையிடமிருந்து கேட்ட நிறைய கதைகள் அதற்கு உரமிட்டன. கி.ரா.வின் எழுத்து நடை கிராமிய மணமும் கரிசல் மண்ணின் அழகும் கொண்டது. பாமர மக்களின் பேச்சுவழக்கையும்

சொலவடைகளையும் லாவகமாகக் கையாள்பவர். முதல் நாவல் 'கோபல்ல கிராமம்' பெரிய வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து நாடோடி இலக்கியம், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என்று முப்பதுக்கும் மேற்பட்ட நூற்கள் வெளிவந்துள்ளன. இவரது வட்டார வழக்குச் சொல்லகராதி ஒரு முக்கியத் தொகுப்பு. 'கதைசொல்லி' என்ற இதழைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். இப்போது பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார். அங்குள்ள பல்கலைக் கழகத்தில் நாட்டுப்புறவியல் துறையின் இயக்குனராகப் பணி புரிந்துள்ளார். சாகித்ய அகாதெமி விருது உட்பட பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.


அழியாச் சுடர்கள்

https://azhiyasudargal.wordpress.com/2010/11/11/%E0%AE%95%E0%AE%BF-%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9C%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%A3%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3/

கி.ராஜநாராயணன் படைப்புகள்-ஜெயமோகன்

இனக்குழு அழகியலின் முன்னோடி

கி.ராஜநாராயணனின் 'கோபல்லகிராமம் ' நாவலின் முடிவை நினைவிருக்கிறதா ? கோபல்ல கிராமத்துக்கு மேல் வெள்ளையர் ஆதிக்கம் உருவாகும் காலம். அவர்களை எப்படி எதிர்கொள்வது என்று வயது முதிர்ந்து பழுத்து உதிரும் நிலையில் இருக்கும் , இரு நூற்றாண்டுகளைக் கண்ட, தொட்டவ்வாவிடம் கேட்கிறார்கள். வெள்ளைக்காரன் பெண்களை பலாத்காரம் செய்கிறானா, கொள்ளையடிக்கிறானா என்று அவள் கேட்கிறாள். இல்லை என்று சொல்கிறார்கள்.அப்படியானால் அவர்களை நாம் வரவேற்போம், அவர்களுடன் சேர்ந்துகொள்வோம் என்று அவள் பதில் சொல்கிறாள். நமது சுதந்திர இந்தியாவில் எழுதப்பட்ட பெரும்பாலான கதைகளில் சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக உருவான இலட்சியவேகம், வெள்ளைய ஆட்சிக்கு எதிரான மனநிலை ஆகியவற்றைக் காண்கிறோம். அதன் பிறகு வந்த ஆக்கங்களில் இலட்சியவாதத்தின் சரிவை , அதன் விளைவான சமூக வீழ்ச்சியின் சித்திரத்தைக் காணமுடிகிறது. கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகியவை முதல் வகை. 'பொய்த்தேவு ' [க நா சுப்ரமணியம்] முதல் ' ஒரு புளியமரத்தின் கதை வரை நாவல்கள் பெரும்பாலும் வீழ்ச்சியின் சித்திரத்தை அளிப்பவை. ஆனால் இரு



போக்குகளிலும் இருந்து விலகி கோபல்ல கிராமம் ஒரு தனியான பார்வையை அளிக்கிறது .அப்பார்வை மேலே சொன்ன பொதுவான கருத்தியல் போக்குகளிலிருந்து உருவானதல்ல. மாறாக தன் இனக்குழுப்பின்னணியிலிருந்து கி ராஜநாராயணன் உருவாக்கிக் கொண்டது. அதை வேறு எவரும் எழுதிவிடமுடியாது. அந்த தனித்த

இனக்குழுவேர்தான் தமிழுக்கு அவரது பங்களிப்பு. அவரது கலையின் ஆதாரம். அவரது ஆக்கங்களின் உள்வலிமை . அவரது ஆக்கங்களின் எல்லையையும் இங்கேயே நாம் தேடவேண்டியுள்ளது.

கி.ராஜநாராயணனின் அழகியல் கூறுகள்

கி.ராஜநாராயணனை தான் சந்தித்த தருணங்களைப்பற்றி சுந்தர ராமசாமி என்னிடம் தனிப்பட்ட உரையாடல்களில் சொல்லியிருக்கிறார் . முதலில் டி.கெ.சிதம்பரநாத முதலியாரின் 'வட்டத்தொட்டி ' அவைகளில் . அப்போது அவர் சட்டைபோடாமலேயே ஊரில் இருந்து வருவார், தரையில் ஒரு மூலையில் அமர்வார் , சபையில் எதுவுமே பேசமாட்டார் என்று சுந்தர ராமசாமி நினைவு கூர்ந்தார். பிறகு விவசாயிகள்போராட்டங்கள்மூலம் இடதுசாரி அரசியலுக்கு வந்த கி.ராஜநாராயணனை நெல்லை கம்யூனிஸ்ட் வக்கீல் என்.டி. வானமாமலை வீட்டில் வைத்து சந்தித்ததையும் அப்போது அவரில் உருவாகியிருந்த மாற்றங்களையும் நினைவு கூர்ந்த சுந்தர ராமசாமி ஆனால் அவரது பேச்சுமொழி மட்டும் மாறவேயில்லை. பேச்சிலே சாதாரணமாக அவர் கிராமத்து உவமைகளையும், கதைகளையும் தான் பயன்படுத்துவார் என்றார். கி.ராஜநாராயணனின் படைப்புலகின் முக்கிய அம்சங்கள் அனைத்தையும் இதன் மூலம் நான் அடையாளம் காண்கிறேன். டி.கெ.சிதம்பரநாத முதலியாரின் வழியாக கி.ராஜநாராயணன் பெற்றுக் கொண்டது ரசனையை என்று சொல்லலாம். கம்யூனிஸ்டு இயக்கங்கள் மூலம் முற்போக்கு மனிதாபிமான பார்வையை . அவரது பிறப்பு வளர்ப்பு ஆகிய பின்னணியிலிருந்து கிடைத்து அவரது மனதில் முக்கியமான இடம் பிடித்திருந்த கிராமத்துப் பண்பாட்டுக் கூறுகள் இவ்விரு புதுக் கூறுகளுடனும் கலந்து அவரது ஆளுமையை உருவாக்கின .

ரசனை என்பதை கி ராஜநாராயணனின் அழகியல் அடிப்படைகளில் முக்கியமான ஒன்றாகவே காணலாம். அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த சூழலையே வெளியே இருந்து வந்த ஒருவனின் பார்வையுடன் பார்த்து ரசித்து சொல்லும் பாணியை அவரது கதைகளில் வாசிக்கிறோம். இயற்கைச் சூழலை , மனிதர்களின் குணாதிசயங்களை , அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை எல்லாமே ஒரு வேடிக்கை பார்க்கும் கண்ணோடு விலகி நின்றே அவர் பார்க்கிறார் . இந்தப் பார்வையே அவருடைய படைப்புகளில் வெகுஜன ரசனையையும் திருப்தி செய்யும் கூறாக உள்ளது. ஏறத்தாழ இதே சூழலை எழுதிய பூமணியிடம் இத்தகைய ரசனை அம்சமே இல்லை என்பதையும், அவர் படைப்புகளில் வாழ்க்கை சாதாரணமாகத் தகவல்களாகவே வருகிறது என்பதையும் இத்துடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ரசிப்பது, அந்த ரசனையை நுட்பத்துடனும், ஆர்வத்துடனும் பகிர முயல்வது கி.ராஜநாராயணனின் இயல்பு.

இயற்கையைச் சித்தரிப்பதில்வெற்றி அடைந்த தமிழ் எழுத்தாளர்கள் குறைவே. தி.ஜானகிராமன்[காவிரிக்கரைகள்] ப.சிங்காரம் [கடல்] இருவரை மட்டுமே என்னால் குறிப்பிட்டுச் சொல்லமுடிகிறது. இயற்கையை சித்தரிப்பதில் ஒரு எழுத்தாளன் எங்கே தோல்வி அடைகிறான் ? ஒன்று இயற்கையை வெறும் தகவல்களாக புறவயமாக சொல்லி செல்லும்போது, க.நா.சுப்ரமணியம் ,செல்லப்பா போல. அல்லது அகவயமான உணர்வுகளை முக்கியப்படுத்தி , பிரயத்தனப்படுத்தி அவற்றை இயற்கை மீது ஏற்றும்போது. உதாரணம் மௌனி, சுந்தர ராமசாமி. இயற்கையைப் பற்றிய சிறந்த சித்தரிப்பு அதில் ஆழ்மனம் ஈடுபடுவதன் தன்னிச்சையான வெளிப்பாடாக இருக்கும். இயல்பான காட்சிப்படத் தன்மையைக் கொண்டிருக்கும்போதே அக உணர்வுகளைபிரதிபலித்து படிமத்தன்மையும் கொண்டிருக்கும். இயற்கையின் பிரம்மாண்டம் ஒரு படைப்பாளியிடம் உண்மையான எதிர்வினையை

எழுப்பியிருக்கிறதென்றால் அது கண்டிப்பாக கட்டுப்பாடற்ற தன்மையைத்தான் கொண்டிருக்கும். ப.சிங்காரத்தின் மொழி உளறல்போல மாறுவதைக் காணலாம். காரணம் தன் சுயத்தை நிராகரித்தே ஒரு மனம் இயற்கையில் ஈடுபட முடியும்.

கி.ராஜநாராயணனின் படைப்புகளில் நவீனத் தமிழில் உள்ள மிகச்சிறந்த சில இயற்கைச் சித்தரிப்புகளைக் காண்கிறோம். இவற்றில் முதன்மையானது கோபல்ல கிராமம் நாவலில் கிராமத்தில் காலைநேரம் விடிந்து எழும் சித்திரம்தான். அவரது பிஞ்சுகள் என்ற குழந்தைகள் நாவல் இயற்கையின் அழகிய சித்தரிப்புக்காக முக்கியமானது. கி.ராஜநாராயணன் தன் கதைகூறல்முறைகளில் எப்போதுமே நாட்டார் வாய்மொழி மரபின் அழகியலையே கைக்கொள்கிறார். அதன் சாமர்த்தியம், நக்கல்கள், இடக்கரடக்கல்கள், அனைத்தையும் விட முக்கியமாக நிதரிசனப்பாங்கு. ஆனால் இயற்கையை சொல்லும்போது மட்டும் அவர் செவ்வியல்தன்மைக்குள் சென்றுவிடுகிறார். ஏனெனில் இயற்கையை விலகி நின்று பார்த்து வியப்பது நாட்டார் மரபின் இயல்பல்ல. இயற்கை தன்னிச்சையான ஓர் இடத்தை மட்டிலுமே நாட்டார் மரபில் பெறமுடிகிறது. இயற்கையை சொல்லுமிடத்தில் கி.ராஜநாராயணனின் வாசாலகத்தன்மை அகன்று அவர் மொழி செறிவும் வேகமும் கொண்டு கவிதைவாவது நவீனத் தமிழிலிலக்கியத்தின் முக்கியமான அழகுகளில் ஒன்று.


‘ ..மூணாம்நாள் காலையில் மஞ்சள் வெயில் அடித்தது. அலசி விட்டதைப்போல வானம் சுத்த நீலமாய் இருந்தது.யாரோ மேற்கே கை காண்பித்தார்கள். வெகுதூரத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சிமலை இன்று ரொம்பக் கிட்டே வந்திருப்பதுபோல தோன்றியது. எப்பவும் ஒரு நீல அம்பாரமாக மட்டுமே தெரியும் மலை இன்று அதனுள்ளே இருக்கும் மலையின் திருப்பங்கள் மடங்கள் கூட தெளிவாகத் தெரிவதை பார்த்தார்கள். யாரோ அதிலிருந்த பாறைகள் மரங்கள் கூட தெரிவதாகச் சொன்னார்கள் கோயிலின் படிக்கட்டின் அடியிலிருந்து ‘டொர்ர் டொறக் ‘என்று ஒரு சொரித்தவளை சத்தம் கொடுத்தது…வேகமாக நகர்ந்துகொண்டிருந்த வெள்ளைமேகங்கள் மதியத்துக்கு மேல் நிறைசூல் கொண்ட யானைமந்தைகள்போல நகர முடியாமல் அப்படியே நின்றுவிட்டன உச்சியில். கட்டுத்தறியை அறுத்துக் கொண்ட காளையொன்று குதியாளம் போட்டது.இரைக்கு சென்றிருந்த அரசமரத்து காகங்கள் பாதியிலேயே கத்திக் கொண்டு திரும்பிவந்துகொண்டிருந்தன. வடஞ்சுருட்டி மூலையில் திடாரென்று மின்னல் அந்த பகலிலும் கண்ணை வெட்டியது.... ‘ [நிலைநிறுத்தல்]

நீண்ட கோடைக்கு பிறகு வரும் மழையின் சித்திரத்தை அளிக்கும்போது இக்கதையின் மொத்த குறியீட்டுத்தன்மையும் தீவிரமாக மேலெழுவதைக் காணலாம். மேகங்கள் குளிர்ந்து நிற்பது, அந்தக் காளையின் குதியாட்டம் எல்லாமே உளநிகழ்வுகளும் கூட! நாட்டார் மரபிலிருந்தே கிராஜநாராயணன் துவங்குகிறார். ஆனால் டி.கெ.சி அம்சம் அவரை அதிலிருந்து நகர்த்திக் கொண்டு செல்கிறது.

மனிதர்களைப்பற்றி சொல்லும்போது அவர்களுடைய மனஓட்டங்களை பெரும்பாலும் குறிப்பாகச் சொல்லி , உடல் அசைவுகளை விவரித்து சித்தரிப்பது கி.ராஜநாராயணனின் பாணி . நேரடியாக மனதை சித்தரிப்பது அவரது இயல்பல்ல என்பதனாலேயே அவற்றை அவர் சொல்லும் இடங்கள் எல்லாம் ஆசிரியர் கூற்றாக அமைந்து ‘பரிந்துரை ‘த்தன்மை கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த உணர்வுகளை அவர் கதாபாத்திரங்களின் உடல் மொழியின் வழியாக சொல்லும்போது எப்போதுமே புதுமையும் தீவிரமும் உருவாகிவிடுகின்றன.கோபல்ல கிராமத்தில் கி.ராஜநாராயணன் கோபல்லகிராமத்தின் வெவ்வேறு நாயக்கர்களைப்பற்றி சொல்லுமிடங்களில் முழுக்க உடல்மொழியையே பிரதானமாக சொல்லியிருப்பதைக் காணலாம்.

‘ ஊர்க்கூட்டத்துக்கு ஊர் சாட்டியவுடன் வந்து சேரும் முதல் நபரும் அவரே. விறுவிறுவென்று சாப்பிட்டுவிட்டு தெருவழியே கையைத் துடைத்துக் கொண்டே கடைக்கு வந்து எழாயிரம் பண்ணை தென்னைப்பொடியில் ஒரு சிட்டிகை ஓசிப்பொடி வாங்கிக் கொண்டு கூட்டம் கூடும் இடத்தில் உயரமான இடமாகப் பார்த்து வகையாய் உட்கார்ந்துவிடுவார். விவகாரம் கேட்கும்போது இடதுகையை இடுப்பில் வைத்து வலதுகையை சின்முத்திரைபோல வைத்துக் கொண்டு ஒரு பூவை முகர்ந்துபார்பதுபோல அதை முகர்ந்துகொண்டே லயிப்பில் கண்களைமூடி மண்டையை மண்டையை ஆட்டிக் கொண்டு ராக ஆலாபனனையைகேட்பதுபோல எதிராளியிடம் கேட்டுக் கொண்டே வருவார் ‘ [கிடை]

மனங்கள் உரசிக் கொள்ளும் நுட்பமான தருணக்களைக் கூட கி. ராஜநாராயணன் உடல்மொழியின் வழியாக சொல்லிவிடுகிறார்.‘உணவு படைக்கும்போது மல்லாம்மாவிடம் மௌனமாக தன் கையை நீட்டிக் காண்பிக்கிறான்கொண்டையா. கையில் இரத்த விளாறுகளாக நகங்களால் கீய்ச்சப்பட்ட காயங்கள் .இரவில் அவள் படுத்திருந்த திசையில் அவன் கை நீண்டதற்கு அவள் கொடுத்த பதில்கள் அவை. அதைப் பார்த்தும் பார்காததுபோல அவனுக்கு நெய் வட்டிக்கிறாள். வேண்டாம் போதும் போதும் என்று அவன் கை தடுக்கிறது. அப்போது அந்த காயங்களின்மேல் சொட்டுகிறது நெய் ‘[கனிவு]



இந்த ரசனைக்கூறுதான் கிராஜநாராயணனின் கலையின் மிக முக்கியமான அம்சம் . இன்று அவரை வாசக மனதில் நிலைநிறுத்தியிருக்கும் அம்சமே இதுதான். மிக நுட்பமான புலன் பதிவுகளைக் காண்கையில் ஏற்படும் பரவசத்துக்காகவே நான் கிராஜநாராயணன். படைப்புகளை மீண்டும் மீண்டும் படிப்பது. ‘கிறிஸ்தவர்களுக்கே உண்டான ஒரு வாசனை ‘ [ஒரு காதல் கதை] ‘ பால் நிறைந்து கொண்டே வரும் பாத்திரத்தில் நுரைமீது பாலைபீய்ச்சும்போது ஏற்படும் சப்தத்தைப்போல மெல்லிய குரட்டை ஒலி ‘ [கன்னிமை]
‘ … ‘சேங்கரன்கோயில்! ‘ பஸ் கண்டக்டரின் குரல் வெங்கலத்தினால் செய்தது. அவன் முன்பு காப்பி ஹோட்டல் சர்வராக வேலைபார்க்கும்போது ‘ஒரு தோசை ஸ்பெஷலே ‘ என்று குரல்கொடுத்தால் ஏழு ஹோட்டல் சரக்குமாஸ்டர்களுக்கு கேட்கும் ‘[அவத்தொழிலாளர்] பிரம்மாண்டமான பூதம் ஒன்று இருண்ட கரும்புகையாக மாறி , அந்தப்புகை வரவரச் சின்னதாக மாறி , ஒரு சிறு குப்பிகுள் புகுந்துகொண்டு தானாகவே கார்க்கால் மூடிக் கொண்டதுபோல அவளுடைய எண்ணத்தின் விசுவரூபம் குறைந்து தற்காலிகமாக மனசினுள் ஒரு மூலையில் அட்டைபோல சுருங்கி ஒட்டிக் கொண்டது ‘[பலாபழம்] அப்பளக்கட்டை பிரித்து ஒவ்வொரு அப்பளமாக எடுப்பதுபோல புதிய ரூபாய்க் கட்டிலிருந்து ரூபாய்த்தாள்களை எடுத்தாள்[குருபூசை]

கிராஜநாராயணனின் படைப்புகளின் பார்வையில் மார்க்ஸியக் கருத்தியலின் பாதிப்பு குறிப்பிடத்தக்கது. ***கதவு***, தோழன் ரங்கசாமி, அவத்தொழிலாளர் வேட்டி போல பல கதைகளில் மார்க்ஸிய சமூகப்பார்வை நேரடியாகவே பிரச்சாரக்குரலுடன் வெளிப்படுகிறது. ‘வேலை வேலை வேலையே வாழ்க்கை ‘ போன்ற கதைகளில் அது உள்ளார்ந்த கண்ணோட்டமாக உள்ளது. பெரும்பாலான கதைகளில் மார்க்ஸிய மனிதாபிமானக் குரலே கி.ராஜநாராயணனிடம் ஓங்கி ஒலிக்கிறது எனலாம். கனிவு, கன்னிமை போன்ற அக உலகம் சார்ந்த கதைகளில் கூட அக்குரலை உள்ளே நாம் அடையாளம் காணமுடியும். கோபல்லகிராமம் உருவாகி வரும் சித்திரத்தை அளிப்பதில்

மார்க்ஸிய நோக்கு செல்வாக்கு செலுத்துகிறது. மனித உழைப்பின் சிருஷ்டிகரத்தை மார்க்ஸிய எழுத்துக்கள் எப்போதுமே முன்னிறுத்தியுள்ளன. தகழி சிவசங்கரப்பிள்ளை , யஷ்பால் , நிரஞ்சன போன்றவர்களின் படைப்புகளில் நாம் இதன் அழகிய சித்த்திரங்களக் காணலாம். ஆனாலும் கோபல்லகிராமம், விஷகன்னி [எஸ் கெ பொற்றெகாட்/ மலையாளம்] ஆகிய படைப்புகளில்தான் உழைப்பின் சிருஷ்டிகரம் கவித்துவமாக பதிவாகியுள்ளது.

நமது முற்போக்கு விமரிசகர்கள் பொதுவாக கட்சி அட்டைக்கு கொடுக்கும் அங்கீகாரத்தை அழகியலுக்கு கொடுத்தது இல்லை . நம் முற்போக்கு அழகியலின் முன்னோடி புதுமைப்பித்தன் என்றால் அதன் அடிப்படைகளை வடிவமைத்தவர்கள் சுந்தர ராமசாமியும் ஜெயகாந்தனும் ஜி நாகராஜனும் என்றால் அதன் அடுத்தகட்ட நகர்வை நிகழ்த்தியவர் கி.ராஜநாராயணன். நமது முற்போக்கு இலக்கியத்தின் அடுத்த கட்டத்தவர்களான பொன்னீலன், பூமணி , சு சமுத்திரம், மேலாண்மைபொன்னுச்சாமி முதல் இன்றைய முக்கிய முற்போக்கு அழகியல்வாதிகளான சோ.தருமன், தங்கர் பச்சான் ,இமையம், இலட்சுமணப்பெருமாள், கண்மணி குணசேகரன் வரையிலானவர்களிடம் கி.ராஜநாராயணனின் அழுத்தமான பாதிப்பு உண்டு. கதையை நவீன யதர்த்தவாதத்தின் சாத்தியங்கள் எதையும் நழுவவிடாமல் நாட்டார் மரபின் வாய்மொழிக்கூற்றுமுறைக்கு அருகே கொண்டு செல்ல முயல்தல் என இதை மதிப்பிடலாம்.
ஆயினும் கி.ராஜநாராயணனின் தனித்தன்மையை வடிவமைப்பது ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல அவரது இனக்குழுவேர்தான். அதை தனியாகவே காணவேண்டும்.

இனக்குழு அழகியலின் முதல்வடிவம்

இனக்குழு என்றபெயரை அழகியல் விவாதத்தில் பயன்படுத்தி வழிகாட்டியவர் பிரேம். சாதி என்ற பேரை சாதாரணமாக பயன்படுத்தலாம்தான், இரு தடைகள். ஒன்று அது அதிகமும் எதிர்மறையான பொருளையே இங்கு அளிக்கிறது. கி.ராஜநாராயணன் போல அடிப்படையில் முற்போக்குத்தன்மை கொண்ட ஒரு படைப்பாளியைப்பற்றி பேசும்போது அச்சொல் உசிதமற்றதாக மாறிவிடலாம். இரண்டாவதாக நம் சூழலில் சாதி என்பது உண்மையில் உள்சாதிகளாக பிரிந்து சென்ற படியே இருக்கும் ஒன்று. ஒரு நபரை ஒரு குறிப்பிட்ட சாதியினர் என்று இங்கே தோராயமாகவே அடையாளப்படுத்தமுடியும். பல சாதிகள் ஒரு பொது அடையாளத்தின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக தொகுத்துப் பார்க்கப்படுவது இங்கே இயல்பாகவே உள்ளது. மூன்றாவதாக இலக்கியக்கலைச்சொல் விரிவாக்கத்துக்கு சாத்தியம் கொண்டதாக இருக்கவேண்டும். இனக்குழு அடையாளம் என்றால் என்ன ?

அதன் இயல்புகளைகீழ்க்கண்டவாறு வகுக்கலாம் அ] அது பிறப்பு அடிப்படையில் ஒருவன் மீது உருவாகக் கூடியது ஆ] ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகம் ரத்த உறவின் அடிபடையில் சேர்ந்து நூற்றாண்டுகளாக வாழும்போது உருவாகும் வாழ்க்கைமுறையை தன் தனியியல்பாக கொண்டது இ] உட்பிரிவுகள் இருப்பினும் உட்பிரிவுகள் கொண்டுள்ள தனித்தன்மையை விட பொதுத்தன்மை அதிக வலுவாக இருக்கக் கூடியது.தமிழிலக்கியத்தில் அதற்கு முன் செயல்பட்ட முற்போக்கு எழுத்தாளர்களில் எவருமே தங்கள் இனக்குழு அடையாளத்தை படைப்புகளில் வெளிப்படையாக வைக்கவில்லை. ஜெயகாந்தன் எந்த சாதி என்று பெரும்பாலான அவர்து வாசகர்களுக்கு தெரியாது. சுந்தர ராமசாமிக்கும் ஜி நாகராஜனுக்கும் அவர்கள் சாதியடையாளம் பிறரால் ஓயாது நினைவூட்டப்படுவதன் வழியாகவே தங்கி

நிற்கிறது.நேர்மாறாக கி.ராஜநாராயணன் தன் தனித்த சாதி அடையாளத்துடன் தான் எழுத்துக்கு வந்தார் . அவரது முதல்கதையான மாயமான்[1958. சாந்தி இதழ்] அவ்வடையாளத்தை துல்லியமாக பதிவு செய்கிறது. பிற்காலக் கதைகளில் மிக விரிவாக பதிவான தெலுங்கு நாயக்கர் சாதியின் வாழ்க்கையை இக்கதையில் காண்கிறோம் ' அப்போதுதான் நாயக்கர் அவர்கள் எண்ணை ஸ்நானம் செய்துவிட்டு ,வெள்ளைவேட்டியை கட்டிக்கொண்டால் எண்ணைச் சிக்கு ஆகும் என்று ஒரு பழையகண்டாங்கி சேலையை வேஷ்டிக்குப் பதிலாக உடுத்திக் கொண்டு அந்த சேலையின் மறுகோடியையே தலையில் கட்டிக் கொண்டைபோல சுற்றிவிட்டு நெற்றிக்கு இட்டுக் கொள்ள நாமம் குழைத்துக் கொண்டிருந்தார் ' [மாயமான்] இந்தக் கதையில்கி.ராஜநாராயணனின் பிற அழகியலடிப்படைகளான ரசனை,முற்போக்கு அணுகுமுறை ஆகிய இரண்டுமே வலுவாக இடம் பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற வாய்மொழிக் கதைசொல்லிகளின் வம்சத்தை சேர்ந்தவர்தான் கி.ராஜநாராயணன். அவரது மொழியும் கூறுமுறையும் அந்த அழகியல்புகளை கொண்டிருக்கின்றன. அதை மீறிச்சென்று அவரை நவீனக் கதைசொல்லியாக ஆக்கும் அம்சங்கள் பலவும் அவரிடம் உண்டு. அவற்றை பிறகு காணலாம். நாட்டார் கதைசொல்லிகள் ஒரு சமூகத்தின் வம்சகதைப்பாடகர்களைப்போன்றவர்கள். எல்லா பழங்குடி சமூகங்களிலும் இவர்கள் இன்றியமையாதவர்கள். அவர்களே அச்சமூகத்தின் வரலாற்றை தொடர்ச்சியாக்குபவர்கள் என்றால் அது மிகையல்ல. அவர்கள் வழியாகவே அச்சமூகத்தின் மூதாதையர் வரிசை நினைவில் நிறுத்தப்படுகிறது. அவர்கள் வழியாகவே அச்சமூகத்தின் விழுமியங்கள் அடுத்த தலைமுறைக்கு கைமாறப்படுகின்றன. வாழ்க்கைமுறையின் அடிப்படைக்கூறுகள் தக்கவைத்துக் கொள்ளப்படுகின்றன.[புன்னகைக்கும் கதைசொல்லி :அ.முத்துலிங்கத்தின் படைப்புலகம் என்ற கட்டுரையில் இதை விரிவாகவே விவாதித்துள்ளேன்]

அந்த கதைசொல்லியிலிருந்து நவீன இலக்கியவாதியாக உருவெடுத்தவர் கி.ராஜநாராயணன். தமிழ் சூழலில் தன் வேர்களுடன் நேர்மையான உறவுள்ள எந்த படைப்பாளிக்கும் அவனது இனக்குழுத்தன்மையின் தனித்துவம் இருக்கும் என்றே நான் எண்ணுகிறேன். அந்த இனக்குழு அடையாளத்தை மறைக்கவோ, இல்லை என்று பாவனை செய்வது செய்வது நேர்மையான இலக்கியப்படைப்பாளியின் செயலல்ல.தன் வேர்களுடன் முற்றிலும் தொடர்பற்ற படைப்பாளி தனக்கென கலாச்சார சுயத்துவம் இல்லாதவனாகவே இருப்பான். மோதல்களற்றவனாகவும் தேடல்கள் அற்றவனாகவும் அதனாலேயே வடிவசோதனை போன்றவற்றில் மிதமிஞ்சிய நாட்டம் கொண்டவனாகவும் இருப்பான். வேர்கள் எனும்போது மொழி, நிலப்பகுதி, தேசியம், மதம் , மரபிலக்கியமும் கலைகளும் என பல கூறுகள் அதில் உள்ளன. ஆனால் நம் சூழலில் முதலிடம் பெறுவது இனக்குழு அம்சமே. ஏனெனில் நாம் பிறந்து விழுவது அதில்தான். நமது மனம் அதிலிருந்தே உருவாகி வருகிறது. நாம் கல்வி மூலம் வாசிப்பு மூலம் அரசியல்பிரக்ஞை மூலம் அதிலிருந்து எவ்வளவுதான் விலகி வந்தாலும் நம் ஆழ்மனம் அதிலிருந்தே உருவாகியுள்ளது . இலக்கியப்படைப்பை பொறுத்தவரை ஒருவனின் பிரக்ஞைக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை, அது ஆழ்மனம் மொழியை சந்திக்கும்பொருட்டு உருவாக்கப்பட்ட கலை.

மரபான இனக்குழுக் கதைசொல்லிகள் தங்கள் இனக்குழு உருவாக்கிய கருத்தியல் எல்லையை தங்கள்போதம் மூலம் மாற்றுவதில்லை, நிகழும் மாற்றங்கள் பெரும்பாலும் தன்னிச்சையானவை. வாழ்க்கையின் இன்றியமையாத அலைகள்மூலம் அச்சமூகம் அடைந்த மாற்றங்களை அக்கதைசொல்லிகள் பிரதிபலிக்கிறார்கள். அதாவது

இனக்குழுக்கதைசொல்லியின் பிரக்ஞை கவன் இனக்குழுவை சரியாக பிரதிபலிக்குமளவுக்கு அதனுடன் சமானமாக ஓடுகிறது. நவீனப்படைப்பாளியின் பிரக்ஞை அச்சமூகத்துக்கு முன்னால்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆக இனக்குழுவேர் கொண்ட நவீனப்படைப்பாளியை அவனது இனக்குழுப் பிரக்ஞைக்கும் நவீன காலகட்டத்திற்குரிய கருத்தியல்களுக்கும் நடுவேயுள்ளவனாக நாம் ஊகிக்கலாம். அவன் எப்போதுமே ஒரு பயணத்தில் ஒரு போராட்டத்தில் இருகிறான் .சர்வ சாதாரணமாக அவனால் புதுமைகளை ஏற்றுக் கொள்ள முடியாது, பழைமையில் ஊறிக்கிடப்பதும் சாத்தியமில்லை. இந்தப்போராட்டமே அவனது கலையின் முக்கியமான முரணியக்கமாகும். இதை அவனது பிரக்ஞைக்கும் நனவிலிக்கும் இடையேயான போராட்டம் என்று சொல்லலாம். அவன் முன்னிலைப்படுத்தும் சமூகத்துக்கும் அவனுக்கும் இடையேயான போராட்டமாக உருவகிக்கலாம். அவனது கலையின் தன்னிச்சையான கூறுகளுக்கும் அவனது வடிவ உணர்வுக்கும் இடையேயான மோதலாகவும் காணலாம்.

இத்தகைய இயல்பான முரணியக்கம் இல்லாத படைப்பாளிகள் இல்லை. இன்று மேலைநாடுகளில் பெரும் படைப்பாளிகளுக்குள் உள்ள இந்த இனக்குழுத்தன்மையை தொண்டி எடுத்து ஒற்றைப்படையாக வெட்டி முன்வைத்து அவர்களை முன்முடிவுகளும் மனக்குறுகல்களும் கொண்டவர்களாக சித்தரித்துக் காட்டும் போக்கு ஒன்று உள்ளது. ஷேக்ஸ்பியர் முதல் டி எஸ் எலியட் வரை அதற்குத் தப்பவில்லை. ஆனால் அதற்கு பெரிய இலக்கிய முக்கியத்துவம் அங்கு உருவாகவில்லை என்பதே என் எண்ணம். நம் சூழலில் இலக்கியப் படைப்பாளிகளுக்கும் தெருமுனைக் கூட்டங்களில் கோஷமிடுபவர்களுக்கும் இடையே வேறுபாடு தெரியாதவர்களின் ஓயாத ‘பிளாக் மெயிலுக்கு ‘ ஆளாகியபடித்தான் தமிழ் எழுத்தாளன் செயல்பட வேண்டியுள்ளது . இலக்கிய ஆக்கத்தின் சிக்கலான முரணியக்கநிலைகளை சற்றும் அறியாத அரசியல்வாதிகள் இலக்கியவிமரிசனம் என்றபேரில் நிகழ்த்தும் முத்திரைகுத்தல்கள் இலக்கிய ஆக்கத்தின் அடிப்படைகளுக்கே ஆபத்தாக மாறிவிட்டிருக்கின்றன. சென்றகாலங்களில் மதவாதிகளும் ஒழுக்கவாதிகளும் உருவாக்கிய கெடுபிடிகளுக்கு சற்றும் குறைந்ததல்ல இது. இலக்கிய ஆக்கத்துக்கு முற்போக்கு அல்லது மனிதாபிமானம் அல்லது ஒழுக்கம் அல்லது அழகு கூட ஒரு நிபந்தனையாக ஆகமுடியாது. படைப்பு என்பது இலக்கியவாதியின் ஆழ்மனம் . ஆகவே அது அச்சமூகத்தின் பொதுஆழ்மனமும் கூட. தீவிரமான இலக்கியப்படைப்பாளி இக்கூச்சல்களை முற்றிலும் உதாசீனம் செய்து தன் அந்தரங்கத்தை மொழியால் அளப்பதில் மட்டுமே குறியாக இருப்பான்.

ஒரு படைப்பாளியின் இனக்குழுத்தன்மையை அவன் படைப்புகளைவைத்து மதிப்பிடுவதே இயல்பானது .அவன் படைப்புக்ளில் வெளிப்படும் இனக்குழுத் தன்னிலை என்ன என்பதற்கு அப்படைப்பு சில சமயம் நேரடியான பதிலை அளிக்கலாம், சிலசமயம் உள்ளடங்கிய பதிலை. புதுமைப்பித்தன், தி.ஜானகிராமன் , லா.ச. ராமாமிருதம் ஆகியோரின் படைப்புகளின் அவ்வடையாளம் தெளிவாக உள்ளது. ப.சிங்காரத்தின் படைப்பில் படைப்பின் உள்வலிமையாக ஆனால் பூடகமாக உள்ளது. புதுமைப்பித்தன் தன்னை எப்படி அடையாளப்படுத்திக் கொள்கிறார் ? அவரது அடையாளங்களை குறைந்தபட்ச அலகின் அடிப்படையில் வகுக்கலாம். வேளாளர், சைவர், திருநெல்வேலிக்காரர், தமிழர் , இந்து – என. வேளாள அடையாளம் அவரது படைப்பின் சூழல் சித்தரிப்பு மற்றும் கதாபாத்திரங்களுக்கு தெளிவாக இருப்பதனால் அதை நாம் இனம் கண்டுகொள்ள முடிகிறது. அந்த வேளாளசைவ அம்சம் இல்லையேல் புதுமைப்பித்தனின் படைப்புகள் எந்த அளவுக்கு வெளிறி நிறமிழந்திருக்கும் என்று யோசிக்கலாம். அவரது கதாபாத்திரங்கள் வெற்று முகங்கள் ஆகியிருக்கும். மொழி தட்டையானதாக ஆகியிருக்கும். அதைவிட முக்கியமாக அவரது படைப்புகளின்

முக்கியமான படிமவெளி இல்லாமலாகியிருக்கும். கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், கபாடபுரம், கயிற்றரவு, சிற்பியின் நரகம் போன்ற சாதனைப்படைப்புகள் உருவாகியிருக்காது.

ஆனால் இந்த இனக்குழு அடையளத்தை 'சார்ந்து ' செயல்பட்டவரல்ல புதுமைப்பித்தன். அதிலிருந்து மேலைநவீனத்துவ அழகியல் மற்றும் பொருள்முதல்வாத தத்துவநிலைப்பாடு ஆகியவற்றை நோக்கி நகரும் துடிப்பே அவரில் இருந்தது. தென்னாடுடைய சிவன் அவரிடமிருந்து விடைபெறவில்லை, அவரது புனைவுப்பரப்பில் தோன்றி மேலைநாத்திகக் குரலை பிரதிபலிக்கிறார்.புதுமைப்பித்தனின் இந்த போராட்டமே அவரது படைப்பியக்கத்தின் செயல்வலிமைக்கு காரணம். சிற்பியின் நரகம் பேசும் கலைச்சிக்கல் உண்மையில் புதுமைப்பித்தனின் குரலே. தன் இனக்குழு அடையாளத்துக்கு உள்ளே வாழக்கூடிய ஒருவர் ஒருபோதும் ' நாசக்கார கும்பல் ' , ' துன்பக்கேணி ' போன்ற கதைகளை உருவாக்க முடியாது. இலக்கியப்படைப்பாளி இனக்குழுத்தன்மையால் உருவாக்கப்பட்டவன், அதிலிருந்து மீறிச்செல்லும் தேடல் கொண்டவன்.

கி.ராஜநாராயணன் துவங்குவது அவரது இனக்குழு அடையாள்த்தில் இருந்தே. தெலுங்கு நாயக்கர்களின் சமூக, வரலாற்று, அன்றாட வாழ்க்கைப் பின்புலம் அவரது ஆக்கங்களில் தீவிரமாக வெளிப்படுகிறது. அவரது கதைக்கருக்கள் பல அச்சமூகத்தின் தொன்மங்களில் இருந்து உருவானவை. ஆனால் தன் நாற்பதுவயதுக்குமேல் மார்க்ஸிய அரசியலில் ஆர்வம் கொண்டபிறகுதான் எழுத ஆரம்பித்தார் என்ற செய்தி நம் முன் உள்ளது. அதாவது அதுவரை இனக்குழு மனநிலை அவரில் நேரியக்கமாகவே இருந்தது . மார்க்ஸிய அரசியல் கருத்துக்களும் சமூக ஆய்வுக் கோட்பாடுகளுமே எதிரியக்கமாக அமைந்தன. இவை இரண்டும் உருவாக்கும் முரணியக்கமே அவரது இலக்கியம். அவரது முதல்கதையான ' மாயமான் ' இவ்விரு இழைகளும் கலந்து உருவானது . அதன் தலைப்பையே நாம் ஒரு குறியீட்டு ஆய்வுக்காக பயன்படுத்தலாம். சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியாவில் முதலாளித்துவ அமைப்பு குறித்தும் அதன் இலட்சியவாதங்கள் குறித்தும் உருவாகி வந்த ஆழமான அவநம்பிக்கையை இக்கதை சொல்கிறது. 'சோஷலிச ' அரசாங்கம் அளிக்கும் உதவிகள் நடைமுறையில் மோசடிகளாக ஆவதைப்பற்றிய கதை இது. அதற்கு அவரது 'வைணவ ' கரிசல் மண்ணில் வேரூன்றிய ராமாயணத்திலிருந்து படிமத்தை எடுத்துக் கொள்கிறார்.

தன் கதைகள் முழுக்க கி.ராஜநாராயணன் மார்க்ஸிய அழகியலை 'கரிசல்படுத்த ' முயன்றார் . மார்க்ஸிய அழகியலின் முக்கியமான குறை அது கோட்பாட்டுக்கு உதாரணமாகத்தான் வாழ்கையைக் காண்கிறது என்பதே. இந்தியச்சூழலில் 'சப்பையான ' மார்க்ஸியர்களில் கோட்பாட்டிலிருந்து துவங்கும் தன்மையைக் காண்கிறோம். உதாரணம் டி.செல்வராஜ், மேலாண்மை பொன்னுச்சாமி போன்றவர்கள். சிறந்த எழுத்தாளர்களில் வாழ்க்கையிலிருந்து துவங்கி கோட்பாட்டை எட்ட முயலும் தன்மையைக் காணலாம். உதாரணம் தகழி சிவசங்கரப் பிள்ளை. கி.ராஜநாராயணன் இரண்டாம் வகைக்கு இந்திய முற்போக்கு இலக்கிய வரலாற்றிலேயே முக்கியமான முன்னுதாரணம். இப்படி வாழ்விலிருந்து தொடங்கி கோட்பாட்டுக்கு வரும்போது பொதுவாக 'கச்சிதமாக ' கோட்பாட்டுக்கு வந்துவிட முடிவது இல்லை . குறி கொஞ்சம் தவறிவிடுகிறது . அப்போது தி.க.சிவசங்கரனைப்போனற 'அட்டை பரிசோதகர்கள் ' இதனால் குழம்பிப்போய் இவர்களை வாசலிலேயே நிற்கச்செய்துவிடுகிறார்கள். தகழி இப்படி 'விசாரணைக்கு ' உட்படுத்தப்பட்டதுண்டு, ஆனால் அங்கே ஜோசப் முண்டசேரி போல அழகியல் அறிந்த மார்க்ஸிய விமரிச்கர்கள் இருந்தனர். இங்கே தி.க.சிக்கள்.

இப்படி கி.ராஜநாராயணன் மார்க்ஸிய அழகியலுடன் முரண்படும் அம்சம் இனக்குழுத்தன்மையே என சொல்லவேண்டியதில்லை. மார்க்ஸியக் கோட்பாடு ‘உலகு தழுவிய ‘ மானுடம் பற்றிய கனவை முன்வைப்பது. மனிதனை அவனது ஒட்டுமொத்தம் சார்ந்து பேசமுற்படுவது, அந்த ஒட்டுமொத்தத்தின் அடிப்படையாக அவனை ‘ உற்பத்தி அலகு ‘ மட்டுமாக சுருக்கும் தன்மை கொண்டது. அவனது கலாச்சாரத்தின் ஒட்டுமொத்தத்தை பொருளாதார அமைப்பின் மேற்கட்டுமானம் மட்டுமாக பார்ப்பது. மார்க்ஸியம் மனிதவரலாறு கண்ட மாபெரும் குறுக்கல்வாதம், மகத்தான குறுக்கல்வாதமும் கூட ! மனிதனின் கலாச்சாரத்தை அவனது உள்ளுணர்வுகளின் ஒட்டுமொத்தமாக, அவனது மனதை அதன் ஒரு துளியாகப் பார்க்கும் பார்வையையே இலக்கிய அழகியல் முன்வைக்கிறது. மார்க்ஸிய அழகியல் என்பது இவ்விரு நோக்குகளுக்கும் இடையேயான முரணியக்கம் அல்லது சமரசத்தின் விளைவு.கி.ராஜநாராயணனின் கோணம் முதலில் அவனை அவன் சார்ந்துள்ள இனக்குழு கலாச்சாரத்தின் ஓர் அலகாக பார்க்கிறது. அங்கிருந்து தொடங்கி உற்பத்தியை அடித்தளமாக கொண்ட பொருளியல் /சமூக/ அரசியல் அமைப்பின் அடிப்படை அலகாகப் பார்க்க முயல்கிறது.

இந்த விவாதத்தில் இனக்குழுப்பார்வை மிக வெளிப்படையாக, கொச்சையாக என்றும் சொல்லலாம், வெளிப்படும் இடத்திலிருந்து நாம் தொடங்குவது உசிதமானது . ‘ஒரு காதல் கதை ‘ கி.ராஜநாராயணன் கதைகளில் அதிகமும் பேசப்படாத ஒன்று. வேறு சாதியைச்சேர்ந்த கிறித்தவப்பெண் ராணிமேரியை காதலித்து மணந்துகொண்ட ராகவனின் கதை இது. அவர்களுடைய காதல் குறையவில்லை, ஆனால் உணவு உடை பழக்கவழக்கம் எதிலுமே அவர்களால் ஒத்துப்போக முடியவில்லை. அவர்கள் அழுதபடியே பிரிகிறார்கள். இதற்கு மாற்றாக ராகவனின் நண்பனான கதைசொல்லி தன் சாதியைசேர்ந்த தனக்கு இளமையிலேயே அறிமுகமான லட்சுமியை மணம்ச் செய்துகொண்டு மிக நிறைவாக வாழ்கிறான். இவ்விரு எதிரீடுகளும் கதையில் மிக அழுத்தமாக சொல்லியிருக்கிறார். ராகவன் மேரியை பிரிந்து மீண்டும் தாய்மதம் திரும்பி தன் சாதி /மதத்துப் பெண்ணை மணந்துகொள்கிறான். இச்செய்தியைக்கேட்டதும் லட்சுமி ‘எனக்குத்தெரியும் இப்படித்தான் ஆகும் என ‘ என்கிறாள்.

இக்கதை ஒரு நிதரிசனப்பார்வையின் விளைவு என்பதில் ஐயமில்லை . நானறிந்த எத்தனையோ உதாரணங்களை இதற்கு ஆதரவாக அடுக்கலாம். ஆனால் கி.ராஜநாராயணன் இந்த நிதரிசனத்திலிருந்தே கதையை உருவாக்கி விட்டிருக்கிறார். காதல் மணம் ஏற்றதல்ல ,இனக்குழு உள்மணமே சிறப்பானது என்று இக்கதை சொல்கிறது. ஏன் ? ஒரு மனிதன் தன் இனக்குழுவின் அடிப்படை உறுப்பினன் என்பதனால். அவனது இருப்பின் முக்கிய அம்சங்களையெல்லாமே அது தீர்மானிக்கிறது என்பதனால் என்கிறது கதை. ஆனால் இது உண்மையா ? கரணிய ஆய்வு இதை ஏற்குமா ? என் பார்வையை சொல்கிறேன். திருமணம் என்பது ஒரு மரபுசார் அமைப்பு. சாதி இன்னொரு மரபு சார் அமைப்பு. ஆகவே மரபான மணமுறை அதில் இயல்பாக அதிகப்பொருத்தமாக இருக்கிறது. அந்த முறையில் மணம் முடிக்கும் இருவரை மரபின் எல்லா அம்சங்களும் சேர்த்து பிடித்துள்ளன. ஒரே வாழ்க்கைமுறை, பொதுவான உறவுகள் முதலியன. அப்படி இருந்தும் பெரும்பாலான மரபுமண உறவுகள் மரபுகாரணமாகவே நீடிக்கின்றன, அன்பினால் அல்ல. காதல் மணம் காதலினால் மட்டுமே நிலைநிறுத்தப்படவேண்டும் .காதல் ஒரு இலட்சிய உணர்வு, மணமோ லௌகீக அமைப்பு. காதலின் வேகம் சாதாரணமாக சில வருடங்களில் இற்றுப்போய் மண உறவை நீடிக்க வற்புறுத்தும் மரபுக்கட்டாயங்கள் இல்லாத நிலையில் மணஉறவு சிக்கலில் மாட்டுகிறது.

சரி, இது எப்படியானாலும் கி ராஜநாராயணன் சொல்வதுபோல பிரச்சினை அப்படி எளிதல்ல. எல்லா மணமுறைகளிலும் மிக வெற்றிகரமான உறவுகள், மிக தோல்வியான உறவுகள் உள்ளன. இனக்குழுக்களுக்கிடையேயான உறவுகளில் உள்ள மிக எதிர்மறையான அம்சங்களை பட்டியலிட்டு போகலாம். ஒன்று சடங்குகளின் அழுத்தம். 'சுருள் ' வைப்பதன் விளைவான பிரச்சினைகளுக்காகவே பிரிந்த குடும்பங்கள் உண்டு. இன்னொன்று உறவுகளில் ஏற்கனவே உருவாகி வந்துள்ள கோபங்களும் வருத்தங்களும் தனிப்பட்ட உறவுகளையும் கடுமையாக பாதிக்கிறது. இன்றைய சூழலில் இனக்குழு உள்மணத்தைப்பற்றி சற்று ஐயத்துடன்தான் யோசிக்கவேண்டியுள்ளது. கி.ராஜநாராயணனுக்கு இந்த பிரச்சினையே எழவில்லை. அவர் பார்வையில் இனக்குழுமணம் தான் இலட்சியமணம். இந்தக் கருத்து அவர் சார்ந்துள்ள மார்க்ஸிய கோட்பாட்டுக்கு எதிராக இருப்பதை அவர் பொருட்படுத்தவில்லை இக்கதையில்.இனக்குழு மனநிலையை மார்க்ஸிய அணுகுமுறை மறுத்து மேலெழும் நேர்மாறான சித்திரம் 'கறிவேப்பிலைகள் ' என்றகதையில் உள்ளது .பப்புத்தாத்தாவும் பாட்டியும் ஓர் இனக்குழுச் சமூகத்தில்தான் வாழ்கிறார்கள். அதன் எல்லைகளை அவர்கள் எப்போதுமே மீறவில்லை.ஆனால் அவர்கள் அச்சமூகத்தில் ஓர் உறுப்பினர்களாக , இனக்குழுவின் அலகுகளாக, கருதப்படவில்லை . மாறாக உற்பத்தி அலகுகளாக மட்டுமே கருதப்பட்டார்கள். உற்பத்திக்கு முடியாதபோது தூக்கிவீசப்பட்டார்கள் . அவர்களுக்கு உதவ எந்த இனக்குழு உணர்வும், அமைப்பும் முன்வரவில்லை . இது முழுக்க மார்க்ஸிய அணுகுமுறை .கி. ராஜநாராயணனின் கதைகள் இவ்விரு எல்லைகளுக்கு நடுவே இயங்குகின்றன.

படைப்பில் இனக்குழு வேர் எந்த அளவுக்கு சாதக விளைவுகளை உருவாக்குகிறது ? எழுத்தாளன் தன் மரபின் மீது ஆழமான விமரிசன உறவு கொண்டிருக்கவேண்டும் என்பது என் எண்ணம். அவ்வுறவு முதல் தளத்தில் ஆழ்மனம் சார்ந்த தன்னிச்சையான உறவாக இருக்கும். அடுத்த தளத்தில் அது மரபை தர்க்கபூர்வமாக ஆராயும் பிரக்ஞையாகவும் இருக்கும். மரபின்மீதான ஆழ்மனம் சார்ந்த உறவு இனக்குழு அடிப்படையிலேயே நிகழ முடியும். காரணம் நாம் பிறந்து வளர்வது இனக்குழு அடிப்படை கொண்ட சமூகத்தில். இதன் மூலம் உருவாகும் ஆழ்மனத்தொடர்புதான் எழுத்தாளனை தான் வாழும் சமூகத்தின் பிரதிநிதியாக ஆக்குகிறது .எந்த எழுத்தாளனும் 'தன் குரலை ' மட்டும் ஒலிப்பதில்லை. அப்படி ஒலித்தால் அதற்கு மதிப்பும் இல்லை. எழுத்தாளன் ஒலிப்பது அவன் வாழ்ந்த சமூகத்தின் ,காலகட்டத்தின் குரலையே. அக்குரலைத்தான் தன்குரலாக வாசகன் அடையாளம் கண்டுகொள்கிறான்.எந்த இடத்தில் ஓர் எழுத்தாளனும் அவனது வாசகனும் ஒருவர்போல ஆகும்படி ஒருவரையொருவர் கண்டடைகிறார்கள் ?

இரு தளங்களில்:

. ஒன்று சமகால வாழ்க்கையின் பொதுவான கூறுகள் .இரு தனிமனிதர்களாக எழுத்தாளனும் வாசகனும் அடைவது வேறுவேறு அனுபவங்களையே எனினும் அனுபவங்களின் புறச்சூழல் ஒன்றே என சொல்லலாம். ஆனால் இது படைப்பின் மேலோட்டமான தளமே. ஆழமான தளம் எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் பொதுவான ஆழ்மனத்தளம். ஆழ்மனம் படிமங்களால் ஆனது. படிமங்கள் மரபிலிருந்து உருவானவை. மரபு நுண்ணலகுகளில் இனக்குழுத்தன்மை கொண்டது.ஆகவே ஒரு படைப்பாளில் ஆழ்ந்து தன்னுள்ளே செல்லும்போது முதலில் கண்டடைவது அவனது இனக்குழு அடையாளத்தைத்தான் , அல்லது அதன் மூலம் உருவான ஆழ்மனப்படிமங்களை. அடுத்த கட்டத்தில்தான் அவன் மானுடகுலம் முழுக்க தழுவியுள்ள பொது ஆழ்மனதின் தளங்களை அடைய முடியும் [இச்சொற்களை

உருவகங்களாகவே இங்கு பயன்படுத்துகிறேன். பொதுவாக உளவியல், தத்துவம் , வரலாறு போன்ற மாற்று துறைக் கலைச்சொற்கள் இலக்கியத்தில் கலைச்சொற்களாகும்போது இலக்கியம் சார்ந்த ஒரு மாறுதலுக்கு உள்ளாகின்றன. அவற்றின் கச்சிதமான வரையறை இல்லாமலாகி ஒரு அகவயத்தன்மை உருவாகிறது.அவை உருவகங்களாக மாறுகின்றன]

கி.ராஜநாராயணனின் படைப்புலகில்பினக்குழு மரபிலிருந்து பெறப்பட்ட வலிமையான படிமங்கள் செயல்படுவதைக் காணலாம். நேரடியாக மரபின் படிமங்களை அல்லது நம்பிக்கைகளை கலைக்குறியீடுகளாக பயன்படுத்திய கதைகள் என 'பலாப்பழம் ' , 'ஜடாயு ' 'கனா ' போன்ற பல கதைகளை சொல்லலாம். கி.ராஜநாராயணனின் மிகச்சிறந்த கதைகள் பெரும்பாலும் எல்லாமே இந்த வகையைச்சேர்ந்த்வைதான்.

'***கன்னிமை***' ' பேதை ' , 'நிலைநிறுத்தல் ' , 'கனிவு ' போன்றவை உதாரணம். கி.ராஜநாராயணனின் கதைகளிலேயே சிறந்தது என்று நான் கருதும் கதை பேதைதான். ஒரு கோட்டிக்காரியின் உள்ளே இயல்பாக எழும் தாய்மையுணர்வை சொல்லக்கூடிய கதைதான் இது. இயற்கையின் ஆதாரவிதியை நமது அன்றாடவாழ்வின் எந்திரத்தனத்துக்குள் சுட்டிக்காட்டும் கதைகளை நாம் எப்போதுமே நவீன இலக்கியத்துக்குள் காணலாம். ஆனால் பேதையை வலுவாக்குவது அதில் செயல்படும் மரபார்ந்த கூறுகள் .

கதையின் துவக்கத்தில் கோட்டிக்காரியான பேச்சி ஒரு கனவுகாண்கிறாள். அதை அவள் பார்வதி அம்மன் கோவிலுக்கு முன் இருந்த வேப்பமர நிழலில் படுத்துக் காண்கிறாள். அவளது மூடிய இமைகள்மீது இலைநிழல் ஆடி நிலவொளி அசைய கனவுக்குள் ஒரு குழந்தை கதைவை திறந்து மூடி எட்டிப்பார்த்து விளையாடுகிறது. தமிழிலக்கியத்தின் சிறந்த படிமங்களில் ஒன்று இது. பேச்சி மீது நம் மரபின் 'சுடலைச் சாமுண்டி ' போன்ற உக்கிரமான பெண்தெய்வங்களின் அழுத்தமான சாயலை தேர்ந்த புனைவின்மூலம் ஏற்றிவிடுகிறார் கி.ராஜநாராயணன். பேச்சி சுடுகாட்டுக்குச் சென்று பிணம் தின்னும் இடம் உதாரணம். ' உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவர்களை திடுக்குற்று விழிக்கச்செய்யும் ஒரு துர்நாற்றம் அந்தக் கிராமவாசிகளை உலுப்பி எழுப்பியது. யாரும் எப்பவும் அப்படி ஒரு நாற்றத்தை அனுபவித்ததில்லை. அதேநேரத்தில் உடம்பு புல்லரிக்கும்படியான ஒரு குலவைச்சத்தமும் கேட்டது.அதைக்கேட்டவர்களின் உடலிலுள்ள சர்வாங்க மயிர்களும் நட்டக்குத்தலாக நின்றது.. ' என்ற வரிகள் தீவிரமான பௌராணிகப்புனைவுத்தன்மையை காட்டுகின்றன.

'நிலைநிறுத்தல் ' , 'கனிவு ' போன்ற கதைகளை கி.ராஜநாராயணனின் இனக்குழுப்பின்னணி இல்லமால் அவர் அடைந்திருக்க முடியுமா என்று நாம் யோசிக்கலாம். நிலைநிறுத்தல் கதையில் மாசாணம் மழைக்காக 'வயணம் ' காக்கும் சடங்கும் சரி, 'கனிவு ' கதையில் தம்பதிகளை இயல்பாக இணையவிடும் அச்சாதியின் பழக்கமும் சரி கதைக்கே அடிப்படையாக அமைகின்றன. இக்கதைகளின் 'மண்ணில் முளைத்த ' தன்மைதான் இவற்றின் அழகியல் அடிப்படையையே நிறுவுகிறது.

கி.ராஜநாராயணனின் கதைகளை படிப்பவர்களுக்கு எழும் முக்கியமான ஐயம் ஒன்று உண்டு. அதாவது அவரது கதைகளில் உள்ள கிராமம் அவரால் 'காட்டப்படுகிறது ' என்பதுதான் அது . ஒரு கிராமவாசி நம்மிடம் பேசும்போது இயல்பாகவே அவனது கிராமத்தனம் அதில் வெளிப்படுகிறது. வெளியூர் ஆள் ஒருவன் அக்கிராமத்துக்குச்சென்று பெற்ற மனப்பதிவுகளை சொல்லும்போது கிராமம் அவனது கண்ணோட்டத்தில் உருவாக்கிக் காட்டப் படுகிறது .கி.ராஜநாராயணனின் எழுத்து இரண்டாம் வகையானது. அவர் கிராமத்தைப்பற்றி வக்கணையாக சொல்கிறார் . ' '

தாத்தைய நாயக்கரை கிராமத்து ஜனங்கள் அப்புராணி நாயக்கர் என்றுதான் சொல்லுவார்கள் ' என்று துவங்குகிறது ஜடாயு கதை. 'அவர் ஒரு விவசாயி தான் உண்டு தன் பாடு உண்டு என்றுதான் இருப்பார்.விவசாயத்தில் அவ்வளவு 'கருக்கடை ' எதிலேயும் ஒரு ஒழுங்கு முகத்தில் கோபம் வந்து ஒருவரும் பார்த்தது இல்லை. ' என்று கதை நீள்கிறது. கிராமத்து ஜனங்கள் என்ற சொல்லாட்சி கவனத்துக்கு உரியது. இதை நாம் ஆர்.ஷண்முக சுந்தரத்தின் கிராமச்சித்தரிப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அவை இயல்பானவை, விலகலே இல்லாதவை. ஆகவே முரணியக்கமே இல்லாத எளிய சித்தரிப்புகள்.

இந்த 'விலகி நின்று பார்க்கும் ' கோணம் கி.ராஜநாராயணனின் படைப்புகளில் இயல்பாக ஆரம்பம் முதலே உள்ளது என்பதற்கு 'மாயமான்' கதையே சான்று. பிற்பாடு குமுதம் போன்ற இதழ்களில் எழுத துவங்கியபோது இதை அவ்வாசகர்களுக்காக விரிவு செய்துகொண்டார். இடைச்செவலின் கதைசொல்லி பயணவழிகாட்டியாக ஆனது இப்படித்தான். ஒரு கலைஞனாக கி ராஜநாராயணனின் சரிவு இங்கிருந்தே தொடங்கியது. அவரது பிற்கால எழுத்தில் பயணவழிகாட்டியின் மேலோட்டமான வேடிக்கையும் வித்தாரமும் மேலோங்கியது. இன்றைய வாசகர்களில் இளைஞர்கள் பலர் கி.ராஜநாராயணனின் எழுத்துக்களை இந்தக் கோணத்திலேயே அறிமுகம் செய்துகொண்டு அதனடிப்படையிலேயே அவரை மதிப்பிட்டிருக்கிறார்கள் என்பது துரதிருஷ்டவசமானது. என் சொந்த அனுபவத்தை வைத்து சொல்லவேண்டுமானால் நானும் அப்படியே கி.ராஜநாராயணனின் படைப்புகளை மதிப்பிட்டேன் . பிறகு மிகுந்த கவனத்துடன் வேடிக்கைசொல்லி கி.ராஜநாராயணனின் பிம்பத்தை அழித்து கதைசொல்லி கி.ராஜநாராயணனின் பிம்பத்தை எனக்குள் உருவாக்கிக் கொண்டேன். அதற்கு கி.ராஜநாராயணனின் எழுத்துக்கள் குறித்த நண்பர் பிரேமின் எழுத்துக்கள் எனக்கு உதவின.

கி.ராஜநாராயணன் தன் கிராமத்திலும் இனக்குழுப்பின்னணியிலும் தன்னை இழந்து ஈடுபடுவதில்லை . அவர் அன்னியராகவே அங்கே நிற்கிறார் . ஆகவே வேடிக்கை பார்க்கிறார் .[கதைசொல்லிகள் அனைவரிலுமே ஓரளவாவது வேடிக்கைபார்க்கும் விலகிய கோணம் இருக்கிறது] கி.ராஜநாராயணனின் விலகல் எப்படி வந்தது ? ஏற்கனவே சொன்னதுபோல தன் இனக்குழுவரலாற்றை சொல்லவந்த கதைசொல்லி அல்ல அவர். மார்க்ஸிய கருத்தியலின் ஆதிக்கத்துக்கு வந்த பிறகு அதன் விளைவாக தன் இனக்குழுப்பின்புலம் குறித்த புதிய புரிதலை முன்வைக்க எழுத தொடங்கியவர். அவரது முதல் கதையே மார்க்ஸியக் கருத்தியலின் கோணத்தை கொண்டு இனக்குழுவாழ்வை ஆராய்வதுதான். ஆக விலகிய பிறகே கி.ராஜநாராயணன் எழுத ஆரம்பித்தார். விலகலே அவரை எழுத வைத்தது. அவரது கலையின் ஆதாரமே அதுதான். இங்கே கிராமம் சார்ந்து , இனக்குழு அடையாளம் சார்ந்து எழுத முற்பட்ட பலரிடம் இவ்விலகல் உள்ளது. ஏனெனில் அந்த கிராம/இனக்குழுப் பின்னணியிலிருந்து அவர்கள் வெளிவந்தபோதுதான் எழுதும் தூண்டுதலையே பெற்றார்கள். நம் சூழலில் கல்விபெற்ற ஒருவர் இயல்பாகவே கிராம/ இனக்குழுப் பின்னணிக்கு அன்னியமாகிவிடுகிறார். அந்த அன்னியமாதலே அவருக்கு விமரிசனத்தையும் , சித்தரிப்பதற்கான தூரத்தையும் அளிக்கிறது.நமது தலித் எழுத்தாளர்கள் ஏதோ ஒரு வழியில் தங்கள் தலித் தன்மையை இழந்த பிறகே எழுதவருகிறார்கள் என்பதும் இதனாலேயே. சிறந்த உதாரணம் பூமணி , கோணங்கி போன்றவர்கள்.[பூமணியின் விலகல் உணர்ச்சியற்ற அணுகுமுறையை உருவாக்கியது, கோணங்கியின் விலகல் கற்பனாவாத நெகிழ்வை]

கி.ராஜநாராயணனின் கலையில் உள்ள 'ரசனை ' அம்சமும் இவ்விலகலை உருவாக்கியதென்று படுகிறது. கி.ராஜநாராயணனின் கம்மங்கூழ் தினசரி உணவாக சாதாரணமாக உண்ணப்படுவதில்லை. அபூர்வமான அனுபவமாக ரசித்து உண்ணப்படுகிறது. அவரது ஆரம்பகாலக் கதைகளில் இயல்பாக வெளிப்படும் விலகல் கொண்ட , வக்கணையான சித்தரிப்பை அவரது கதைசொல்லித்தனத்தின் குணாதிசயமென்றும் பிற்கால கதைகளிலும் குறிப்புகளிலும் வெளிப்படும் அரட்டைத்தன்மையை அந்த குணத்தின் வணிகவடிவம் என்றும் மதிப்பிடுகிறேன்.கு.அழகிரிசாமியும் கி.ராஜநாராயணனும் இடைசெவல்காரர்கள், சமகாலத்தவர்கள். அவர்கள் இருவரின் படைப்புகளில் இடைச்செவல் எப்படி வேறுபட்டு வெளிப்படுகிறது என்று பார்ப்பது ஒரு நல்ல ஆய்வாக அமையும். அதை பிறகு செய்வதாக உள்ளேன்— அனேகமாக கு.அழகிரிசாமி கதைகள் மீதான ஆய்வில். கி.ராஜநாராயணனின் கதைகளில் இனக்குழு அடையாளம் மீதான ஈடுபாடும் விலகலும் சேர்ந்து உருவாக்கிய சித்திரங்களையே நாம் காண்கிறோம்.

கி.ராஜநாராயணனின் மொழி

கி.ராஜநாராயணன் ஒரு ' கதைசொல்லி ' [கதைசொல்லி X கதையெழுத்தாளன் என்ற வேறுபாட்டை 'புன்னகைக்கும் கதைசொல்லி:அ.முத்துலிங்கத்தின் படைப்புலகம் ' என்ற கட்டுரையில் காண்க] வாய்மொழிக்கதையே இலக்கியத்தின் அடிப்படை என்று மட்டுமல்ல, பிற்காலத்தில் இலக்கியத்தின் ஒரே வடிவமும் அதுதான் என்றுகூட சொல்லியிருக்கிறார். வாய்மொழிக்கதை சொல்லல் மீதான அவரது பிடிப்பு இயல்பானது. அவரது இனக்குழுத்தன்மையை சிறப்பாக வெளிப்படுத்த அவர் அதை சார்ந்தே ஆகவேண்டும். அழகியல் ரீதியாக ஒரு கதைசொல்லியாகவும் அவருக்கு அம்மரபின் கூறுகள் இன்றியமமையாதவை. ஆனால் அவர் எழுத முன்வந்தபோது அவரது மொழிநடையில் மேலோங்கியிருந்தது எழுத்துமொழியின் கூறுகள்தான். 'மாயமான் ' கதையின் நடை சரளமான இதழியல் எழுத்துநடைதான். அதன் முன்னோடிகள் என்று தீவிர இலக்கியத்தில் கல்கி வழியினரைத்தான் சொல்லவேண்டும். ஆனால் கி.ராஜநாராயணனின் எழுத்தின் ஆரம்பகாலத்தில் அவர் மீது ஆழமான பாதிப்பைச் செலுத்தியவர் கு.அழகிரிசாமி என்று படுகிறது. இருவர் நடையும் துவக்கத்தில் பிரித்தறியவே முடியாதபடி உள்ளன.

ஆனால் அப்போதே வாய்மொழிமரபின் கூறுகளை தன் நடையின் அடிப்படை அம்சமாகக்கொண்டிருந்தார் கி.ராஜநாராயணன். 'ராமசாமிக்கு நாலைந்து பெயர்கள் உண்டு . நெட்டைக்கொக்கு ராமசாமி, வளந்த பனை ராமசாமி, பீச்சாங்கை ராமசாமி, இன்னும் சுருக்கமாக ஒட்டகம் ஏணி மண்டு ...இப்படி! பயல் ஒசரமாய் ஒல்லியாய் இருப்பான்... ' .ஆரம்பகாலம் முதலே அவரது நடையில் ஒரு தனித்தமிழ் தன்மையும் இருந்துவந்தது என்பதை வாசகர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். 'நுண்மணல் ' [கண்ணீர்] போன்ற சொல்லாட்சிகளை அவரது கதைகளில் எபோதுமே இருந்து வந்துள்ளன. மற்ற நவீனத்துவத் தமிழ் படைப்பாளிகளைப்போல பழந்தமிழ் பயிற்சி அறவே இல்லாதவரல்ல அவர். அவருக்கும் அவரது நண்பர் கு.அழகிரிசாமிக்கும் பழந்தமிழில் , குறிப்பாக கம்பராமாயணத்திலும் தமிழிசைப்பாடல்களிலும் ஈடுபாடு இருந்தது. டி.கெ.சிதம்பரநாதமுதலியாரின் அவையில் பலகாலம் பங்கெடுத்தவர் கி.ராஜநாராயணன். தன் வட்டார வாய்மொழிமரபு, செவ்விலக்கியக் கூறுகள் , நேரடியான இதழியல்நடை ஆகிய மூன்று கூறுகளையும் கலந்தே அவர் தன் தனிநடையை உருவாக்கிக் கொண்டார்.

ஆனால் 2000 வாக்கில் நான் அவரை சந்தித்த போது [அப்போது பிரேமும் கூட இருந்தார்] கற்று வாசித்து பெறப்படும் எதுவுமே காலத்தில் நிற்காது என்றும் ,காதால்கேட்டது மட்டுமே கலாச்சார நினைவில் நிற்கும் என்றும் அழுத்தமாக சொன்னார். பேசி கேட்பது மட்டுமே உண்மையான மனித இயல்பு ,வாசித்தறிவது செயற்கையான ஒன்று என வாதிட்டார். அதில் அவரது நம்பிக்கை ஆச்சரியமளிப்பதாக இருந்தது. அக்கூற்று அவரது எழுத்துச்செயல்பாடுகளையே நிராகரிப்பது என்று சொன்னபோது ஒப்புக் கொண்டு, அதனாலேயே இலக்கியத்தை வாய்மொழிக்கூற்றுக்கு மிக அருகே கொண்டுவர முயன்றதாகச் சொன்னார். கி.ராஜநாராயணனின் அந்நம்பிக்கை அதிகப்படியான ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதை நிராகரிக்கவும் முடியாது. ஏனெனில் இன்றும் எழுத்து ஆசிரியனின் கதைசொல்லலாக பார்க்கப்படும் உளவியல் தொடரவே செய்கிறது! அதற்காகவே ஆசிரியனின் புகைப்படம் ,வாழ்க்கைகுறிப்புகள் எல்லாமே தேவையாகின்றன. ஒரு புகைப்படம்கூட பிரசுரிக்கப்படாத , திட்டவட்டமான அடையாளம் இல்லாத பெயர்கொண்ட ஒரு படைப்பாளியை படிப்பது விசித்திரமான உளவியல் சிரமம் அளிப்பதாக இருக்கிறது .இன்று நாம் கேட்கவில்லை, ஆனால் நம் வாசிப்பில் கேட்கும் அனுபவம் கற்பனை செய்யப்படுகிறது.

ஆனால் சொல்வதைப்போல எழுத முடியாது. குரல் என்ற மனிதம் நிரம்பிய உயிர்த்துடிப்பான அம்சம் எழுத்தில் இல்லை. முகபாவனைகள் இல்லை. அதைவிட பேச்சு நம் புரிதலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு தொடரக்கூடிய ஒன்று. எழுத்து நிலையான பதிவு. நமக்காக அது வளையாது. ஆகவே பேச்சு நெகிழ்வாக இருக்கிறது, எழுத்து செறிவாக. ஒரு கதாபாத்திரம் பேசுவதை சொல்லிக் காட்டலாம். அதை அப்படியே எழுதினால் வளவளப்பாகவே முடியும். எழுத துவங்கும்போதே அதைநாம் செறிவாக்க ஆரம்பித்துவிடுகிறோம்.[தொலைபேசியில் பேசுவதைபோல எவருமே கடிதம் எழுதுவது இல்லை] இந்த செறிவின் விளைவுகளில் முக்கியமானது படைப்பின் குறியீட்டுத்தன்மை. எழுத்து வரிவடிவையே நம்பி செயல்படவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அதில் பலவிஷயங்களை நம்மால் உணர்த்த முடிவதில்லை. ஆகவே வாசகனை ஊகிக்க வைக்க முயல்கிறோம். வாசக கற்பனையை விரிவடையச் செய்யவே இலக்கியத்தின் உத்திகள்பலவும் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல நமது பேச்சுமொழி எழுத்தின் சொற்றொடர் இயல்புகளை உள்வாங்கியபடியேதான் உள்ளது. கச்சிதமாக்குதல், தரப்படுத்துதல் ஆகிய இரு அம்சங்களை பேச்சுமரபுக்கு எழுத்துமரபே அளிக்கிறது என்று வகையில் சொல்லலாம்.

ஆகவே பேச்சுமரபு வேறு எழுத்து மரபு வேறு. இரண்டும் இருவேறு பணிகளை ஆற்றும் தனித்தனிப் போக்குகள். ஒன்று இன்னொன்றை பாதித்துக் கொண்டேஇருக்கிறது. எழுத்துமரபு செவ்வியலாக்கம் நோக்கிச் செல்கிறது. பேச்சுமரபு நடைமுறை பயன்பாடு நோக்கி. இரு சக்திகளும் சேர்ந்து உருவாக்கும் முரணியக்கமே மொழியின் சலன கதியை தீர்மானிக்கிறது. இலக்கியம் முற்றாக எழுத்துமொழியை சார்ந்து நிற்கும்போதுதான் மறைமலையடிகள்தமிழ் அல்லது மு வரதராசனார் தமிழ் போன்ற தட்டையான மொழி உருவாகிறது . பேச்சுமரபை மட்டுமே நம்பி இருக்கும்போதும் மொழியின் சலன சக்தி குறைவு படுகிறது . நம் மேடைப்பேசுகளில் உள்ள வெற்றோசை இதன் விளைவே. கி.ராஜநாராயணன் பேச்சுமொழிக்கு அதீத இடமளிக்க ஆரம்பித்த காலகடத்தில்தான் தன் சலன சத்தியை இழக்க ஆரம்பித்தார் .

பேச்சுமொழியை எழுத்து எப்படிப் பயன்படுத்துகிறது ? அ] புனைவின் நம்பவைத்தலுக்காக ஆ] சொலவடைகள் மற்றும் சொல்லாட்சிகளுக்காக இ]

பயன்பாடுமூலம் சொற்கள் கொள்ளும் மெல்லிய பொருள் மாற்றங்களை அறிய. புனைகதைகளில் பேச்சுமொழி ஒரு சூழலை நம்பவைப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது . இப்படி தாத்தைய நாயக்கர் பேசினார் என்ற பிம்பத்தையே கி.ராஜநாராயணன் உருவாக்க முடியும். தன் திறமை மூலம் அதை நம்ப வைக்க முடியும். தாத்தைய நாயக்கரின் உண்மையான பேச்சை ஒருபோதும் பதிவு செய்யமுடியாது. வட்டார வழக்கு என்பது இலக்கியத்தில் புனைவுலகை, கதாபாத்திரங்களை வாசக மனதில் நம்பகமாக உருவாக்கும் உத்தி மட்டுமே. அது சமூக ஆவணம் என்றும், மாற்றுமொழி உருவாக்கம் என்றும் , மொழியை மக்கள் மயமாக்கல் என்றும் கூறப்படும் பொதுவான கூற்றுக்கள் மிகைப்படுத்தல்கள்மட்டுமே. மொழியின் பொதுச்செயல்பாட்டில் இலக்கியம் ஆற்றும் பங்கு மிக நுட்பமானதும் அறிவார்ந்த மையத்தில் மட்டுமேசெயல்படுவதனால் மறைமுகமானதுமாகும். நாளிதழ்கள் வணிகப்பயன்பாடுகள் போன்றவை செலுத்தும் பாதிப்பே நேரடியானது, உடனடியானது.

இலக்கியத்தில் மொழி பயன்படுத்தப்படுவது மிக நுட்பமான விதத்தில் என நாம் அறிவோம். மொழி அங்கே சொல்வதைவிட குறிப்புணர்த்தவே அதிகமும் பயன்படுத்தப்படுகிறது. குறிப்புணர்த்தல் என்பது கற்பனையை தூண்டுதல், முன்நினைவுகளில் சலனம் உருவாக்குதல், மொழியினூடாக சொற்தொடர்புகளின் ஒரு வலைப்பின்னலை உருவாக்குதல், ஒலி மூலம் கூடுதல் குறிப்புறுத்தல் ஆகியவற்றால் நிகழ்கிறது. ஆகவே அதற்கு 'சீர் செய்யப்பட்ட ' 'தரப்படுத்தப்பட்ட ' சொற்கள் மற்றும் சொல்லாட்சிகள் அதிகம் உதவி செய்வது இல்லை . 'புதிய ' சொல்லாட்சிகள் தேவையாகின்றன. இவை பொதுவாக செயற்கையாக உருவாக்கப்படமுடியாதவை. மொழி வாழ்க்கையை சந்திக்கும் தருணங்களில் இயல்பாக எழுந்துவருபவை. எழுத்தாளனின் நுட்பமான மொழிப்புலன் ஒன்று அதை உள்வாங்கியபடியே உள்ளது .அது படைப்புசார்ந்த பல மாற்றங்களுக்கு உள்ளாகி அவன் படைப்புமொழியில் புதுவடிவம் கொண்டு வருகிறது. 'நடை ' என்று நாம் சொல்லும் மொழித்தனித்தன்மைகள் இப்படி உருவாகிவரும் மொழிக்கூறுகளால் ஆக்கப்பட்டவையே. ஓர் இலக்கியப்படைப்பாளியின் தனிப்பட்ட அகவுலகை நமக்கு தெரியப்படுத்துவது அவனது நடையே நடை என்பது தன்னைச்சுற்றியுள்ள மொழிச்சலனத்தை பின்தொடர்வதன்மூலம் எழுத்தாளனால் உருவாக்கப்படுவது . இந்த மொழிச்சலனம் என்பது பலவகைகளில் நடைபெறுகிறது. கல்வி, நிர்வாகம், வணிகம் ,செய்தி முதலிய பலதளங்களில் மொழி அன்றாடப் பயன்பாட்டுக்கு வரும்போது புதிய சாத்தியங்களை சந்திக்கிறது.பவற்றை எழுத்தாளனின் மொழிப்புலன் எடுத்து உள்ளூர சேர்த்துக் கொள்கிறது. அவற்றில் முக்கியமானது மக்கள்வாய்மொழியே. நல்ல படைப்பாளி என்பவன் மக்கள்வாய்மொழியில் தணியாத மோகம் கொண்டவனாகவே இருப்பான். காதில் விழும் மொழியே நடை என்ற அந்தரங்க ஊற்றை உருவாக்கும் மழை என்றால் மிகயல்ல. உதாரணமாக நாஞ்சில்நாடனின் நடையில் குமரிமாவட்ட சொல்லாட்சிகள்தான் நடையாகின்றன ' மாப்பிள்ளைபிடித்த காசு பிள்ளை அழிக்க ஆச்சு என்பதுபோலத்தான் அன்றாடக் கணக்கும். ஒன்றும் சொல்வதற்கில்லை... ' என்ற அவரது நடையில் மொழியில் உருவாகி முளையின் மொழிப்புலனில் தேங்கிய ஒரு பகடி எழுந்துவருகிறது. இந்த அம்சம் சுந்தர ராமசாமியின் கட்டுப்படுத்தப்பட்ட நடையில் ஒருமுறை கழுவி உலர்த்தப்பட்டு மறுபிறப்புகொள்கிறது. ' டி.கெ.சி வெண்ணைகடையும்போது மத்தின் சத்தமே கேட்பதில்லை... ' வாய்மொழி மரபே மொழியில் புதிய சொலவடைகளையும் சொல்லாட்சிகளையும் உருவாக்குகிறது. மொழி காதில் விழாத இடத்தில் வாழும் ஒருவரால் உயிர்த்துடிப்பான உரைநடையை உருவாக்க முடியாது .

நடையின் முக்கியமான கூறு சொற்களின் மாற்றங்களைப் பற்றிய பிரக்ஞை . பேச்சுமொழி சொற்களைமாற்றியபடியே இருக்கிறது . 'சரியான புன்னைகைமன்னன் அவன்..' இங்கே புன்னைகைமன்னன் என்ற சொல்லை நம் பேச்சுமொழியில் அறிமுகம் இல்லாத ஒருவரால் புரிந்துகொள்ளமுடியாமல்போகலாம். இலக்கியம் இம்மாதிரி சொற்களை எப்போதுமே தன் நுட்பமான தொடர்புறுத்தலுக்கு பயன்படுத்துகிறது. ஆக இம்மூன்று தளத்திலும் மக்கள்வாய்மொழி சார்ந்தே இலக்கியம் இயங்குகிறது. நல்ல இலக்கியம் கணந்தோறும் நிறம் மாறும் பேச்சு மொழியிலிருந்து கலாச்சாரத்தின் பருவடிவமாக நிரந்தரத்தில் உறைந்துள்ள பேரிலக்கியமொழி வரையிலான அகன்ற வெளியை தன் தொடர் மின்னல்களால் இணைக்கிறது.

கி.ராஜநாராயணன் தன் பெரும்பாலான கதைகளில் இந்த இணைப்புக்காக தீவிரத்துடன் எழுவதைக் காணலாம். தமிழிலக்கியத்தில் அவரது இடம் முக்கியமாக அவரது நடை மூலமே. இலக்கியமொழியில் இருந்து எடுத்துக் கொண்ட கச்சிதம், குறிப்புணத்தும் தன்மை , உள்ளடுக்குகளைக் கொண்டிருத்தல் ஆகியவை அவரது சிறந்த கதைகளில் இருக்கின்றன. பேச்சுமொழியின் சரளம் , சமத்காரம் ஆகியவற்றை தக்கவைத்துக் கொண்டே இவற்றை அடைய அவர் முயன்று தன்னுடைய சிறந்த கதைகளில் வெற்றியும் பெற்றிருக்கிறார். இக்கட்டுரையில் சொல்லப்பட்ட அவரது சிறந்த கதைகளில் இந்தச் சிறப்பு வெளிப்பட்டிருக்கிறது. உரையாடலை காதில் விழச்செய்யும் சொற்றொடர்கள்[எடுக்கட்டும் பயபுள்ளைக. நல்ல்..ல திண்ணு கொழுத்துப்போய் அலையுதுக] நாட்டுப்புறச் சொலவடைகள் [என்னடா எளவாப்போச்சு, எளவிலேயும் பேரெளவா இருக்கே. சம்சாரி கொத்தைப்பருத்தியிலேயும் கேவலமா போயிட்டானே]சொல்லாட்சிகளின் நுட்பமான மாறுபாடுகள் [ஊரெல்லாம் ஒரே கெக்கோல்.பேசிச்சிரிக்க விஷயம் கிடைத்துவிட்டதே]

இதன் மூலம் அவரால் மொழியின் நுட்பமான சாத்தியங்களை அதிகபட்சமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடிகிறது. கதைவடிவம் அளிக்கும் குறிப்புணர்த்தல்களை தாண்டி மொழி தன் ஒவ்வொரு துளியாலும் அளிக்கும் குறிப்புணர்த்தல்கள் நிரம்பிய பரப்புகள் அவை . கதை அளிக்கும் ஆர்வத்தைமீறி அவரது கூற்றே தனியான ஓர் ஆர்வத்தை அளிப்பது இதனால்தான். என்னைப்பொறுத்தவரை கி.ராஜநாராயணனின் கதையை விட அவரது சித்தரிப்புகளே முக்கியம் , அவற்றுக்குள் ஏராளமான கதைகளின் ரகசிய விதைகள் உள்ளன. உதாரணம் கொத்தைப்பருத்தியில் பெண்பார்க்க வந்த கலெக்டர் அப்பா கோனேரியின் களஞ்சியங்களைப்பார்த்து 'ரட்ணக்காலை ' மாற்றி சாதாரணமாக உட்கார்வது.மொழியின் ஓர் சின்ன திருகலால் கதைக்குள் ஒரு கதையின் விதையை கி.ராஜநாராயணன் புதைத்து வைப்பதுண்டு. [ப.சிங்காரத்திடம் இப்படி பல துளிகளைக் காணலாம். உதாரணம் 'டாலர் ' ராஜாமணி அய்யர். அய்யர் மோட்டார் டிரைவர் ஆகிய பரிணாமம் என்ன ?] எங்கும் ஓர் நிறையில் அங்கயற்கண்ணி,பேதையில் ஒரேயொரு வசனம் மட்டும் பேசும் காளி.

கி.ராஜநாராயணனின் எல்லை அவரது 'கதைசொல்லி ' இயல்பிலிருந்து உருவாகிறது. கதைசொல்லிகள் சொல்வதற்கு மட்டுமே மொழியின் சாத்தியங்களைப் பயன்படுத்துகிறார்கள். கி.ராஜநாராயணன் சித்தரிப்புக்கும் ஓரளவு பயன்படுத்துகிறார் என்றாலும் அச்சித்தரிப்புகூட 'சொல்லவே ' படுகிறது. மனதின் கட்டுக்குமீறிய ஓட்டங்களை , மாறிமாறி வரும் புறக்காட்சியின் அமைவுகளை , அறிவார்ந்த விவாதங்களை அனைத்தையுமே வாய்மொழிமரபின் சாத்தியங்களைப்பயன்படுத்தி மேலும் வளர்த்தெடுக்கும் தீவிரம் அவரில் இல்லை. உதாரணமாக அசோகமித்திரனின் 'வாழ்விலே ஒரு முறை ' கதையில் ஒரு லாரி ஒரு சிறுவன் மீது பாயும் கணம்

ஒருபக்கத்துக்கும் மேலாகவே சொல்லப்பட்டுள்ளது. அதை சொல்ல வாய்மொழிக்கூறுகளை எப்படி பயன்படுத்தலாம், மௌனியின் ;அசையும் தோணி கடப்பதறியாது எல்லைகடக்கும் ‘ இடத்தை இம்மொழியால் எப்படி தொடலாம் ? அவை பெரிய சவால்கள். வைக்கம் முகம்மது பஷீர் அந்த சாத்தியங்களை பெருமளவுக்கு பயன்படுத்தியுள்ளார். ஆன்மீக அகஅனுபவத்தின் எழுச்சி வாய்மொழிக்கூறுகளால் சொல்லப்பட்ட சிறந்த பஷீர் கதைகள் உள்ளன. குர்-ஆன் ஹதீஸ் உறவுகளைப்பற்றி ஒரு தச்சனிடம் பேசுவதுபோன்று எழுதப்பட்ட அவரது கட்டுரை அறிவார்ந்த விவாதங்களை வாய்மொழிக்கூறுகளால் எழுதுவதன் சிறந்த உதாரணம். ஆங்கிலத்தில் யுலிசஸ் நாவலில் ஜேம்ஸ் ஜாய்ஸ் அதை சாதித்தார் என்கிறார்கள், என்னால் அந்நாவலை உணர்ந்து படிக்கமுடியவில்லை .கி.ராஜநாராயணன் சொல்லலில் மட்டுமே தன் படைப்பியக்கத்தை நிறுத்திக் கொண்டவர்.

கி.ராஜநாராயணனின் கருத்தியல் பிரச்சினைகள்

எழுத்தாளனின் கருத்தியலை அவன் படைப்புகளில் தேடுவது பெரும்பாலும் அசட்டுத்தனமாகவே முடியும், ஏனெனில் நல்ல எழுத்தாளன் தன் ஆழ்மனதைச் சார்ந்து எழுதுபவன் என்பதனாலேயே திட்டவட்டமான கருத்தியல் ஒன்று அவனது படைப்புலகத்தில் இருக்க முடியாது. திட்டவட்டமான அரசியல் , கருத்தியல் நிலைப்பாடுகள்கொண்ட பொன்னீலன் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளிலேயேகூட திட்டவட்டமான கருத்தியல் இல்லை, அது அவரது கட்சிக்காரர்களை எப்போதும் குழப்புகிறது. ஏற்கனவே இக்கட்டுரையில் சொன்னதுபோல இனக்குழு அடையாளத்துக்கும் மார்க்ஸிய கருத்தியலுக்கும் இடையேயான சமர் தான் கி.ராஜநாராயணனின் படைப்புகளின் இயக்கவிலை உருவாக்குகிறது. அவரது அடிப்படைக் கருத்தியல் பெரும்பாலும் மார்க்ஸிய மனிதாபிமான நோக்கே. ஆனால் அவரது இனக்குழுப்பார்வை சில சிக்கல்களை அதில் உருவாக்குகிறது. நமது இனக்குழுப்பார்வை எப்போதுமே ஆண்மைய , ஆதிக்கத்தன்மை கொண்ட பார்வைதான்.

கி.ராஜநாராயணனின் ஆக்கங்களில் பெரும்பாலும் பெண்கள் மீதான கருணையும் அவர்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகள் சார்ந்த தர்மாவேசமும் வெளிப்படுகிறது என்பது உண்மையே. இக்கதைகளுக்கு மகுடம் என ‘கண்ணீர் ‘ என்ற கதையைச் சொல்லலாம். ஆனால் அவரது மொழிநடையில் எப்போதுமே பெண்களைப் பற்றிய பிரியம்தோய்ந்த ஒரு இளப்பம் வெளிப்படுகிறது. ‘ பாவம், பெண்டுகளுக்கு என்ன தெரியும் ‘ என்பதுபோன்ற ஒரு தோரணை. பற்பல உதாரணங்களை எடுத்து அதைவிளக்கலாம் . குறிப்பாக சொல்லவேண்டிய கதைகள் என ‘வலி வலி ‘ போன்ற கதைகள். அதைப்போல அவர் ஆதிக்கசாதி அடிமைசாதிகள்மீது செலுத்தும் வன்முறையையும் சுரண்டலையும் அவர் உக்கிரமாகவே சொல்லியிருக்கிறார், உதாரணம் ‘கிடை ‘ . ஆனால் விவசாயத்தொழிலில் உள்ள சுரண்டலை அவரது பல கதைகள் போகிறபோக்கில் நியாயபடுத்தி சென்றுவிடுகின்றன. சிறந்த உதாரணம் ‘நிலைநிறுத்தல் ‘ .மாசாணம் ‘வாங்க ‘ப்படுவது , அவன் தன் தனித்தன்மைமூலம் அச்சமூகத்தில் இடம் பெறுவது பற்றிய சித்திரத்தில் எப்படியோ அது ஓர் இயல்பான விஷயம் என்ற தொனி உள்ளது.

அனைத்தையும்விட முக்கியமானது கி.ராஜநாராயணனின் உலகில் தலித் மக்களின் வாழ்க்கை குறிப்பிடத்தக்க அளவில் சொல்லப்படவில்லை என்பதே. கி.ராஜநாராயணனின் ஆசியுரையுடன் வெளிவந்துள்ள இலட்சுமணப்பெருமாளின்

சிறுகதைதொகுப்பில் ஒரு கதையில் பயிட்டன் என்ற பகடை [சக்கிலியர்] அவர் அம்மா கடனுக்கு வாங்கிய ஒரு புடவையிந் விலைக்கு ஈடாக எட்டு வயதுமுதல் எழுபதுவயது வரை நில உடைமை நாயக்கரிடம் அடிமையாக உழைத்து , திருமணம் கூட செய்துகொள்ளாமல் வாழ்ந்து இறுதியில் அக்கிராமத்தில் உருவாகும் ஒரு விழிப்புணர்வால் விடுதலைபெறும் சித்திரம் உள்ளது. நாயக்கர்களின் கிராமசபை பயிட்டனை மேலும் அடிமையாக வைத்திருப்பதே நியாயம் என்றே பேசுகிறது .அடிதடி ஏற்படும் என்ற அச்சமே பயிட்டனுக்கு விடுதலையை வாங்கி தருகிறது. கி.ராஜநாராயணனின் கதைகளில் வரும் அதே உலகம்,அதே மக்கள் .ஆனால் சமூகக்காட்சி முற்றிலும் வேறு. கி.ராஜநாராயணன் காட்ட மறந்த காட்சி. அவரது கதைகளில் நாம் காணும் பலவிதமான நாயக்கர்களில் அப்பாவிகள் தான் அதிகம். அபூர்வமாக சிலர் அவர்களை ஏய்த்துண்ணும் தந்திரசாலிகள். அனைவரையும் ஒருவித கேலிச்சித்திரங்களாக ஆக்குவதன்மூலம் கி .ராஜநாராயணன் அவர்களை நாம் பிரியத்துடன் பார்க்க வழி செய்கிறார். இடைசெவலை நம் வாசகர்கள் நேசித்தது அதனால்தான். அவர்கள் கொண்டாடும் வாழ்க்கையின் உள்ளே உள்ள இந்த உக்கிரமான கருமை நம்மை அவர் கதைகளின் வழியாக வந்தடைவது இல்லை.

இதை மேலும் நீட்டித்துப் பார்த்தால் கி.ராஜநாராயணனின் மனநிலையில் உள்ள முக்கியமான ஓர் அம்சத்தைக் கண்டடையலாம். அவரது பார்வையில் காலம் முன்னகரவில்லை, பின்னகர்கிறது! விவசாயம் பொய்த்து நிலங்கள் பொட்டல்களாகின்றன. மேழிபிடிக்கும் கை பார்வேந்தர் வணங்கும் கை மதிப்பிழக்கிறது[கொத்தைப்பருத்தி] தீப்பெட்டித்தொழில் வந்து மக்கள் அடிமையாகிறார்கள்.[ஒரு குரல்] பயிட்டனைப்பொறுத்தவரை அவனது உழைப்புக்கு விலைபேசும் ஓர் உரிமைக்குரல் அவருக்கு ஆதரவாக எழுவது மாபெரும் முற்போக்குப் பாய்ச்சல் அல்லவா ? அவரது குழந்தைகள் தீப்பெட்டித்தொழிலுக்கு போவதை ஒரு பெரும் விடுதலையாகக் கொண்டாடலாமே ? பயிட்டனின் மகன் கதை எழுதினால் அவன் இக்காலகட்டத்தை எப்படிச் சித்தரிப்பார் ?ஆக நாம் இக்கட்டுரையில் முதலில் கேட்ட கேள்விக்கு மீண்டும் வந்து சேர்ந்திருக்கிறோம். கி.ராஜநாராயணனை பொறுத்த வரை வரலாறு ஒரு பெரிய முன்னகர்வே. ஆனால் கடந்த சில வருடங்கள் சரிவு. அது அவரது இனக்குழுவுக்கு ஏற்பட்ட சரிவுதான். அவர்கள் சார்ந்திருந்த நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு ஏற்பட்ட சரிவு. அதை கி.ராஜநாராயணன் ஆழ்ந்த துயரத்துடந்தான் சித்தரிக்கிறார். மின்சாரம் மறுக்கப்படும் விவசாயியின் நியாயமான கோபம் அவரால் எழுதப்படுகிறது, சுயகௌரவம் மறுக்கப்படும் விவசாயக் கூலி கதைப்பரப்புக்குள் வரவேயில்லை.இங்கே ஒரு மார்க்ஸிய முற்போக்காளரான கி.ராஜநாராயணனை அவரது இனக்குழுமனம் வெறு முன்சென்றுவிடுகிறது. நிலப்பிரபுத்துவ அமைப்பின் வீழ்ச்சியைக் கொண்டாடவேண்டியவர் அதற்காக பெருமூச்சு விடுகிறார். அவரது கருத்தியலின் முக்கியப்பிரச்சினை இதுவே.



இனக்குழுசார்ந்த ஆழ்மனம்கொண்ட படைப்பாளியான கி.ராஜநாராயணன் நவீனயுகத்தின் சித்தாந்தமாகிய மார்க்ஸிய மனிதாபிமான நோக்கால் உசுப்பப்பட்டு அவை இரண்டுக்கும் இடையேயான முரணியக்கமாக தன் படைப்பியக்கத்தை உருவாக்கிக் கொண்டார். அந்தமோதலும் முயக்கமும் உக்கிரமாக நிகழ்ந்த காலகட்டமே

அவரது நல்லபடைப்புகளின் பிறப்பை சாதித்தது. வாய்மொழிக்கூறுகள் மூலம் கதைசொன்ன கதைசொல்லி அவர். அக்கூறுகளை மனம் என்ற மேலும் நுட்பமான அமைப்பை அறிய அவர் பயன்படுத்தவில்லை. இனக்குழுமனம் அவரது மார்க்ஸிய சார்பை உண்டு செரித்தபோது அவரது பயணம் நின்று இனக்குழு ஆவணநிபுணராக அவர் உருக்கொண்டார். தமிழில் கி.ராஜநாராயணனின் சிறப்பிடம் நமதுமரபின் ஆழ்மனம் எப்படி நவீனகாலகட்டத்தை எதிர்கொண்டது என்ற சித்திரத்தை அளிக்கும் சிறந்த சிறுகதைகளிலும் கோபல்ல கிராமம் என்ற நாவலிலும் உள்ளது .

நன்றி: தமிழினி

இந்து தமிழ் திசை

https://www.hindutamil.in/news/blogs/221077-10.html

கி. ராஜநாராயணன்



ராஜலட்சுமி சிவலிங்கம்

தமிழ் எழுத்தாளர், நாவலாசிரியர்

என அன்போடு அழைக்கப்படுபவரும், 'கரிசல் இலக்கியத்தின் தந்தை' எனப் போற்றப்படுபவருமான கி.ராஜநாராயணன் (Ki.Rajanarayanan) பிறந்தநாள் இன்று (செப்டம்பர் 16). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

*தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அடுத்த இடைச்செவல் கிராமத்தில் வசதியான குடும்பத்தில் (1922) பிறந்தவர். ராயங்கல ஸ்ரீ கிருஷ்ணராஜ நாராயண பெருமாள் ராமானுஜம் என்பது முழுப்பெயர். இதைச் சுருக்கி, கி.ராஜநாராயணன் என்று வைத்துக் கொண்டார். தந்தை விவசாயி.

*ஏழாம் வகுப்பு வரை மட்டுமே பயின்றார். பிறகு, விவசாயம் பார்த்து வந்தார். 40 வயதுக்கு மேல் எழுதத் தொடங்கினார். 'மாயமான்' என்ற முதல் சிறுகதை 1958-

ல் 'சரஸ்வதி' இதழில் வெளியானது. வாசகர்களிடம் அது பெரும் வரவேற்பைப் பெற்றதால், தொடர்ந்து பல சிறுகதைகள் எழுதினார்.

*கரிசல் பூமி மக்களின் வாழ்க்கை, துன்பங்கள், நம்பிக்கைகள், ஏமாற்றங்களை இவரது எழுத்துகள் விவரித்தன. சிறுகதை, குறுநாவல், நாவல், கிராமியக் கதை, கடிதம் என்று தமிழ் இலக்கியத்தின் பல்வேறு தளங்களிலும் முத்திரை பதித்தார்.

*வாய்மொழிக் கதை சொல்லும் மரபின் கூறுகளை தனது படைப்பின் அடிப்படை அம்சங்களாகக் கொண்டிருந்தார். வட்டார வாய்மொழி மரபு, செவ்விலக்கியக் கூறுகள், நேரடியான இதழியல் நடை ஆகிய மூன்று கூறுகளையும் கலந்து, தனக்கென தனி நடையை உருவாக்கிக்கொண்டவர்.

*பிரபல இதழ்களில் இவரது கதைகள் தொடர்ந்து வெளிவந்தன. 2007-ல் இவை அனைத்தும் தொகுக்கப்பட்டு 944 பக்கங்கள் கொண்ட 'நாட்டுப்புறக்கதைக் களஞ்சியம்' என்ற படைப்பாக வெளியானது. 2009-ல் மட்டும் இவரது 30 புத்தகங்கள் வெளி வந்தன. இவரது சில கதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

* சிறுகதைத் தொகுப்புகள், 2 குறுநாவல்கள், 6 கட்டுரைத் தொகுதிகள், 3 நாவல்கள் எழுதியுள்ளார். 'கோமதி', 'கண்ணீர்', 'கரிசல் கதைகள்', 'கி.ரா.பக்கங்கள்', 'கிராமியக் கதைகள்', 'கொத்தைபருத்தி', 'புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள்', 'கோபல்ல கிராமம்', 'புதுமைப் பித்தன்', 'மாமலை ஜீவா' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.


*'கிடை' என்ற இவரது குறுநாவல் 'ஒருத்தி' என்ற திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ''ஒரே மூச்சில் ஒரு கதையை எழுதி முடிக்கும் வழக்கம் எனக்கு கிடையாது. எழுதியதைப் படித்து, மீண்டும் மீண்டும் அடித்துத் திருத்தி எழுதும் பழக்கம் உள்ளவன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

*பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்பு பேராசிரியராகப் பணியாற்றினார். நல்ல இசைஞானம் கொண்டவர். நண்பர்களுக்கு நீண்ட கடிதங்கள் எழுதுவார். அவர்கள் எழுதும் பதில் கடிதங்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பார்.

*கரிசல் வட்டார அகராதியை உருவாக்கி, வட்டார மொழிக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி என்ற பெருமை பெற்றார். 'கோபல்லபுரத்து மக்கள்' நாவலுக்காக இவருக்கு 1991-ல் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. இலக்கியச் சிந்தனை விருது, தமிழக அரசு விருது, கனடா இலக்கியத் தோட்டம் வழங்கிய தமிழ் இலக்கியச் சாதனை-2016 சிறப்பு விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

*வட்டார இலக்கியத்தின் 'முன்னத்தி ஏர்', 'தமிழ் எழுத்துலகின் பீஷ்மர்', 'தலைசிறந்த கதைசொல்லி' என்றெல்லாம் போற்றப்படும் கி.ராஜநாராயணன் இன்று 94-வது வயதில் அடியெடுத்து வைக்கிறார். தற்போது பாண்டிச்சேரியில் வசிக்கும் இவர், தள்ளாத வயதிலும் சோர்வின்றி எழுதி வருகிறார்.

இலக்கிய வாழ்க்கை



தொடக்கம்

கி.ரா எழுதி முதல் சிறுகதை 'சொந்த சீப்பு'. 1958-ம் ஆண்டு அவர் சரஸ்வதி இதழில் எழுதிய 'மாயமான்' சிறுகதை விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றது. அதன் பின் இவரது 'கதவு' சிறுகதையும் பெரும் வாசகர் கவனம் பெற்றது. அக்கதையைப் பாராட்டி சுந்தர ராமசாமி, அக்கதை ஆண்டன் செகாவ் பாணியில் இருப்பதாகக் கடிதம் எழுதினார்.

சிறுகதைகள்

கி.ராவின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் பற்றி பேசுவது. கரிசல் மண்ணையும், அதன் மனிதர்களையும் பற்றி எழுதிய கி.ரா வின் கதைகள் தொகுதிகளாக வெளிவந்தன. 'கதவு' கி.ரா எழுதி வெளிவந்த முதல் தொகுதி

நாவல்கள்

கி.ராஜநாராயணனின் முதல் நாவல் கோபல்ல கிராமம் (1976) தமிழகத்தில் தெலுங்கு மக்கள் குடியேறி, நிலம் திருத்தி, ஒரு சமூகமாக அமைந்தமை பற்றிய நாவல். குலக்கதைகள், தொன்மங்கள், நாட்டார் வழக்குகள் ஆகியவற்றின் தொகுப்பாக அமைந்த சீரான நேர்வேகம் அற்ற நாவல் தமிழில் ஒரு புதிய தொடக்கமாகக் கருதப்படுகிறது. பின்னர் 'கோபல்லபுரத்து மக்கள்' என்னும் பெயரில் அதன் தொடர்ச்சியாக இன்னொரு நாவலையும் எழுதினார்.

அகராதி

கரிசல் வட்டாரத்தில் சிறப்பாக வழங்கும் தமிழ்ச் சொற்களுக்கான கரிசல் வட்டார வழக்கு அகராதியை உருவாக்கினார்.

சிறுவர் இலக்கியம்

கி.ராஜநாராயணன் 'பிஞ்சுகள்' என்னும் சிறுவர்களுக்கான நாவலை எழுதியிருக்கிறார்.

நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்

நாட்டுப்புற இலக்கியங்களைத் தேடி, ஆராய்ந்து ஒரு தொகுப்பாக வெளியிட்டார். அது 'நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்' என்ற தலைப்பில் நூலாக அன்னம் வெளியீட்டில் வந்தது. நாட்டுப்புறப் பாலியல் கதைகளையும் தொகுத்துள்ளார்.

கடித இலக்கியம்

கி.ராஜநாராயணனுக்கும், கு.அழகிரிசாமிக்கும் டி.கே.சிதம்பரநாத முதலியார் மீது மிகப்பெரிய ஈடுபாடு இருந்தது. அவருடைய கடிதமெழுதும் பாணியை அவர்கள் கடைப்பிடித்தனர். தமிழ் கடித இலக்கியத்தில் அவர்கள் எழுதிய கடிதங்களுக்கு முக்கியமான இடம் உண்டு. கி.ராஜநாராயணன் ஒவ்வொரு எழுத்தாளருக்கும் கடிதம் எழுதும் வழக்கம் உடையவர். அவருக்கு சுந்தர ராமசாமி, கு. அழகிரிசாமி என மற்ற எழுத்தாளர்கள் எழுதிய கடிதங்கள் 'அன்புள்ள கி.ரா.வுக்கு' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன.

இலக்கிய இடம்



கி.ராஜநாராயணன் தமிழிலக்கியத்தில் இரண்டு வகையில் மதிப்பிடப்படுகிறார். நீண்ட நாட்டார்மரபு கொண்டது தமிழ்ப்பண்பாடு என்றாலும் நவீன தமிழிலக்கியம் நாட்டார்மரபின் அழகியலை பயன்படுத்திக்கொள்ளவில்லை. அதை நவீனப்பார்வையிலேயே அணுகியது. தமிழ் வணிக இலக்கியமும் அவ்வாறே அதை அணுகியது. ஆனால் ஆய்வுச்சூழலில் கி.வா. ஜகந்நாதன், மு. அருணாசலம், நா. வானமாமலை ஆகியோர் தொடங்கி நாட்டாரியலை ஆய்வுநோக்கில் பதிப்பிக்கும்

பணி நடைபெற்றுவந்தது. நவீன இலக்கியத்தில் நாட்டார் அழகியலை பயன்படுத்திய முன்னோடி கி.ராஜநாராயணன்.

நவீனத் தமிழிலக்கியம் ஓர் அழகியல் உத்தி என்னும் வகையில் வட்டாரவழக்கைப் பயன்படுத்தி வந்தது. ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் மொழி, சொலவடைகள், நாட்டாரியல் கூறுகள், வேளாண்மைச் செய்திகள், சமூகப்பதிவுகள் ஆகியவற்றை முழுமையாகச் சார்ந்து தனக்குரிய அழகியலை உருவாக்கும் எழுத்து கி.ராஜநாராயணனிடமிருந்தே தொடங்கியது. அவர் எழுதிய நிலம் கரிசல் மண். ஆகவே கரிசல் இலக்கியவாதி என கி.ராஜநாராயணன் அழைக்கப்படுகிறார். கரிசல் இலக்கியவாதிகள் என ஒரு வரிசை அவருக்கு பின் உருவாகியது. பூமணி, கோணங்கி, சோ. தர்மன், சூரங்குடி அ .முத்தானந்தம் போன்றவர்கள் அவ்வகையில் முக்கியமானவர்கள்.

நாட்டாரியல் ஆய்வாளராகவும் கி.ராஜநாராயணன் முன்னோடித்தன்மை கொண்டவர். கரிசல் வட்டாரவழக்கு அகராதியை அவர் உருவாக்கினார். கழனியூரன், பாரததேவி போன்ற ஆய்வாளர்கள் அவரை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டாரியல் ஆய்வில் ஈடுபட்டனர். கண்மணி குணசேகரன் , பெருமாள் முருகன் போன்றவர்கள் அவரைப்போலவே வட்டாரவழக்கு அகராதிகளை உருவாக்கினர்.

"கி. ராஜநாராயணன், ஜானகிராமனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஜானகிராமனைப் போலவே அபூர்வமான அழகுணர்ச்சியும் ரசனையில் திளைக்கும் மனோபாவமும் கொண்டவர். இவரது கதை உலகத்தைத் தமிழ் மண்ணுக்கே உரித்தான ஒரு பழத்தோட்டம் என்று சொல்லலாம். வித்தியாசமான மனிதர்களைக் கதாபாத்திரங்களாக மாற்றும் ஆற்றல் இவர் கலை வன்மை. இதே உலகத்தைச் சேர்ந்த அழகிரிசாமியின் கதைகளிலிருந்து வித்தியாசமாக, தன்னைச் சார்ந்த உலகத்தை அன்னியரின் பார்வையில் பார்க்க முற்படும் தருணங்களில், இவருடைய சகஜங்களே இவருக்கு சகஜமற்றுப் போகின்றன. நினைவில் நீங்காது நிற்கும் பல அருமையான கதைகளை உருவாக்கியவர்" என்று சுந்தர ராமசாமி கி.ராஜநாராயணனை மதிப்பிடுகிறார்.

கி. ராஜநாராயணனின் கதைக்களமும், கதை சொல்லும் முறையும் இலக்கியத்தில் தனித்த இடம் கொண்டவை. அவை யதார்த்தவாத கதைப் பாணியில் அமைந்தவை. ஆனால் கி.ரா. அதனுள் நாட்டார் கூறுகளையும் சேர்த்துக் கொண்டார். ஒரு குலக்குழுவின் பாடகன் நவீன இலக்கியத்தின் அழகியலை கைக்கொண்டபோது உருவான படைப்புகள் என அவற்றைச் சொல்லலாம் என வரையறுக்கும் ஜெயமோகன் தன் இலக்கிய முன்னோடிகள் நூலில் கி.ராஜநாராயணனை இனக்குழு அழகியலின் முன்னோடி எனக் குறிப்பிடுகிறார்.

கி. ராவின் நாவல்களை முன்வைத்து எஸ். ராமகிருஷ்ணன், "வாய்மொழி வரலாற்றைப் பொது வரலாறு ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், அதை மாற்றித் தனது படைப்புகளின் வழியே வாய்மொழி வரலாற்றின் உண்மைகளை வரலாற்றின் சாட்சியங்களாக மாற்றினார். கி.ரா. 'கோபல்ல கிராமம்', 'கோபல்லபுரத்து மக்கள்' இரண்டு படைப்புகளும் இதற்கான சிறந்த உதாரணங்கள்" என்று குறிப்பிடுகிறார்.










தொழில்



- 25 -

*
*

காலை நேரம் ஒரு நாள்.
என்ன நேர்ந்தது?
வேப்ப மரங்களில் அங்கங்கே இலைகள்
கரிந்து போக ஆரம்பித்திருப்பதைக் காண நேர்ந்தது
நோய்களை விரட்டும் தெய்வீக மரம்.
இதற்கு முன் இப்படிப் பார்த்ததில்லையே யாரும்!
எங்கோ தூரத்தில் பெண்களின்
[illegible] ஓசை கேட்டது.
வேதனையோடு பெரியவர்கள்
ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.
வானத்தில் கருடப்பட்சிகள் உயரத்தில் வட்ட
மிட்டுக் கொண்டிருந்தன.
இந்த எழுத்தின் [illegible] பாகத்தில்
அண்டரண்டப் பட்சி வந்து போனது
நல்ல சகுனமாகப் படுகிறது.
அடுத்த பாகத்தில் சந்திப்போம்.

என்றும்
[illegible]
22-06-2020
புதுவை-8.

ராஜநாராயணன் 30 வயதில் தனது இலக்கிய வாழ்க்கையைத் தொடங்கினார். இவரது முதல் சிறுகதையான "மாயமான்" 1959 இல் சரஸ்வதி இதழில் வெளியானது. அது வரவேற்பைப் பெற்றது. அதைத் தொடர்ந்து இன்னும் பல சிறுகதைகள் வெளிவந்தன. கி. ரா.வின் கதைகள் வழக்கமாக அவரது சொந்தப் பகுதியான கோவில்பட்டியைச் சுற்றியுள்ள கரிசல் காட்டைச் சர்ந்தவை. கதைகள் பொதுவாக கரிசல் நாட்டு மக்கள், அவர்களின் வாழ்க்கை, நம்பிக்கைகள், போராட்டங்கள் மற்றும் நாட்டுப்புறக் கதைகளை, ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளை மையமாக கொண்டவை. கோபல்ல கிராமம் மற்றும் அதன் தொடர்ச்சியான கோபல்லபுரத்து மக்கள் ஆகியவை இவரது மிகவும் பாராட்டப்பட்ட புதினங்களில் ஒன்றாகும், பிந்தைய புதினம் இவருக்கு 1991 இல் சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுத் தந்தது. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பு

தென்னிந்தியாவில் ஒரு கிராமத்தில் வாழ்ந்த பலரின் கதைகளை இந்த புதினம் கையாள்கிறது. தமிழ்நாட்டின் வடக்கே இருந்த கொடூரமான இராச்யங்களிலிருந்து தப்பித்து தெலுங்கு மக்கள் தெற்கே தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்து குடியேறுவதை விவரிக்கிறது. இந்த புத்தகங்களுக்கு அடுத்த பகுதியாக அந்தமான் நாயக்கர் புதினம் வந்தது.

ஒரு நாட்டுப்புறவியலாளராக, கி. ரா. பல தசாப்தங்கள் கரிசல் வட்டாரத்தில் இருந்து நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து பிரபல பத்திரிகைகளில் வெளியிட்டார். 2007 ஆம் ஆண்டில், தஞ்சாவூரைச் சேர்ந்த அன்னம் என்ற பதிப்பகம் இந்த நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து நாட்டுப்புற கதைக் களஞ்சியம் என்ற பெயரில் 944 பக்க புத்தகமாக வெளியிட்டது. 2009 வரை, இவர் சுமார் 30 புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகங்களில் சிலவற்றை ஆங்கிலத்தில் பிரித்தம் கே. சக்ரவர்த்தி மொழிபெயர்த்து 2009 இல் *Where Are You Going, You Monkeys? – Folktales from Tamil Nadu* என்ற பெயரில் வெளியிட்டார். கி. ரா. நாட்டுப்புறங்களில் நிலவும் பாலியல் கதைகளை நேர்மையாக சேகரித்து எழுதுவதற்கும், அவரது கதைகளில் இலக்கிய மொழிவழக்கைக் காட்டிலும் தமிழ் வட்டார வழக்கைப் பயன்படுத்துவதற்கும் நன்கு அறியப்பட்டவர். அவர் பேச்சுவழக்கை மொழியின் 'சரியான' வடிவமாகக் கருதினார் வட்டார வழக்குகளில் கதைகளை எழுதுவதோடு மட்டுமல்லாமல், கரிசல் வட்டார அகராதி என்று அழைக்கப்படும் என்று மக்கள் தமிழுக்கு அகராதியின் ஆசிரியராகவும் இருந்தார். இந்தப் பணி தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் உள்ள வட்டாரவழக்குகளுக்கும் இதே போன்ற அகராதிகள் உருவாக முன்னோடியாக இருந்தது.

கி. ராஜநாராயணன் இயல்பில் ஒரு விவசாயி. ஒரு தேர்ந்த கதை சொல்லி. ‘நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப்பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்’ என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா., நல்ல இசை ஞானம் கொண்டவர் ,கவியரசு நா.காமராசன் அவர்கள் நடத்திய இலக்கிய பத்திரிகையான" சோதனை"யின் ஆலோசகர் ஆக இருந்துள்ளார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் நாட்டுப்புறவியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் பல்கலைக்கழகத்தின் ஆவணப்படுத்தல் மற்றும் ஆய்வு மையத்தில் நாட்டுப்புறக் கதைகளின் இயக்குநர் பதவியை வகித்தார். 1998 மற்றும் 2002 க்கு இடையில் இவர் சாகித்திய அகாதமியின் பொதுக்குழுவிலும் ஆலோசனைக் குழுவிலும் பணியாற்றினார்.

திரைப்படமாக்கப்பட்ட இவர் எழுத்துக்கள்

- 2003 ஆம் ஆண்டில், இவரது கிடை என்ற கதை ஒருத்தி என்ற பெயரில் தமிழ்த் திரைப்படமாக தயாரிக்கப்பட்டு இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது.
- 1992 இல், இவரது கரண்ட் என்ற சிறுகதை இந்திய தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் கரண்ட் (கரண்டு என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு கே. அரிகரன் இயக்கிய இந்தித் திரைப்படம்).

விருதுகள்

- 1971 – தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற விருது
- 1979 – இலக்கிய சிந்தனை விருது
- 1990 – சாந்தோம் இபன்னாட்டு கிறித்தவ சங்கத்தின் சிறந்த எழுத்தாளர் விருது
- 1991 – கோபல்லபுரத்து மக்கள் புதினத்துக்காக சாகித்ய அகாதமி விருது
- 2008 – எம்.ஏ. சிதம்பரம் விருது
- 2016 – கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் தமிழ் இலக்கியச் சாதனை விருது.
- 2016-17 ஆம் ஆண்டிற்கான மனோன்மணியம் சுந்தரனார் விருது.

நூல்கள்

அகராதி

- கரிசல் வட்டார வழக்கு அகராதி

நாவல்கள்

- கோபல்ல கிராமம்
- கோபல்லபுரத்து மக்கள் (1991, சாகித்திய அகாடமி விருது வென்றது)
- அந்தமான் நாயக்கர்

குறுநாவல்கள்

- கிடை
- பிஞ்சுகள்

சிறுகதை தொகுதிகள்

- கன்னிமை
- மின்னல்
- கோமதி
- நிலை நிறுத்தல்
- கதவு (1965)
- பேதை
- ஜீவன்
- நெருப்பு
- விளைவு
- பாரதமாதா
- கண்ணீர்
- வேட்டி
- மாயமான்
- புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள்
- காதில் விழுந்த கதைகள்

- மிச்சக் கதைகள் (2021)

கட்டுரைகள்

- வயது வந்தவர்களுக்கு மட்டும்
- ருஷ்ய மண்ணின் நிறம் என்ன?
- புதுமைப்பித்தன்
- மாமலை ஜீவா
- இசை மகா சமுத்திரம்
- அழிந்து போன நந்தவனங்கள்
- கரிசல் காட்டுக் கடுதாசி
- மாந்தருள் ஒரு அன்னப்பறவை
- கிராமிய விளையாட்டுகள்

அனுபவக் கட்டுரைகள்

- கரிசல்கதைகள்
- கி.ரா- பக்கங்கள்
- கிராமியக் கதைகள்
- குழந்தைப் பருவக் கதைகள்
- கொத்தை பருத்தி
- பெண்கதைகள்
- பெண்மணம்
- கதை சொல்லி(2017)

தொகுதி

- நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம்

திரைப்படமாக்கப்பட்ட கதைகள்

- ஒருத்தி (கிடை என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு அம்சன் குமார் இயக்கிய திரைப்படம்)
- கரண்டு (கரண்டு என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு ஹரிகரன் இயக்கிய இந்தி திரைப்படம்)

கி. ராஜநாராயணன் – கலந்துரையாடல் நிகழ்வு - 06-12-2020
https://www.youtube.com/watch?v=lWjV8kluRYQ [1:18:16]

கி. ராஜநாராயணன்

1.1 கி. ராஜநாராயணன்



தற்பொழுது வாழ்ந்துவரும் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் கி.ரா., இவரின் பிறந்த நாள் 16.9.1923. சொந்த ஊர் கோவில்பட்டிக்கு அருகிலுள்ள இடைச்செவல் கிராமம். பெற்றோர்கள் கிருஷ்ண ராமானுஜன், இலட்சுமி அம்மாள், மனைவி கணபதி அம்மாள். இரு மகன்கள் திவாகர், பிரபாகர். இவர் 40 வயதிற்குப் பிறகு எழுத ஆரம்பித்து சிறுகதை, நாவல், குறுநாவல், கிராமியக் கதை, அகராதி, கடிதம் என்று தமிழின் பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம் பதித்திருக்கிறார்.

• **பெற்ற பரிசுகள்**

மிகச்சிறந்த நாவலாசிரியரான கி.ராஜ நாராயணனுக்குக் கிடைத்த பரிசுகள் பின்வருமாறு :

கதவு (சிறுகதைத் தொகுதி)
-
தமிழ்வளர்ச்சி மன்றப் பரிசு (1965)
பிஞ்சுகள் (குழந்தைகள் நாவல்)
-
இலக்கியச் சிந்தனை பரிசு (1979)
கோபல்லபுரத்து மக்கள் (நாவல்)
-
சாகித்ய அகாதெமி விருது

1.1.1 படைப்புகள்

தமிழில் ஒரு சமூக வரலாற்று நாவலைக் கூறமுடியுமானால் அது **கோபல்ல கிராமம்** தான். “ஒரு நாவலாசிரியனே தனது சமூகத்தைப் பற்றி எழுதுவதில் முதன்மையானவன்” என காதரின் லிவர் என்பார் (the Novel and the Reader P.97) கூறும் கூற்று கி.ரா., நடைக்குப் பொருந்தும்.

கோபல்ல கிராமம் எழுதிய கி.ரா., **கோபல்லபுரத்து மக்கள்** என்ற புதினத்தையும் எழுதியுள்ளார். இந்த இரு புதினங்களும் சமூக வரலாற்றுப் புதினங்களாகத் திகழ்கின்றன. வழக்கமான நாவல்களில் வரும் கதைப் பின்னலும், நிகழ்ச்சித் தொடர்ச்சியும் இல்லாவிட்டாலும் ஒரு புது முயற்சியாகக் **கோபல்லபுரத்து மக்கள்** என்ற நாவலைக் கி.ரா. படைத்துள்ளார்.

1.1.2 தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறுமிடம்

கி.ரா., சிறுகதை, நாவல், குறுநாவல், கடிதம் போன்ற பல துறைகளில் தன் பங்களிப்பைச் செய்திருந்தாலும் 'கரிசல் இலக்கிய முன்னோடி' என்ற வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுகிறார்.

நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடத்தில்
ஒதுங்கினேன், பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல்
மழையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டேன்

என்று சொல்லும் கி.ரா.,வைப் புதுவைப் பல்கலைக் கழகம் பேராசிரியராக்கிப் பெருமையடைந்துள்ளது. இவர் 'கதவு' என்ற சிறுகதை மூலம் தமிழ்ச்சிறுகதை உலகின் கதவை விலாசமாகத் திறந்து வைத்தவர். இவர் 70க்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்ததோடு இரு நாவல்களையும் படைத்துள்ளார்.

- ***தனித்தன்மை***

நாவலாசிரியர் தனக்குக் கிடைத்த கருவை விளக்கிக் காட்டவே, கதைப்பின்னல், பாத்திரங்கள், பின்னணி என்று பலவற்றை அமைத்துக் கொள்கிறார். அந்த வகையில் கி.ரா., விவசாயிகளின் போராட்டத்தில் கலந்து கொண்டு, விவசாயிகளின் நிலையை நன்கு உணர்ந்து கிராம மக்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு நாவல்களைப் படைத்துள்ளார். மேலும் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்க்கையைக் குறியீடாக்கி மனிதர்கள் மனநிலையை விளக்கியுள்ளார். சங்க இலக்கியம் இயற்கையோடு இயைந்த மக்கள் வாழ்க்கையைச் சித்திரிப்பதைப்போல, உரைநடை இலக்கியத்தில் இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்வைக் கூறுவது இவரது தனிச் சிறப்பாகும்.

கி.ரா- வன்கொடுமைச்சட்டம் நீதிமன்றத்தீர்ப்பு

https://www.jeyamohan.in/139495/

ஆசிரியருக்கு,

உங்களுக்கு தெரிந்திருக்கும் என்று நினைக்கிறன், கி.ராஜநாராயணன் மே ஒரு தீண்டாமை வன்கொடுமை குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது. கி.ரா அவர்கள் **சண்டே இந்தியா** என்ற இதழுக்கு அளித்த பேட்டியில், தாழ்த்தப்பட்ட சமூகத்தை அவமதிக்கும் வகையில் பேசியதாக கூறி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யவேண்டி கதிரேசன் என்பவரால் மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவும் நீதிமன்றத்தால் விசாரனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அந்த குற்ற வழக்கை ரத்து செய்யக்கோரி திரு. கி.ரா, மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இறுதியில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் கி.ரா அவர்கள் மேல் தொடுக்கப்பட்ட வழக்கை ரத்து செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இது அனைவருக்கும் தெரிந்திருக்கும். சில நாளிதழ்களிலும் செய்தியாக வந்தது.

ஆனால் இந்த வழக்கின் முக்கிய அம்சம் என்பது இந்த குற்ற வழக்கை ரத்து செய்ய தீர்ப்பில் கொடுக்கப்பட்ட காரணங்கள். இந்த தீர்ப்பை அளித்தவர் **நீதிபதி G.R.சுவாமிநாதன்.** சட்டநுணுக்கங்கள் அறிந்த, திறமையான, நேர்மையான, சட்ட புத்தகங்கள் மட்டுமின்றி மற்ற புத்தகங்களையும் படிக்கக்கூடிய நீதிபதி.

பொதுவாக இதுபோன்ற வழக்குகளில் கூறப்படும் குற்றச்சாட்டானது குறிப்பிட்ட சட்டப்பிரிவின் வரையறைக்குள் வருகிறதா இல்லையா என்பதை மட்டும் தான் நீதிமன்றம் பார்க்கும். சில அரிதான தருணங்களில் வழக்கின் பொருண்மைகளை (Facts) கவனத்தில் கொண்டு வழக்கை தீர்மானிப்பார்கள்.

இந்த வழக்கில் கி.ரா அவர்கள் மேல் வைக்கப்பட்ட குற்றச்சாட்டு இதுதான். சண்டே இந்தியாவிற்கு பேட்டியளிக்கையில், நீங்கள் ஏன் தலித் வாழ்க்கையை பற்றி எழுதவில்லை என்ற கேள்விக்கு, "அவன்" மொழி (dialect) எனக்கு தெரியாது ஆகவே அதை எழுத நான் முயலவில்லை என்கிறார். "அவன்" என்று ஒருமையில் கூறி தாழ்த்தப்பட்ட சமூகத்தை அவர் இழிவுபடுத்திவிட்டார், இதன் மூலம் SC & ST Act பிரிவு மூன்றின் படி குற்றம் இழைத்துள்ளார் என்பது குற்றச்சாட்டு. இதற்கு குறைந்தது ஆறு மாதம், அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனை அளிக்கலாம்.

இந்த வழக்கிலும் நீதிபதி கூறப்பட்ட குற்றச்சாட்டானது சட்டப் பிரிவின் வரையறைக்குள் வருகிறதா என விவாதிக்கிறார். அவன் என்று ஒருமையில் கூறுவது இழிவுபடுத்துவது ஆகுமா என்பதை திரு. ஜெகநாத் என்ற இளம் தமிழ் அறிஞர் உதவியுடன் சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை "அவன்" என்ற சொல் எவ்வாறு பொருள்படுகிறது என ஆராய்கிறார். புறநானூற்றில் ஆரம்பித்து திருக்குறள், திருவாசகம், திருவாய்மொழி, பெரியபுராணம், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் வரை உள்ள பாடல்களில் அவன் என்ற சொல் குறிப்பிடும் அர்த்தத்தை விளக்குகிறார். மேலும் வழக்குகளில் இதுபோன்ற தருணங்களில் முன்பே உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புகளையும் கருத்தில் கொண்டு, கி.ரா அவர்கள் அவன் என்று கூறியது தாழ்த்தப்பட்ட சமூகத்தை இழிவுபடுத்தும் நோக்கில் சொல்லப்பட்டது அல்ல என்று கூறி ,அதனால் அவர் மேல் போடப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

இதோடு நின்றிந்தால் இந்த வழக்கு மற்ற வழக்குகள் போல் ஆயிரத்தில் ஒன்றாக மாறியிருக்கும் .ஆனால் இது சிறப்பு பெறுவதற்கு காரணம், இன்று இப்படிப்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டு எவ்வாறு பேச்சு சுதந்திரமும் கருத்து சுதந்திரமும் ஒடுக்கப்படுகிறது என்று கூறி; அதற்கு எதிராக கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்தின் முக்கியத்துவத்தையும் அவற்றை நீதிமன்றங்கள் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் மிக விரிவாக விளக்குகிறார் என்பதுதான்.

பிரிட்டிஷ் வரலாற்று ஆய்வாளர் திமோதி கார்டன் ஆஷ், எழுத்தாளர் V.S.நைபால், அமெரிக்காவின் மிக போற்றத்தக்க நீதிபதிகளில் ஒருவரும் பல பிரபலமான சட்ட புத்தகங்களை எழுதியவருமான ஹாரி கால்வென் போன்றோர்கள் கருத்து சுந்திரத்தை பற்றி கூறிய புகழ் பெற்ற மேற்கோள்களை குறிப்பிடுகிறார்.

மேலும் சமீபத்தில் ராமச்சந்திர குகா, அபர்ணா சென், மணிரத்தினம் போன்ற முக்கிய ஆளுமைகள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும் விதமாக பிரதம அமைச்சருக்கு எழுதிய கடிதத்தை காரணம் கூறி அவர்கள் மேல் ஒருவர் வழக்கு தொடுத்து, நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 49 ஆளுமைகள் பெயரிலும் குற்ற வழக்கு பதியப்பட்டமை [அதுவும் தேச துரோக வழக்கு] எவ்வாறு அறிவார்ந்த சமூகத்தில் கணிசமான கலக்கத்தை உண்டுபண்ணியது என்பதையும் குறிப்பிடுகிறார்.

ஹுசைன் அவர்கள் மீது அவரின் ஓவியத்திற்காக நாடு முழுதும் தொடுக்கப்பட்ட பல்வேறு வழக்குகளையும், பிறகு அவற்றை தில்லி உயர்நீதிமன்றம் ரத்து செய்ததையும் பதிவு செய்கிறார். பெருமாள் முருகன் வழக்கை பற்றியும் கூறுகிறார். மிக முக்கியமாக கருத்துச் சுதந்திரத்தை பற்றிய மகாத்மா காந்தியின் வார்த்தையை எடுத்து கூறி, அவற்றை பாதுகாக்க நீதிமன்றங்களின் கடமையையும், பொறுப்பையும் வலியுறுத்திக்கிறார்.

இவை அனைவற்றையும் விட இந்த தீர்ப்பின் மணிமகுடம் என்று நான் கருதுவது கி.ரா என்ற மகத்தான இலக்கிய ஆளுமையை அங்கிகரித்து கவுரவித்தது. ஞானபீட விருது அளிக்கப்படவேண்டிய மிக தகுதிவாய்ந்த நபர் கி.ரா என்று பலர் விரும்புவதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார். உச்சமாக, இந்த வழக்கை ரத்து செய்வதன் மூலம் இந்த குறைந்தபட்ச மரியாதையையாவது கி.ரா அவர்களுக்கு அளிக்கும் கடன்பட்டுள்ளது இந்த நீதிமன்றம் என்று முடிக்கிறார்.

இந்தவகையில் இதை வரலாற்றின் முக்கியமான ஒரு தீர்ப்பாக நான் பார்க்கிறேன். ஆனால் பெருமாள் முருகன் வழக்கு போல் இது அவ்வளவாக விவாதிக்கப்படவில்லை. (முக்கியமான வழக்கு தீர்ப்புகளை படிந்துவிடும் கிருஷ்ணன் கூட இதை தவறவிட்டுவிட்டார்) .இந்த வழக்கின் தீர்ப்பு அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டிய ஒன்று. குறைந்தபட்சம் இலக்கிய உலகில் இருபவர்களாவது.

வி.செ.செந்திகுமார்



ஜி.ஆர்.சுவாமிநாதன்

அன்புள்ள செந்தில்குமார்

இந்தவழக்கை நான் இப்போதுதான் முழுமையாக கவனிக்கிறேன். ஐயமே இல்லாமல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு. இலக்கியம், சிந்தனை எதற்கும் எந்த மதிப்பும் இல்லாத தமிழ்ச்சூழலில் நீதிமன்றத்தில் இருந்து இப்படி ஒரு தீர்ப்பு வந்திருப்பது வியப்பளிக்கிறது. நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அறிவுச்சூழலின் நன்றிக்குரியவர். தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றில் இதன்பொருட்டே அவர் பெயர் என்றுமிருக்கவேண்டும்.

கி.ராஜநாராயணன் தமிழகத்தின் வரலாற்றுநாயகர். நம் சந்ததிகள் எண்ணி பேசப்போகும் ஆளுமை. இன்றிருப்போர் மாய என்றுமிருக்கும் பெயர்களில் ஒன்று. இப்படி ஒரு வழக்கு அவர்மேல் தொடுக்கப்பட்டது என்பதே எதிர்காலத்தில் நம்மை எண்ணி நாம் கூசுவதற்கு வழிவகுக்கும். அவர் அடிப்படையில் இடதுசாரி. மானுடம்பேசிய தலைமுறையைச் சேர்ந்தவர். மானுட சமத்துவத்திற்காக, விடுதலைக்காக போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறைசென்றவர். எந்நிலையிலும் சொல்லில் அல்லது எண்ணத்தில் ஒரு பிழை நிகழாத தற்கோப்பு கொண்டவர். அவர் மேல் இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்பவருக்கு அவர் எவரென்றே தெரியாதென்பதுதான் உண்மை

கீழமைநீதிமன்றங்களில் எவரும் எதையும் வழக்காகப் போட்டு எவரையும் அலைக்கழிக்க வைக்கமுடியும் என்னும் நிலை இன்று நிலவுகிறது. இதைப்போல கருத்துரிமைக்கும் அறிவுச்செயல்பாட்டுக்கும் எதிரான செயல்பாடு வேறில்லை. ஒரு கருத்து உண்மையா, அறமுள்ளதா என்பதை நீதிமன்றம் கூறவேண்டும் என்றால்; எல்லாவற்றையும் ஆதாரபூர்வமாக நீதிமன்றங்களில் நிரூபிக்கவேண்டும் என்றால் இங்கே எவர் எதைப்பேசமுடியும்? அதிலும் ஆண்டுக்கணக்காக நீதிமன்றங்களில் ஏறி இறங்கி ஒவ்வொரு சொல்லையும் நிறுவவேண்டும் என்றால் அதன்பின் என்ன இலக்கியம், என்ன கருத்துப்போர்?

தமிழ் இலக்கியச்சூழலில் இந்த வகையான நீதிமன்றநடவடிக்கைகள் எப்போதுமே இருந்ததில்லை.மிகக்கடுமையான பூசல்கள் நிலவிய எழுபதுகளில்கூட. முதன்முதலாக அதை இலக்கியச் சூழலில் அரங்கேற்றியவர் `காலச்சுவடு' உரிமையாளர் கண்ணன். அவருக்கு தமிழ் இலக்கியச்சூழல், அறிவுச்சூழல் பற்றி அன்றும் இன்றும் எந்த அறிதலும் இல்லை. ஆனால் அவரே இந்தப்போக்குக்குத் தொடக்கம் என்பது ஒரு வகை வரலாற்று இடம்தான்.

தொண்ணூறுகளில் காலச்சுவடுக்குமேல் எளிமையான விமர்சனத்தை முன்வைத்தவர்களுக்கெல்லாம் வழக்கறிஞர் அறிவிக்கைகள் அனுப்பப்பட்டன. சுந்தர ராமசாமியின் நெடுநாள் நண்பரும், மூத்த விமர்சகருமான வெங்கட் சாமிநாதன்கூட தப்பவில்லை. வழக்கறிஞர் அறிவிக்கை கண்டு கலங்கி, மன்னிப்பு கோரி கண்ணனுக்குக் கடிதம் எழுதிவிட்டு, அவர் வருந்தி தொலைபேசியில் என்னிடம் பேசியதை நினைவுகூர்கிறேன். நான் சுந்தர ராமசாமியிடம் அதைப்பற்றிப்

பேசவேண்டும் என அவர் கோரினார். எனக்கே பேச்சுவார்த்தை இல்லாமலாகிவிட்ட நிலை என நான் அவரிடம் சொன்னேன்.

அங்கே தொடங்கியது இந்தப்போக்கு. அதன்பின் அந்த நஞ்சு காலச்சுவடுக்கே திரும்ப அளிக்கப்பட்டது. `பிள்ளைகெடுத்தாள்விளை' என்னும் கதை தொடர்பாக சுந்தர ராமசாமியை வன்கொடுமைச் சட்டம்கீழ் கைதுசெய்யவேண்டும் என்று ஆதவன் தீட்சண்யா என்ற எழுத்தாளருடன் ஒரு குழு கிளம்பியது. முதிய வயதில் சுந்தர ராமசாமியை கலங்கவைத்த நிகழ்வு அது. வசை அவருக்குப் புதிதல்ல, ஆனால் கைதுசெய்யப்படலாம், சிறுமைசெய்யப்படலாம் என்னும் அச்சம் அவரை அலைக்கழித்தது. அவர் நீண்டநாள் அமெரிக்காவிலேயே இருக்கநேர்ந்தது. ஒருவகையில் அவர் உளச்சோர்வடைந்து சாவை நோக்கிச் செல்ல அது ஒரு காரணம்

என்னைப்பொறுத்தவரை எந்த ஒருவசைக்கும் எந்த ஒரு அவதூறுக்கும் உச்சகட்ட எதிர்வினை என்பது மௌனம்தான். என்மேல் அவதூறு வழக்குகள் போடப்பட்டன. எஸ்.வி.ராஜதுரை விடுத்த வழக்கு நிலுவையிலுள்ளது. ஆனால் அவர்மேல் ஓர் அடிப்படை மதிப்பு இருப்பதனால் நான் அவருக்கு எதிராக எந்த வழக்கும் தொடுக்கவில்லை. உண்மையில் கடைசிநேரத்தில் தயங்கிவிட்டேன். என்றோ ஒருநாள் அவர்மேல் நான் வழக்குதொடுத்தேன் என வரலாற்றுப் பதிவு வந்துவிடலாகாது என எண்ணினேன்.மற்றபடி அவதூறு வழக்குகளை எதிர்கொள்ளும் வழி என்பது திரும்ப வழக்கு தொடுப்பது மட்டுமே.

இந்த தீண்டாமை வழக்குகள் அறிவுஜீவிகள்மேல் ஏவப்படுவதை [கொள்கையளவில்] தொடங்கிவைத்தவர் ஆதவன் தீட்சண்யா. தீண்டாமை ஒழிப்பு முன்னணி அம்பேத்கர் பற்றி ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார் என்பதற்காக வசுமித்ர என்னும் கவிஞர்மேல் தீண்டாமை வழக்கு தொடுத்திருக்கிறது என்று கேள்விப்பட்டேன்.

அதாவது அம்பேத்கர் பற்றி எந்த எதிமறைக் கருத்து சொன்னாலும் அது வன்கொடுமைக்குற்றம், பிணையில் வரமுடியாதபடி கைதுசெய்யவேண்டும் என்கிறார்கள் இவர்கள். இந்திய அரசியல்சட்டத்தில் பேச்சுரிமையை அடிப்படை உரிமையாகச் சேர்த்த, ஜனநாயகத்தின் அடிப்படைகளை வகுத்த ,அம்பேத்கரின் பெயரால் இந்த கருத்துவன்முறை நிகழ்த்தப்படுகிறது. இது இன்று ஒரு பொதுப்போக்காக, ஒருவகை பொதுவெளி மிரட்டலாகவே ஆகிவிட்டிருக்கிறது.

இதனால் முதன்மையாகப் பாதிக்கப்படுபவர்கள் தலித்துக்கள்தான். உண்மையில் இன்னமும் ஊர்களில் கடுமையான தலித் ஒடுக்குமுறை நிலவுகிறது. இன்னமும் எளிய மானுடஉரிமைகள் அளிக்கப்படுவதில்லை. வன்கொடுமைத் தடைச்சட்டம் என்பது அந்த ஒடுக்கப்படும் தலித்துக்களுக்கு உதவும்பொருட்டு உருவாக்கப்பட்டது. அதை இப்படி மிரட்டலுக்காகவும் அரசியல்நோக்கங்களுக்காகவும் அப்பட்டமாகப் பயன்படுத்தினால் அச்சட்டம் மேல் அவநம்பிக்கை உருவாகிறது. அதன் மானுடநேய அடிப்படையே மறுக்கப்படுகிறது. தலித்துக்கள் உண்மையிலேயே ஒடுக்கப்படும் சூழலில் இந்த வழக்கு போடப்பட்டால்கூட பொதுமக்கள் அதை போலிவழக்கு என எண்ணவே இது வழிவகுக்கும்.

இதைப்பற்றி இன்று உண்மையில் கவலைப்படவேண்டியவர்கள் திருமாவளவன் போன்ற தலித் தலைவர்கள்தான். நீண்டகாலப் போராட்டங்கள் வழியாக தலித்துக்கள் வென்றெடுத்த உரிமை வன்கொடுமைத் தடுப்புச்சட்டம். அது இப்படி பயன்படுத்தப்பட்டால் அதன் உண்மையான நோக்கமும் பயனும் இல்லாமலாகும். அடைந்ததெல்லாம் வீணாகும்.

சுந்தர ராமசாமி ஆதவன் தீட்சண்யா போன்றவர்களால் வேட்டையாடப்பட்டபோது ரவிக்குமார் போன்றவர்கள் சுந்தர ராமசாமிக்கு ஆதரவாக இருந்தனர். அவருக்காக பேசினர். தமிழ்ச்சூழலில் இருக்கும் அடிப்படையான அறிவுநாணயத்தின் வெளிப்பாடாக அது அமைந்தது. இங்கே கருத்துரிமைக்கும் அறிவுச்செயல்பாடுகளுக்கும் காவலாக அது என்றும் திகழவேண்டும்.

கடிதம், கமல், வண்ணதாசன், சிறுவர் இலக்கியம்...

https://www.vikatan.com/oddities/miscellaneous/68456-kirajanarayanan-birthday-special

உங்களுக்கு யாரிடமிருந்தெனும் கடிதங்கள் வருகின்றனவா. நீங்கள் யாருக்கேனும் கடிதம் எழுதுகிறீர்களா? கு.அழகிரிசாமி பற்றிய நினைப்பு வருமா?

கடிதமமை ஓய்ந்து பலகாலம் ஆகிவிட்டதே. நினைக்கும் போது பெருமூச்சு விடத் தோன்றுகிறது. என்னுடைய மரத்தில் முதல் காய்ப்பே கடிதங்கள்தான். எனது முப்பது வயதுக்கு மேலேதான் கதைகள் என்று அரும்புவிடத் தோன்றின.
முறையான எழுத்துப் பயிற்சி கிடையாது. ழகர, ளகர, ரகர றகர மற்றும் ஒற்றுகள் போன்ற எழுத்துப்பிழைகள், வார்த்தை வாக்கியப் பிழைகள் என்று. 'கோதண்டம்' போன்ற தண்டனைகள் தரத்தக்க குற்றங்கள் கொண்டவன் அடியேன். இப்பேர்ப்பட்ட 'நிரட்சரகுட்சி'யானவனுக்கு ஒரு மத்திய அரசு சுதந்திரப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் பேராசிரியர் பதவி தந்தார்களே; என்ன சொல்ல, இங்கே உள்ள தமிழ்ப் பேரறிஞர்கள் கடுமையாக என்னை எதிர்த்ததில் என்ன தப்பு?ஆனாலும் எனது கடிதங்களுக்கு நண்பர்கள் மத்தியில் தனி மவுசு இருந்தது. விடிந்தால்த் தெரியும் வெளிச்சம் கு.அழகிரிசாமி இல்லாமல் கடிதங்கள் கிடையாது.

கமலஹாசன், அவரது பிறந்த நாளில் உங்களைச் சந்தித்து ஒரு லட்சம் கொடுத்து கௌரவித்ததாக அறிகிறோம். அந்த சந்திப்பைப் பற்றிச் சொல்ல முடியுமா?

எதிர்பாராத ரசமான சந்திப்புதான். பதிவு செய்யலாம்.
சென்னைக்கு என்னால் வர முடியாத நிலை என்று சொல்லி விட்ட பிறகு, அவரே இங்கு வந்தார். கமலை நான் இவ்வளவு கிட்டத்தில் வைத்துப் பார்த்ததில்லை; தூரத்தில் வைத்தும் பார்த்ததில்லை.அவரிடம் எனக்கு அதிசயமாகப் பட்டதைச் சொல்ல வேண்டாமா.

கிருஷ்ணரைப் பார்க்க சுதாமா என்கிற குசெலர் கிழிந்த வேட்டியைக் கட்டிக் கொண்டு போனாராம். என்னைப் பாக்க வந்த கமலும் கிழிந்த கால்ச் சட்டையை மாட்டிக் கொண்டுதான் வந்தார்!அந்த வெளிர் நீல நிற முழுக்கால்ச் சட்டையின் ரெண்டு மூட்டுகளிலும் கிழிந்து ஓட்டை விழுந்திருந்தது.'அட, இது என்ன' என்று தோன்றியது.
அவரிடம் எனது முதல்ப் பேச்சே இப்படி ஆரம்பமானது. "பாண்டிச்சேரிக்கென்றே போட்டுக்கிட்டு வந்தீகளா இப்படி?"கமல் எத்தனை மாதிரியெல்லாமோ சிரிக்கத் தெரிந்தவரல்லவா. அதிலிருந்து சத்தமில்லாத ஒரு சிரிப்பைச் சிரித்தார். பதில் பேசவில்லை படு அடக்கம்!அவருடைய சுபாவம் இது இல்லை என்பது தெரியும் பேசலாமே என்று நான் கேட்டதும், தன்னோடு வந்த ஒருவரைக் காட்டிப் பேச ஆரம்பித்தார்.இவங்க என் நற்பணி மனத்தைச் சேந்தவங்க. இவங்களுக்கு நீங்க எதாவது சொல்லுங்க என்றார்.அந்த அன்பர் எங்களுக்கு அருகில் தரையில் உட்கார்ந்திருந்தார். எல்லோருக்கும் உட்கார நாற்காலி போட முடியாத சிறிய இடம் அது. என் அருகில் நாற்காலியில் சுகா (நெல்லைக் கண்ணன் அவர்களுடைய பிள்ளையாண்டான்) கமலோடு வந்தவர் உட்காந்திருந்தார். எனதுஇடது பக்கம் நாற்காலியில் கமல்.
சுகாவையும் நான் அப்போதுதான் பார்க்கிறேன். எனக்குப் பேச்சை எப்படி ஆரம்பிக்க என்று தெரியவில்லை. புத்திமதி போல எதையாவது சொன்னால் மடத்தனமாக இருக்கும். உபதேசமாகச் சொல்ல நான் ஒன்றும் மகிழ்வானந்தா சுவாமிகள் இல்லை.
"சுகா, ஒரு ராகம் பாடுமேம்" என்றும் அவரை இப்போது சொல்ல முடியாது. சொன்னால் பாடுவார்தான்; எனக்கும் ஆசை உண்டு; இப்போ இவர்கள் வந்தது அதுக்காக இல்லையே. இப்படி யோசித்துக் கொண்டிருந்தவன் அந்த நற்பணி அன்பரைப் பார்த்து"உங்களுக்குக் கமல் என்கிற ஒரு அருமையானவர் கிடைத்திருக்கிறார்" என்று என் வாய் பேச ஆரம்பித்தது!வாய் சும்மா இருக்காதே. ஆரம்பித்துவிட்டால் நிறுத்துகிறதுதான் சிரமம்.ஒரு பைசா கொடுத்து பேசக் கூப்பாட்டு விட்டு ஒம்பது பைசா தந்து நிறுத்தச் சொன்னார்களாம்! வாய்களின் சங்கதியே இப்படித்தான். விசயம் இல்லாமல் பேசுகிறதும் எழுதுகிறதும் படு சுலபம்.

சினிமாக்காரர்கள் இருக்கும் இடத்தில் தடுக்கி விழிந்தாலும் ஒரு சினிமா மேல்த்தான் விழணும். இளவட்டம் என்று இருப்பவன் ஒவ்வொருவனுக்கும் ஒரு அழகிக் கன்னிகை பேரில் ஒரு கனவு இருக்கும் என்று ஒருவர் சொல்ல, குணாவுக்கு அபிராமி கிடைத்தது போல என்று நான் சொன்னதும், கமல் வேறுபக்கம் பார்த்துக் கொண்டிருந்தவரின் காது - கண் போல் திருப்பாது என்றாலும் - என் பக்கம் கேட்கிறது தெரிந்தது. குணா எனக்குப் பிடித்த படம். அதில் நடிக்கும் அபிராமி என்னுடைய சென்னாதேவி போல் இல்லை எனக்கு.ஒவ்வொருவருக்கும் ஒரு முகம் அழகு, என்று சொல்லி, எப்படி அது என்று விவரித்தேன்.உலகமெல்லாம் சீதாதேவியின் அழகு பற்றி வியந்து கொண்டிருந்த போது கிஷ்கிந்தை நகரத்துப் பெண்களுக்கு, அதிலும் தங்கள் கணவன் மார்களைப் போரில் பறிகொடுத்துவிட்டு விதவைக் கோலத்தில் இருந்த பெண் குரங்குகளுக்கு, அப்பேர்ப்பட்ட அழகுபட்ட - சீதையைப் பார்க்கணுமே என்று தோன்றி விட்டதாம்.

பார்க்க முடியாது போலிருக்கே? அவர்கள் அவசரம் அப்படி.
கொஞ்சம் தாமதித்தாலும் பரதன் தீயில் பாய்ந்து செத்துப் போவனா -----------
இவர்களுக்கு ஒரு நன்றி கூட சொல்லாமல் இந்த தியாகிகளைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் பாராமுகமாகப் போய்விடுவது சரிக்கிடையாது என்றுபட்டது சீதைக்கு.
அவள் ராமனிடம் ஒரு வார்த்தை சொன்னபோது, விமானத்தை தாழப் பறக்க வைத்து எல்லாரும் சீதையைப் பார்க்கிறபடி போகட்டும் என்று உத்தரவிட்டான் ராமன்.

விமானம் தரையை ஒட்டிப் பறந்தது. எல்லாப் பெண்களும் சீத்தாதேவியைப் பார்த்தார்கள். முக்கியமாக பின் அழகையே கவனித்தார்கள்.ஏமாற்றமே ஏற்பட்டது கிஷ்கிந்தையில் பெண்கள் அனைவருக்கும்!விமானம் போகடும் போகட்டும் என்று சொல்லி விட்டார்கள். போய்விட்டது.தையின் அழகில் அப்படி என்ன குறை கண்டார்கள் இந்த பெண்கள்?எல்லாம் சரிதான்; வால் இல்லையே என்கிறார்கள் இவர்கள்!இப்போது நாம் பார்க்கிற டி.வி. ராமாயணக் கதைகளில் வருகிற எந்தப் பெண் வானரங்களுக்கும் நமது கலைஇயக்குனர்கள் வால் வைப்பதில்லை!இப்படி நான் சொல்லி முடித்ததும் கமல்கால்ப் புன்னகைபூத்தார்.நாங்கள் வீட்டில் உள்ளவர்கள் போக கமலோடு வந்தவர்கள் மட்டும்தான் இருந்தோம். வேற ஒரு கொசு கூட வரவில்லை. என் நண்பர் நாயக்கர் மட்டும் கமல் வருவதற்கு முன்னாலேயே வந்திருந்தார்.
அநியாயத்துக்கு இப்படி ஒரு சின்னக் கூட்டம் கூட இல்லாமல் இருக்கே என்று தோன்றிக் கொண்டே இருந்தது!கமல் சாருக்குக் குடிக்கக் காபி டீ என்று எதைக் கொடுக்க என்றும் யோசனை மனசுக்குள்.கமல் பாவநாசத்துத் திருக்கு மீசை வைத்திருந்தார். கூழோ பாயசமோ தர முடியாது; மீசைக்குத் தரும் மரியாதை இல்லை அது.எங்கள் சிறிய மருமகள நாச்சியாரு கமல் வருவதற்கு முன்னாடியே தயாராகக் கொஞ்சம் முருங்கை இலை பறித்து வைத்திருந்தாள். எல்லாருக்கும் ஒரு பெரிய்ய மடக்கு அளவுக்கு சிறிய சிறிய தம்ளர்களில் முருங்கையிலை சூப் தயாரித்து, குடிக்கும் சூட்டில் தாம்பாளத்தில் வைத்து எல்லோருக்கும் நீட்டினாள். அனைவரும் எடுத்துக் கொண்டோம்.

கமல் அதை எப்படிக் குடிப்பார் எனு நான் ஒருச் சாயந்த பார்வையில் கவனித்துக் கொண்டிருந்தேன். பெரும்பாலானவர்கள் மேல் உதட்டின் அளவுக்குக் கீழே மீசை இறங்கி விடாமல் இருக்க அதைக் கவனமாக மேலே தள்ளிவிட்டுக் கொண்டே இருப்பார்கள்.மேலாக்கைப் பெண்கள் சரி செய்து கொண்டே இருந்து பிறகு அதே பழக்கமாகி விடுவது போலத்தான் இதுவும். மீசையைப் போல உபத்திரவம் வேற ஒன்றிலும் இல்லை.என்ன செய்ய ஆம்பிளைக்கு அழகு மீசை என்று பெரியாட்கள் சொல்லி வைத்து விட்டார்களே.மீசையைப் பற்றிய கதைகள் ஏராளம்! கட்டபொம்மு ராஜசபை ஆசனத்தில் வந்து அமர்ந்து விட்டால், கவிராயர்கள் கலைவாணர்கள் என்று வரிசையாக வந்து பாடுவார்கள் அவரைப் புகழ்ந்து.புகழ்ச்சியை ரசிக்க ஆரம்பித்தவன் கதை உலகம் அறிந்ததுதான்.கட்டபொம்முவின் கை விரல்கள் சதா மீசையில்த்தான் இருக்கும். அடப்பக்காரன் அவர் முகத்தையே கவனித்துக் கொண்டிருப்பான். கவிராயர் பாடி முடிந்ததும் தாம்பாளத்தில் எவ்வளவு வைக்க வேண்டும் என்று கட்டபொம்முவின் விரல்கள் நாசுக்காகத் தெரிவித்து விடும். இடது பக்க மீசையைத் தடவினால் இவ்வளவு, வலதுபக்க மீசையைத் தடவினால் இரண்டு மடங்கு, இடதும் வலது தடவினால் நாலு மடங்கு இப்படியெல்லாம் உண்டுமாம்.

பார்க்கிறவர்களுக்கு, ராஜா மீசையை ஒதுக்குகிறார் என்று மட்டும் தான் தெரியும்.
குறிப்பிட்ட சில சாதிகளில் ஆண்கள் கட்டாயம் மீசை வைத்துக் கொள்ள வேண்டும்.
சில சாதிகளில் மீசை கூடாது. வேண்டும் என்றுதான் பாரதி மீசை வைத்துக் கொண்டார்.
'சாஸ்திரத்துக்கு' மீசை வைத்துக் கொள்வதும் உண்டு. மூக்குக் கீழே ஒரு ஈ வந்து உட்கார்ந்து இருப்பது போலலிருந்து பிறகு அது இட்லர் மீசையாகி, மேலு தடுமட்டும் வரை அகலமும், அதன் பிறகு விழுதுகள் இருபக்கமும் வடிவது போலாகி, திடீரென்று பாம்பு படமெடுப்பது போல் சீறி எழுந்து காது வரையிலும் போய், அகலமாகும்.
மீசையின் நீளம் படு நீளமாகி ஒரு மைல் தூரம் வரை(!) இருப்பதாகக் கேள்விப்பட்டும் படத்திலும் பார்த்திருக்கிறோமே.மீசைகளைப் பேணுவதே ஒரு தொழிலாக

கொண்டிருக்கிறார்கள் மக்கள்."பதநீர் குடிக்கப் பட்டை மீசை" என்று சொல் உண்டு. அதைக் கண்ணால்ப் பார்த்திருக்கிறேன்.ரசிகமணி அவர்களின் மீசை பற்றி தனியாகச் சொல்லணும்.மீசை புராணத்தை இத்துடன் முடித்துக் கொள்வோமா. ஒன்றைத்தொட்டு ஒன்று வந்து கொண்டே இருக்கும். கமலின் வருகை ஒரு, வசந்தம் வந்து போனது போல என்றும் நினைவில் நிற்கும்.

சினிமாவுக்கும் உங்களுக்குமான தொடர்பு ?

கி.ரா.வுக்கும் சினிமாவுக்கும் ஏதோ ஒரு தொந்தம் இருக்கும் போலிருக்கு!
என் வீட்டிற்கு வந்த நடிகர்கள், சிவகுமார், ஆர்.பார்த்திபன், நாசர், கே.பாக்யராஜ் இப்படி....
ஒருநாள் என்னுடைய நண்பர் தளபதி கோபால கிருஷ்ணன் கோவில்பட்டியிலிருந்து என்னைப் பார்க்க மெனக்கிட்டுவந்தார். என் வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ரொம்பப் பேரை அப்படியேத் திரும்பிப் போயிருக்கிறார்கள். இவர் கையில் எனது முகவரியை வைத்துக் கொண்டிருக்கிறார். சரியாகத் தெருவுக்கும் வந்து விட்டார்.
(என்னுடைய மகன் பிரபி தேடி வந்த போதும் ஒரு தமாஷ் நேர்ந்தது. எனது பெயர்க்கு முன்னால் ரைட்டர் என்று சொன்னதும் எந்த ஸ்டேஷனில் ரைட்டர் வேலை பார்க்கிறார் என்று கேட்டிருக்கிறார்கள்!)ஆனால் இவர் சொன்னது எழுத்தாளர். அப்படி இங்கே யாரும் இல்லையே என்று சொல்லி விட்டார்கள். ஒரே ஒருத்தர் சொன்னாராம்: "அட, நடிகர் நாசர் வந்த வீடா; இந்தா இதுதாம்" என்று காட்டினாராம். நண்பர் தளபதி என் வீட்டுக்குள் நுழையும் போதே நடிகர் நாசர் உங்க வீட்டுக்கு எப்போ வந்தார் என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

பாலியலில் நாம் உண்மையிலேயே சரியான வரலாற்றுப் பின்புலம் கொண்டவர்கள் தானா?

இந்தப் பாலியல் குறித்தப் புரிதலின்மை, பாலியல் வெறுமை எங்கிருந்து தொடங்குகிறது என்று நினைக்கிறீர்கள்.பாலியல் வெறுமை என்பது அறியாமையிலிருந்து தொடங்குகிறது.புரிதலின்மை என்பது மடத்தனத்திலிருந்து வருவது.ஒரு பதிலை ஒன்பது பேர்கள் ஒன்பது விதமாகப் புரிந்து கொள்ளலாம். வரலாறு என்பது முடிந்து விடுவதில்லை. நமது பெரியவர்கள் இவைகளைப் பற்றி ஏராளமாகச் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் நாம் உரித்த வாழைப் பழமே தேடுகிறவர்களாக இருக்கிறோம்.

இந்தக் காலகட்டத்தில் சிறுவர் இலக்கியம் எவ்வளவு முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?; சிறார் கதைகளும் எழுதியிருக்கிறீர்களே...

அதென்னெ "இந்தக் காலகட்டத்தில்"? சிறுவர்களுக்கான, சிறுவர்களுடைய இலக்கியம் எப்பவும் வேண்டும்தான்."பிஞ்சுகள்" குழந்தைகள் குறுநாவலை நான் எழுதி நான் முடித்து வைத்த போது, "இலக்கியச் சிந்தனை" அமைப்பிலிருந்து, கையெழுத்து பிரதிகளுக்கும் விருது கொடுப்போம் என்பதை அறிந்து அனுப்பினேன் விருதும் கிடைத்தது. அப்படி எழுதிய கையெழுத்துப் பிரதியை யாரும் - எந்தப் பிரபல இதழ்களும் - ரொம்ப நல்லா வந்திருக்கு; ஆனால் பிரசுரிக்க முடியாததற்கு வருந்துகிறோம் என்று சொல்லி விட்டார்கள்! அதனால் நேரடியாகப் புத்தகமாகவே வந்தது. அதற்கு அட்டைப்படம் வரைந்தவர் மதிப்பிற்குரிய ஆதிமூலம் அவர்கள் தான்.

1979ஆம் ஆண்டு என்று ஞாபகம் மீராவே கொண்டு வந்தார்.சிறுவர்களுக்கு எழுதும் போது நாம் சிறுவர்களாகவே ஆகிவிடுகிறோம். அது ஒரு ஆனந்தம்; படைப்பவருக்கும் படிப்பவருக்கும்.

கரிசல் இலக்கியத்தை உங்களைப் போன்றவர்கள் முன்னெடுத்ததைப் போல வேல ராமமூர்த்தி கருவக் காட்டு இலக்கியம் ஒன்று இருக்கிறது அதை நான் எழுதுகிறேன் என்கிறாரே....

இதற்கு பதில் ஒரே வரிதான்:ஆயிரம் பூக்கள் மலரட்டுமே.

தோழர் ஜீவாவோடு நெருங்கிப் பழகியவர் நீங்கள். அவருடனான அனுபவங்கள் சொல்லுங்கள்..

தோழர் ஒரு வித்தியாசமான மாமனிதர். மேடைப் பேச்சை ஒரு கலையாகவே தந்தவர். எனது ஆயுளில் அப்படி ஒரு மேடைப் பேச்சைக் கண்டதும் இல்லை கேட்டதும் இல்லை.குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் அவர் சொன்னதைக் கேட்டிருந்தால் கட்சி ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கும்.மதம் பிடிக்காத அந்த யானையைப் பற்றி எனது எழுத்தில் இரண்டு கட்டுரைகள் வந்திருக்கின்றன.அனுபவம் என்று கேட்டதால் சொல்லுகிறேன் மீண்டும் இதை:

"புல்லாய் பூண்டாய் புழுவாய்..." என்ற தமிழ்ப் பாடலை மேடை தோறும் சொல்லி, டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை இந்தப் பாடல் அப்படியே சொல்கிறதெ என்று வியப்பார்கள். அதில் கல்லாய் மனிதராய் என்று வரும் இடம், எப்படித் திரும்பவும் புல்லிலிருந்து உயிர் வளர்ச்சி மீண்டும் கல்லாகும் என்று தோழரிடம் கேட்கவும், "ஆமா... எப்படி அங்கே கல் வந்தது என்று யோசித்தார்.

"கல்லாய் மனிதராய் என்பதைகல்லா மனிதராய் என்று போட்டுப்பாருங்கள் என்றேன். அவர் முகத்தில் பிரகாசம் தோன்றியது.

ஜீவா அவர்கள் ரசிகமணியின் திருத்தங்களை ஏற்றுக் கொள்ளாதவர். இந்தத் திருத்தத்தைக் கேட்டவுடன், ரசிகமணியின் திருத்தங்கள் அனைத்தையும் நான் பார்க்கணுமே. அவருடைய பேரனிடம் சொல்லி ஏற்பாடு செய்யுங்களேன் என்று கேட்டுக் கொண்டார்.

எழுத்தாளர் வண்ணதாசனை அழைத்துக் கொண்டு போய் நீங்கள் தான் பள்ளியில் சேர்த்தீர்களா. அப்படி ஒரு முறை சொன்னதாக ஞாபகம். அப்போது தி.க.சி. என்ன செய்து கொண்டிருந்தார்.?

நினைத்துப் பார்க்கிற போது பல விசயங்கள் ஞாபகத்துக்கு வருகிறது; பல விசயங்கள் ஞாபகத்து வரமாட்டேனெக்கிறது. வண்ணதாசனிடம்தான் கேட்டுத் தெரிந்து கொள்ளணும். ஆனாலும் சொல்லுகிறேன்:
அவனை நாங்கள் கல்யாணி கல்யாணி என்றுதான் கூப்பிடுகிறது. ஆண்பிள்ளைகளை இப்படிப் பெண்பெயர்களால் கூப்பிடுகிறது ஒரு சுவாரச்யம். தமிழில் இப்படிப் பெயர்கள் நிறைய்ய இருக்கிறது. கோமதி, காந்தி, பேச்சி (அப்பன்) கஸ்தூரி இப்படி. கல்யாணி பெயரில் ஒரு ராகம் இருப்பதால் இன்னொரு விசேசம்.

கல்யாணியைக் கூட்டிக்கொண்டு போன அந்தப் பள்ளிக்கூடம், சுலோசன முதலியார் பாலத்தைக் கடந்து தாமிரபரணி ஆற்றங்கரையில், "பிள்ளையை விட்டு விட்டுப் பிலாப்பழம் எடுக்கப்போன ஓடை"யையும் கடந்து போகணும். அனேகமாக அது வண்ணார்ப்பேட்டையாக இருக்கலாம்.
கல்யாணியை எந்த வகுப்பில்... அய்ந்தா ஆஹா ஞாபகமில்லை. டவுனில் எத்தனையோ பள்ளிகள் இருக்க வண்ணார்பேட்டைக்கு ஏன் போகணும்; ஞாபகம் இல்லை.
தி.க.சி. என்னோடு வரவில்லை என்பது மட்டும் நல்லா ஞாபகம் இருக்கு.
அந்நேரத்தில் அதேபள்ளிக்கு "சாந்தி" இதழ் ஆசிரியர், தோழர் எஸ்.ஏ.முருகானந்தம் ஏன் அங்கே வந்தார் என்பது ஞாபகத்துக்கு வர மாட்டேன் என்கிறது.
எல்லாம் கனவில் நடந்தது போல் இருக்கிறது.

பிறந்தநாள் வணக்கங்கள் ஐயா!
-வெய்யில், **கதிர்பாரதி**
புகைப்படம்: புதுவை இளவேனில்

பேரா.சுந்தரனார் விருது

https://solvanam.com/2022/03/13/%e0%ae%aa%e0%af%87%e0%ae%b0%e0%ae%be-%e0%ae%9a%e0%af%81%e0%ae%a8%e0%af%8d%e0%ae%a4%e0%ae%b0%e0%ae%a9%e0%ae%be%e0%ae%b0%e0%af%8d-%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%b0%e0%af%81%e0%ae%a4%e0%af%81/

புதுவையிலிருந்து நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் வந்த புதிதில் கி.ராஜநாராயணனைப் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கும் முயற்சிகளை ஒவ்வொரு ஆண்டும் செய்தேன். பல்கலைக்கழகத்தில் தமிழியல் துறையை ஆரம்பித்து என்னை முதல் முழுநேர ஆசிரியராகத் தேர்வுசெய்த துணைவேந்தர் முனைவர் வே.வசந்தி தேவி அதனைத் தொடர்ந்து தூண்டிக்கொண்டே இருந்தார். "ஆறு மாதம் முதல் ஓராண்டு வரை நமது பல்கலைக்கழகத்திலும் அவர் வருகைதரு பேராசிரியராக நியமிக்க முடியும்; வருவார் என்றால் ஏற்பாடு செய்வோம்" என்றார். புதுவைக்குப் போன பின்பு திரும்பவும் கோவில்பட்டிக்குத் திரும்புவதில்லை என்ற முடிவை மனதளவில் எடுத்திருந்ததால் அந்த அழைப்பை அவர் ஏற்கவில்லை. ஒரு கருத்தரங்கிற்காகவாவது அழைத்துவிடலாம் என்று முயன்றபோதும் அவர் வருவதைத் தவிர்த்துவிட்டார். அதனால் அந்த முயற்சியையே கைவிட்டுவிட்டேன்.

தொண்ணூற்றைந்தாவது பிறந்தநாள் விழாவைப் புதுவைப் பல்கலைக்கழகத்தில் கொண்டாடிய நிலையில் அவரது படைப்புகள் குறித்து ஒரு விரிவான கருத்தரங்கம் ஏற்பாடு செய்து அவரை அழைக்கலாம் என்று முயற்சி செய்தோம். அதுவும் நடக்கவில்லை. கடைசியாக 2017 இல் பல்கலைக்கழகம் வழங்கும் உயரிய விருதான பேரா.சுந்தரனார் விருதை வழங்கிச் சிறப்பிப்பது என்று முடிவெடுத்துப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்தோம். அவரும் வருவதாக ஒத்துக்கொண்டார்.

அப்போது துணைவேந்தராக இருந்த பேரா.கி.பாஸ்கருக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு காத்திருந்தார்.

பேராசிரியர் சுந்தரனார் விருது 2013 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அப்போதைய துணைவேந்தர் முனைவர் அ.க. குமரகுருவின் முயற்சியில் ஓர் அறக்கட்டளை நிறுவப்பட்டு, அதன் வைப்புத்தொகையாக ரூ .25 லட்சம் நிதி ஒதுக்கப்பட்ட து. அதன் வட்டித்தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, பண்பாட்டுத்துறையில் சிறப்பான பங்களிப்பு செய்பவருக்கு ஒரு லட்சம் பணமுடிப்பும் ஒரு பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. தொடங்கப்பட்ட ஆண்டுக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் பேராசிரியர்களுக்கே அவ்விருது வழங்கப்பட்டது. அதனைக் கொஞ்சம் திசை திருப்பி, வருகைதரு பேராசிரியராகவும் படைப்பாளியாகவும் விளங்கிய கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணனுக்கு வழங்குவது என்ற முடிவை எடுத்தபோது பலரும் பாராட்டினார்கள். அதேநேரம் சிலரிடமிருந்து எதிர்மறைக்கருத்துகளும் வந்தன. பொதுவாக எதிர்மறைக்கருத்துடையவர்களுக்கு அவரது மொழி இலக்கியப்பங்களிப்பு என்ன என்பது தெரியாமல் இருந்தது. அதனால் விழா அழைப்பிதழோடு அவரது பங்களிப்புகள் குறித்த சிற்றேடு ஒன்றைத்தயாரித்து அனைவருக்கும் வழங்கினோம்.

ஒரு லட்சம் விருதையும் பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ள நேரில் வருவேன்; என்னைப் புதுச்சேரிக்கே வந்து அழைத்துச் சென்று திரும்பவும் புதுச்சேரியில் கொண்டுவந்து விடும் பொறுப்பை கழனியூரன் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று கடிதம் எழுதினார். கழனியூர் என்பது பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் இருக்கும் ஒரு சிற்றூர். அந்த ஊரின் பெயரைத் தனது புனைபெயராகக்கொண்ட கழனியூரன் கி.ரா.வின் நாட்டுப்புறக்கதைத் தொகுப்பு வேலையிலும் வட்டார வழக்குச் சொல்லகராதி உருவாக்கத்திட்டத்திலும் பங்கேற்றவர். அவரது கதைசொல்லி இதழின் ஆசிரியர் குழு உறுப்பினர். அவரும் என்னிடம் சொல்லிவிட்டுப் புதுவைக்குக் கிளம்பிப்போனார். கி.ரா. பல்கலைக்கழகத்திற்கு வரப்போகிறார் என்ற மகிழ்ச்சியில் எல்லா வேலைகளையும் செய்திருந்தோம். சிறப்பு அழைப்பாளராக அந்த ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்ற வண்ணதாசனை அழைத்திருந்தோம். வண்ணதாசனும் கி.ரா.வும் அன்பால் நெருங்கியவர்கள். வண்ணதாசனின் தந்தை தி.க.சி. காலம் தொடங்கிக் குடும்ப நட்புகொண்டவர்கள். மகிழ்ச்சியோடு அவரும் ஒத்துக்கொண்டார்.



எல்லா மகிழ்ச்சியும் விழாவிற்கு முந்திய நாள் முடிந்துபோனது. தனிக் கார் ஒன்றில் பயணம் செய்து நெல்லைக்கு வரும் ஏற்பாட்டிற்கு முன்பு மருத்துவரின் ஆலோசனைக்காகச் சென்றபோது "இப்போது பயணம் செய்வது நல்லதல்ல; முடிந்தால் ரயில் பயணம் மேற்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டதாகவும், உடனடியாக ரயிலில் சிறப்பு இருக்கைகள் பெற இயலவில்லை; எனவே மகன் பிரபியும் கழனியூரனும் வருகிறார்கள்; மன்னிக்கவும்" என்று தொலைபேசியில் சொல்லிவிட்டார்.

பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. துணைவேந்தருக்கு எப்படிச் சமாதானம் சொல்வது என்பதுதான் பெரிய சிக்கல். அவரது ஏமாற்றத்தைத் தீவிரமாகக் காட்டினார். விழாவை ஒருவாரம் தள்ளிவைக்கலாம் என்றார். ஆனால் அப்போதும் அவர் வருவார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை என்பது எனக்குத்தெரியும். எனவே துணைவேந்தரைச் சமாதானப்படுத்தி விழாவை நடத்தி பணமுடிப்பை அவரது மகனிடம் வழங்கி அனுப்பிவைத்தோம். எழுத்தாளர்களை பாராட்டுவது என்பது எழுத்திற்காகத்தானே என்ற தேற்றுதலோடு அவருக்குப் பேரா.சுந்தரனார் விருது **2016 -2017** ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்டது.

கி.ரா.வின் சொந்தக் கிராமம் இடைசெவல். அந்தக் கிராமத்தை உள்ளடக்கிய பகுதியில் இருக்கும் பல்கலைக்கழகம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். அதன் வளாகத்திற்குள் ஒருதடவையாவது அழைத்துவந்துவிட வேண்டும் என்று நினைத்த எனது நினைப்பும் பல்கலைக்கழகத்தின் ஆசையும் கடைசி வரை நிறைவேறவே இல்லை. என்றாலும் அவரது நாவல்களையும் சிறுகதைகளையும் பாடமாக்கிக் கற்பித்துக் கொண்டிருக்கிறது. முனைவர், ஆய்வியல் நிறைஞர் போன்ற பட்டங்களுக்கு ஆய்வாளர்கள் ஆய்வுசெய்து முடித்துள்ளார்கள். பாடத்திட்டத்தின் பகுதியாக வைத்து மாணாக்கர்களுக்குக் கற்பிக்கிறது.

கி.ராஜநாராயணனைக் கடைசியாகப் பார்த்தது ஏப்ரல், 2019. இந்தக் கல்வி ஆண்டின் இறுதியில் – 30, ஜூன் 2019 இல் ஓய்வு பெறுகிறேன். அதன் பிறகு புதுச்சேரிக்கு வரும்போது குடும்பத்தோடு வர முயல்கிறேன். "அமெரிக்காவில் இருக்கும் மகன் ராகுலனும் வருவதாகச் சொல்லியிருக்கிறான். அவனது மனைவி/மருமகள் பானுரேகா உங்களின் கதைகளை வாசித்தவர். பேரன் பெயர் முகிலன். சென்னையில் இருக்கும் மகள் சிநேகலதாவும் வருவார். மருமகன் பிர்ஜித்துக்கும் பாண்டிச்சேரியோடு தொடர்புண்டு. புதுச்சேரி சந்நியாசி குப்பத்தில் இருக்கும் ரானே பிரேக் லைன் என்னும் மோட்டார் வாகன உதிரிப்பாகத் தொழிற்சாலையில் வேலைசெய்தவர். அந்த நேரத்தில் தான் திருமணம். அவர்கள் வழிப்பேரன் ஹர்ஜித் நந்தா. பேரன்கள் இருவரையும் உங்கள் மடியில் உட்காரவைத்துக் கதை கேட்க வேண்டும் என நினைக்கிறார்கள் எனது பிள்ளைகள். புதுச்சேரிக்கு நீங்கள் வந்தபோது சிறுவர்களாக இருந்த பிள்ளைகள்; உங்கள் மடியில் உட்கார்ந்து கதைகேட்ட பிள்ளைகள் இப்போது அவர்கள் பிள்ளைகளை உங்கள் மடியில் உட்காரவைத்துக் கதை கேட்க நினைக்கிறார்கள்" என்று சொன்னபோது 'எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அழைத்துவந்துவிடுங்கள். நாமெ எவ்வளவு காலம் இருப்போம்' னு யாருக்குத் தெரியும் என்று சொன்னார். அப்படிச் சொன்னாலும் நூறு ஆண்டுகள் கடக்க வேண்டுமென்று ஆசை இருந்தது என்பதையும் அந்த முகம் சொன்னது. அப்படிச் சொல்லிவிட்டு

வந்தபிறகு பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு தேர்வு தொடர்பாகப் போனேன். அந்த முறை புதுச்சேரி ஊருக்குள் செல்லவேண்டிய குறிப்பான வேலை இல்லை. கி.ரா.வைப் பார்க்க மட்டுமே போக வேண்டும். காலையில் அந்த வேலைக்காகச் சென்னையிலிருந்துதான் கடற்கரைச் சாலை வழியாகப் பேருந்தில் வந்து இறங்கினேன். திரும்பவும் அதே பாதையில் பயணிக்க வேண்டும் என்பதால், பிற்பகல் பல்கலைக்கழகத்தின் முதன்மை வாசலுக்கு வந்த சென்னைக்குச் செல்லும் பேருந்துகள் நிற்கும் இடத்தில் நின்ற போது ஒரு கார் அங்கே நின்றது. சென்னை மீனம்பாக்கத்தில் 'ஏர்போர்ட் சவாரிக்காகப் போகிறது வண்டி; அடையார் அல்லது திருவான்மையூரில் இறங்கிக் கொள்ளலாம்; பேருந்து கட்டணத்தோடு 25 ரூபாய் அதிகம் என்றார். ஏறிவிட்டேன். ஊருக்குள் போகவில்லை. கி.ரா.வைப் பார்க்கவும் இல்லை. சில மாதங்கள் கழித்து கணவதி அம்மா மரணத்தின் போது எங்கும் போகமுடியாத நிலை. கண்ணுக்காக மருத்துவ மனையில் இருந்தேன். பின்னர் இலங்கைப் பயணம், கரோனா முதல் அலையில் வீடடங்கு. திருநெல்வேலியிலிருந்து திருமங்கலத்திற்கு என்று சொந்த அலைச்சல்கள்.

2019 ஆகஸ்டு அல்லது அக்டோபரில் பாண்டிச்சேரியில் போய் சில நாட்கள் தங்கிவிட்டுப் பழைய நினைவுகளை மீட்டுக்கொள்ள அவர்களும் தயாராகவே இருந்தனர். மீட்டப்படும் நினைவுகளில் ஒன்றாகக் கி.ரா. தாத்தாவைச் சந்திப்பதும் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள். பெரிய தேடுதல்களோ, திட்டமிடுதல்களோ இல்லாமல் மகள் சிநேகலதாவையும் மகன் ராகுலனையும் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள முத்தியால் பேட்டை மடத்தா பள்ளியில் சேர்த்தேன். கத்தோலிக்க மடத்துச் சகோதரிகள் நடத்தும் அந்தப் பள்ளிக்குப் புனித ஜோசப் பள்ளி என்று பெயர் இருந்தாலும், அந்தப் பள்ளியை அந்தப் பெயரால் அழைப்பதில்லை. பெண்களால் நிர்வாகம் நடந்ததால் அனைவரும் மடத்தா பள்ளி என்றே அழைத்தனர். பெரிய பள்ளிகள் இருக்கும் இடங்களில் வீடுகள் வாடகைக்குக் கிடைக்கவில்லை. வீட்டு வாடகை குறைவாக இருந்த பகுதியில் பெரிய பள்ளிகள் இல்லை. நான் பணியாற்ற இருந்த நாடகத்துறை இருந்த பகுதி ஜமீந்தார் கார்டன் என்று அழைக்கப்பட்டது. பெரியபெரிய வீடுகள் இருந்தன. ஆனால் வாடகை அதிகம். முத்தியால்பேட்டை அங்காளங்குப்பம் பகுதியில் தான் வாடகை குறைவாக இருந்தது.

என்னோடு மதுரை காமராசர் பல்கலையில் முதுகலை படித்துவிட்டு, தஞ்சை மாவட்ட அரசர் கல்லூரியில் பணியாற்றியபின், புதுவைக்கு மாறிய நண்பர் ஆ.திருநாகலிங்கம் தமிழ்த்துறையில் விரிவுரையாளராக இருந்தார். அவரது வீடு அங்காளங்குப்பத்தைத் தாண்டிய சோலைநகரில் இருந்தது. அதுவும் கடலோரத்தில் இருந்த ஒரு குப்பம் தான். நாடகத்துறையில் பயிற்றுநராக இருந்த வ.ஆறுமுகமும் அங்குதான் இருந்தார். மீனவர்கள் வாழும் பகுதிகளைக் குப்பம் என்ற பெயரில் அழைத்தாலும் நடுத்தரவர்க்கம் அங்கு அதிகமாகும் பகுதிக்கு நகரெனப் பெயர் சூட்டிக்கொள்வது வழக்கமாக இருந்தது.

மகள் மடத்தா பள்ளியில் ஐந்து வகுப்புகள் முடிந்தவுடன் புதுவை ஏழாம் புனித நாள் மேல்நிலைப்பள்ளியில் சேர்த்தபோது மகனையும் மூன்றாம் வகுப்பில் சேர்த்தோம். அவன் நான்காம் வகுப்பு வரும்போது அதன் கிளையொன்றை முதலியார் பேட்டைப்

பகுதியில் ஆரம்பித்து அங்கே மாற்றிவிட்டார்கள். பள்ளியை மாற்றவில்லை. பள்ளிக்கூட வாகனத்தில் காலை 7 மணிக்கு ஏற்றி அனுப்புவோம். மகளோ அப்போதே மிதிவண்டிப் பயணம். இருவருக்கும் அந்தப் பள்ளிகளைப் பார்க்கவேண்டும். அத்தோடு புதுச்சேரியில் 30 ஆண்டுகளில் நடந்துள்ள மாற்றங்களைப் பார்த்துவிட நினைத்தார்கள். அவர்கள் பார்க்க நினைத்த பட்டியலில் கி.ரா. தாத்தாவும் இருந்தார்.

தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றும் மகனுக்கு அமெரிக்காவில் பணி. அங்கு அவனது வேலைக்கான ஒப்பந்த காலம் ஆறு ஆண்டுகள். அதற்குள் வந்து போவதில் சில சிக்கல்கள். அமெரிக்காவின் ட்ரம்ப் போட்ட விதிகளில் பலரும் கலங்கியிருந்தார்கள். ஓய்வுக்குப் பின் நான் டிசம்பரில் இலங்கைக்குப் போகும் பயணத்திட்டம் ஒன்றை வைத்திருந்தேன். அதனால் புதுவை போகும் திட்டத்தை நானும் தள்ளிப்போட்டேன்.

இலங்கை போய்வந்து ஒரு மாதத்திற்குள் கரோனாவும் வந்து சேர்ந்துவிட்டது. 2020 பிப்ரவரி தொடக்கம் டிசம்பர் வரை ஊரடங்கு; வீடடங்கு எனப் பயணங்களே இல்லாத நாட்கள். அதற்குள் திருநெல்வேலியிலிருந்து திருமங்கலத்திற்கு இடப்பெயர்வு. 2020 பிப்ரவரியில் நடந்திருக்கவேண்டிய அந்தப் பெயர்வு டிசம்பரில் நடந்தது. இடையில் மருமகனும் மகளும் புனேவிற்கு இடம்பெயர்ந்தார்கள். எல்லாம் சேர்ந்து புதுச்சேரிக்குப் போகவே இல்லை. கி.ரா.வைப் பார்க்கவும் இல்லை. இடையில் கணவதி அம்மாவின் மரணச் செய்தியைக் கூடப் போய்ப் பார்த்து விசாரிக்க முடியவில்லை. இப்போது அவரது இறப்புச் செய்தி வரும்போது கரோனாவின் இரண்டாவது அலையின் பயமுறுத்தல். பாண்டிச்சேரி நினைவுகள் போலவே கி.ரா. வின் நினைவுகளும் காற்றிலேயே கரைந்துகொண்டிருக்கிறது.

கி.ரா – நினைவுக் குறிப்புகள்

https://solvanam.com/2021/11/14/%e0%ae%95%e0%ae%bf-%e0%ae%b0%e0%ae%be-%e0%ae%a8%e0%ae%bf%e0%ae%a9%e0%af%88%e0%ae%b5%e0%af%81%e0%ae%95%e0%af%8d-%e0%ae%95%e0%af%81%e0%ae%b1%e0%ae%bf%e0%ae%aa%e0%af%8d%e0%ae%aa%e0%af%81%e0%ae%95%e0%ae%95/

பல்கலைக்கழகத்திற்குச் செய்யும் பணித்திட்டம் ஒன்றை உருவாக்கினார். இதுவரை எழுத்துலகம் கவனிக்காத பெண்மனங்களைப் பதிவுசெய்யும் நாட்டார் கதைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் திட்டம் அது. அதற்கு உதவியாக ஆய்வுப்பணியாளர் ஒருவரும் அனுப்பப்பட்டார்.

காதல், காமம், முறைப்படுத்தப்படாத ஆண் -பெண் உறவு என ரகசியம் பேணப்பட்ட கதைகள் அவரிடம் ஏற்கெனவே நிறைய இருந்தன. ஆனால் அவற்றைப் பதிப்பிப்பதைவிடவும் புதுவை வட்டாரத்துக்குரியதாகப் பதிப்பிக்கலாம்

என்பதற்காகப் புதிய கதைகளைத் தொகுக்க ஆரம்பித்தார். அப்படித் தொகுத்த நாட்டாரியல் மரபுகளே பெண் மனமாகவும், வயதுவந்தவர்களுக்கு மட்டும் எனப் பதிப்பிக்கப்பட்டன. அதுவரைக் கல்விப்புலம் பேசாமல் இருந்த பலவற்றை அவை பேசத்தூண்டின. அந்த வகையில் கி.ரா.வின் வருகைதரு பேராசிரியர் பணி ஒரு புரட்சிகரமான பணி.

அவர் அங்கு இருந்த காலச்சூழல் பாண்டிச்சேரியில் பல கலகங்களும் புரட்சிகரச் சிந்தனைகளும் கிளர்ந்துகொண்டிருந்த நேரம். நிறப்பிரிகையின் கூட்டுவிவாதங்கள், தலித் அரசியல் விவாதங்கள், புதிய அரசியல் சிந்தனைக் களங்கள், சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப்பள்ளியின் நிகழ்த்துமுறைச் சோதனைகள் எனப் பலப்பலவாய் ..

புதுவை மிஷன் வீதி கல்வே கல்லூரியில் ஒருநாள் கி,ரா,வின் எழுத்துகளை மையமிட்டு முழுக் கருத்தரங்கம் அவரது பன்முக ஆளுமையைக் காட்டிய கருத்தரங்கமாக நடந்தது.



12

புதுச்சேரி இலாசுபேட்டைக்குப் போன பிறகு வேறெங்கும் வீடு தேடவில்லை. பல்கலைக் கழகப் பணியில் இருந்ததுவரை தாகூர் கலைக்கல்லூரிச் சாலையில் தங்கியிருந்தார். அவர் வந்தபோது புதுவைப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் அலுவலகம் ரங்கப்பிள்ளை வீதியில் இருந்தது. அதன் இரண்டாவது மாடியில் நான் பணியாற்றிய நிகழ்கலைத்துறையின் வகுப்புகள் நடக்கும். எப்போதாவது அங்கு வந்து நாடக வகுப்புகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்.

அப்படியொருநாள்வருகைதரும்போது அவரும் எம் துறையின் தலைவர் இந்திரா பார்த்தசாரதியும் சமகாலத்தில் எழுதும் எழுத்தாளர்களின் எழுத்துகளைக் குறித்துப் பேசத்தொடங்கினார்கள். பேச்சினூடாக எனது கருத்தையும் கேட்டுக்கொண்டார்கள். பாவண்ணன், எஸ்.ராமகிருஷ்ணன், கோணங்கி,ந.ரவீந்திரன், பாரதி பாஸ்கர், கண்டராதித்தன். பவா.செல்லத்துரை, சூர்யகாந்தன், இரா.முருகன் எனப் பேச்சு சுத்தி வந்தது.

அதன் பிறகு பையிலிருந்து ஒரு கட்டுக் கையெழுத்துப் பிரதிகளை எடுத்து வைத்தார் கி.ரா. பெரும்பாலும் கையால் எழுதப்பெற்ற பிரதிகள். நாவல் போட்டிக்கு வந்த நாவல்கள் என்று சொல்லிவிட்டு ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொண்டார்கள். இரண்டுபேர் மட்டும் டைப்செய்து அனுப்பியிருந்தார்கள். இருவரும் அதன்

நடுவர்களாக இருக்கப்போவதாகவும் சொன்னார்கள். மூன்றாவது நடுவர் அப்போது தஞ்சையில் இலக்கியத்துறையின் பேராசிரியர் தா.வே.வீராச்சாமி. நீங்களும் வாசித்துப் பார்க்கலாம் என்று சொன்னார்கள்.

ஒரு மாதம் ஓடியிருக்கும். திரும்பவும் கி.ரா. , ரங்கப்பிள்ளை வீதிக்கு வந்தார். நாவல்களைப் பற்றிப் பேசினார்கள். இருவருமே ஜெயமோகனின் எழுத்து பற்றி விவாதித்தார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீங்க என்று என்னிடம் கேட்டார்கள். வட்டார எழுத்து என்பதைத் தாண்டிய தன்மை இருக்கிறது. பாத்திரங்களை உருவாக்கி முன்வைப்பதில் கவனம் இருக்கிறது என்று சொன்னேன். அந்த வருட அகிலன் நினைவுப் போட்டியில் ஜெயமோகனின் 'ரப்பர்' பரிசுக்குரியதாகத் தெரிவுசெய்யப்பட்டது. அதிகாரப்பூர்வமற்ற நடுவர்களில் ஒருவராக நானும் இருந்ததாக அப்போது நினைத்துக்கொண்டேன்.

13

"கரிசல் மண்ணை விட்டு ஒருநாள் கூட இருக்கமுடியாத ஆள் நான்" என்று மணிவிழாவின்போது சொன்னவர். திரும்பவும் ஊருக்குப் போகப்போவதில்லை; புதுச்சேரியிலேயே இருந்துவிடுவது என முடிவு எடுத்தார். பல்கலைக்கழகத்தோடான ஒப்பந்த காலம் முடிந்தபின்னும் பாண்டிச்சேரியிலேயே இருப்பது எனக் கி.ரா. எடுத்த முடிவு ஆச்சரியமூட்டிய ஒன்று.

புதுச்சேரி – வேதபுரம்; இங்கு வந்தவர்களுக்குத் திரும்பிச் செல்லும் ஆசையே வராது என்றார். எட்டயபுரத்திலிருந்து வந்த பாரதிக்குப் புதுவையைவிட்டுப் போக மனம் இருக்கவில்லை. தூத்துக்குடியிலிருந்து வந்து சேர்ந்த சங்கரதாஸ் சுவாமிகள் திரும்பிப் போகவில்லை. அவரது நினைவிடம் கருவடிக்குப்பத்தில்தான் இருக்கிறது.

தமிழ்நாட்டுக்காரர்கள் மட்டுமல்ல; அரவிந்தர் வங்காளத்திலிருந்து வந்தவர் தானே? அவரோடு வந்தவர்கள் பெயர்களெல்லாம் நமக்குத் தெரியாது தானே. நானும் இங்கேயே இருந்துவிடப் போகிறேன். வேதபுரத்தார்க்குக் குறிசொல்லும் வேலையை எடுத்துக் கொள்வேன் என்று சிரித்துக்கொண்டே சொன்னார் ஒரு தடவை. இப்போது அவரது உயிரில்லா உடல் இடைசெவல் நோக்கி வந்துகொண்டிருக்கிறது. பிறந்த ஊருல உடலை வச்சுப்பாக்கிறதும் ஒரு வழமைதான்.

14

அங்காளம்மன் நகரிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் நானும் இலாசுப்பேட்டை, ராஜாஜிநகருக்கு நகர்ந்தேன். அவரும் அதே ஔவை நகரில் தான் இருந்தார். இலாசுபேட்டை அப்போது அறிவுஜீவிகளும் எழுத்தாளர்களும் நிரம்பிய இடம். கி,ரா,வுக்குப் பக்கமாக இருந்தவர் திறனாய்வாளர் பஞ்சு. அடுத்த தெருவில் ஒரு பிரெஞ்சுப் பேராசிரியர். இடது பக்கம் பிரெஞ்சுமொழியிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யும் நாயகர் இருந்தார். அரசு மருத்துவமனையில் மட்டுமே மருத்துவம் பார்த்த

மருத்துவர் ஒருவர் இருந்தார். அசோக்நகரில் நிறப்பிரிகை ரவிக்குமார் இருந்தார். அதற்கடுத்த தெருவில் ராஜ்கௌதமன்.

காலையில் ஒரு சுற்றுலா; மாலையில் ஒரு சிற்றுலா என்பது கிராவின் நடைப்பயிற்சி. நானிருந்த ராஜாஜி நகரில் தான் தபால் அலுவலகம். அவருக்குத் தினசரி நாலைந்து கடிதங்களாவது வரும். ஒன்பது மணிக்கு பல்கலைக்கழகம் கிளம்பும்போது வீட்டுக்கு வந்து அன்றைய தினசரியை வாசித்து முடிப்பார். அங்கிருந்து தபால் அலுவலகம் போய் தனக்கு வந்த கடிதங்களைத் தானே பெற்றுக்கொண்டு அங்கிருந்து கிளம்புவார். அங்கே உடைத்து வாசிக்கமாட்டார். வீட்டுக்குப் போகும் பாதையில் கோவில்பட்டிக்கார வீடு ஒன்று இருந்தது. அங்குபோய் ஒரு செம்பு தண்ணி குடித்துவிட்டு அங்கு உட்கார்ந்து கடிதங்களைப் படிப்பார். அங்கிருக்கும் பெண்களோடு பேசிக்கதைகளை உருவாக்கிக் கொள்வார். அவர்கள் இல்லையென்றால் பஞ்சாங்கம் வீட்டில் அது நடக்கும். எங்கள் தெருவில் இருந்த கணிதப் பேராசிரியர் முருகானந்தம் மனைவிக்கு மருத்துவ ஆலோசனைகள் சொல்லிவிட்டுப் போவதுமுண்டு.

தபால் அலுவலகத்தைக் காரணமாக்கி ஒன்பது மணிக்கு நடக்கத் தொடங்கித் திரும்பும்போது 12 மணி ஆகியிருக்கும். குறைந்தது நாலைந்து பெண்களிடமாவது கதைபேசி, சிரித்துவிட்டுப் போய்க் கணவதி அம்மாவிடம் பேசிய கதைகளைச் சொல்லிக் கொண்டிருப்பார். மாலையில் அம்மாவையையும் அழைத்துக்கொண்டு விமான நிலையச்சாலையில் ஒரு சிற்றுலா வருவார். பெரும்பாலும் இவ்விரண்டு உலாக்களும் மாறாமல் இருந்தன.

16

அதிகமும் தனித்தமிழ் இயக்கவாதிகள் இருப்பதுபோலத்தோற்றம் தரும் புதுச்சேரியில் வாரக்கடைசிகளில் இலக்கிய, சமூக இயக்கங்கள், அரசியல் கூட்டங்களுக்குப் பஞ்சம் இருக்காது. ஒவ்வொருவருக்கும் புனைபெயர்கள் இருக்கும். அவை பெரும்பாலும் தனித்தமிழ்ப் பெயர்கள். அவற்றைவிட்டால் ஒடுக்கப்பட்ட மனிதர்களின் நலன்களை முன்வைக்கும் மார்க்சியப் பின்புலம் கொண்ட மனித உரிமை அமைப்புகள், திராவிட இயக்கப்பார்வை கொண்ட பேரவைகள் எனப் பலவிதமான அமைப்புகளின் செயல்பாடுகள் நடந்துகொண்டே இருக்கும். 1990 களுக்குப் பிறகு தலித் இயக்கத்தின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளின் திரட்சியைத் தனதாக்கிக் கொண்ட இடமும் புதுச்சேரிதான். அமைப்புகளைப் போலவே சிற்றிதழ்களின் எண்ணிக்கையும் அங்கு அதிகம். மொழிக்காக, சமூகவிழிப்புணர்வுக்காக, இலக்கியத்திற்காக எனப் பலவிதமான இதழ்களும் வந்துகொண்டிருந்த நேரம். எதிர்வு, நிறப்பிரிகை, ஊடகம், கிரணம், என்ற மூன்று இதழ்களும் புதுச்சேரியை முகவரியாகக் கொண்டு தமிழ்ச் சிற்றிதழ்ப் பரப்பில் தாக்கம் ஏற்படுத்தியவை.

எதிர்வு இதழை நடத்திய சிவக்குமாருக்கு அமைப்பியல், குறியியல் எனத் தமிழவனின் திறனாய்வுக் கருத்தியல்களை முன்வைக்கும் நோக்கம் இருந்ததை முதல் இதழில் வெளிப்படுத்தினார். எதிர்வு இதழின் சார்பில் மாதாந்திரம் ஒரு கூட்டம் நடத்துவதையும் தொடங்கினார்.

முதல் கூட்டம் ரெட்டியார் பாளையத்தில் மருத்துவர் வீட்டில் நடந்ததாக நினைவு. அதற்கு எனது மிதிவண்டியில் போய்வந்தேன். இரண்டாவது கூட்டத்திற்கு அசோகமித்திரன் வருவதாகத் தகவல் வந்தது. கி.ரா. தொடர்பு ஏற்படுத்தித் தந்ததால் அவரது வருகை உறுதியானது எனத் தெரிந்தது. அந்தக் கூட்டத்திற்குப் பிறகு பெரிய அளவில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்திற்குக் கடலூர், விழுப்புரம், விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி எனப்பக்கத்துச் சிறுநகரங்களிலிருந்தெல்லாம் வருவார்கள் என்பதும் தகவல்.அதற்குப் பாவண்ணன் பெங்களூரிலிருந்து வருகிறார் என்று நண்பர்கள் சொன்னார்கள்.

எழுத்தாளர் பாவண்ணன் புதுவைக்காரர்தான். நான் புதுச்சேரிக்குப் போனதற்குச் சில மாதங்கள் முன்பு அவர் கர்நாடகா தொலைபேசித்துறையில் பொறுப்பேற்றுச் சென்றுவிட்டார். அவரது சொந்தக்கிராமம் புதுவை – விழுப்புரம் சாலையில் வளவனூர் பக்கம் . அவ்வப்போது புதுச்சேரி வருவார்.

நல்ல மிதிவண்டி இருந்தால் ஒவ்வொரு கூட்டங்களுக்கும் போய்வந்துவிடலாம். இந்தக் கூட்டமும் ரெட்டியார் பாளையத்தில்தான் என நினைத்துக்கொண்டு மிதிவண்டியில் கிளம்பிவிட்டேன். ஆனால் அங்கு போனபிறகு தான் தெரிந்தது. வில்லியனூரில் தான் கூட்டமென்று. மிதிவண்டியைத் திரும்பவும் மிதித்து ஓட்டிப்போகச் சரியாக இருந்தது நேரம். போனபோது தெரியாத தூரம் வரும்போது அதிகமாகத் தெரிந்தது. அந்தக் கூட்டத்திற்குப் பிறகு எதிர்வு கூட்டங்களும் இல்லை. எதிர்வும் வரவில்லை.

16

எழுத்துத்தமிழ் அல்லது பொதுத்தமிழ், பேச்சுத்தமிழ் என இரண்டு நிலைகள் தமிழ்மொழியின் சிறப்பு எனவும், சிக்கல் எனவும் சொல்வார்கள். புதிதாகத் தமிழைக் கற்க நினைக்கும் வேற்றுமொழிக்காரர்கள் இந்த வேறுபாட்டால் அதிகமும் திணறுகிறார்கள் என்பது மொழியியலாரின் வாதம். வட்டார இலக்கியம் எழுதும் எழுத்தாளர்கள் எப்போதும் பேச்சுத்தமிழின் ஒலிச் சிறப்பை விதந்து பேசுவார்கள். தமிழ்நாட்டின் மொத்தப்பரப்புக்கும் எழுதுவது புரிய வேண்டும் என்பவர்கள் பொதுத்தமிழின் பக்கம் நிற்பார்கள்.

இந்த எதிர்வில் கி.ரா. பேச்சுத்தமிழின் பக்கம் நிற்பவர். தனது கதைகளில் பாத்திரங்களின் உரையாடல்களைப் பேச்சுத்தமிழிலும், கதைசொல்லியின் விவரணைகளைப் பொதுத் தமிழிலும் எழுதிக்கொண்டிருந்தார். பேசுவதுபோல எழுதவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவர். அதுதான் மக்கள் தமிழ் எனப் புதுவைக்கு வந்தபின் வாதிடத்தொடங்கினார். பேசுவதுபோலவே எல்லாவற்றையும் எழுதவேண்டும் என்றும் சொல்லத்தொடங்கினார்.

புதுவை வணிக அவையில் நடந்த ஒரு கூட்டத்திற்குப் பின் அதன் முன்னிருக்கும் பாரதி பூங்காவில் மதிய உணவுக்குப் பின் அமர்ந்திருந்தார் கி.ரா. அந்தக் கூட்டத்திற்குக் கவி. பழமலய்யும் வந்திருந்தார். உரையாடல் மக்கள் தமிழ் பக்கம் நகர்ந்தது. அப்போது பழமலய் கி.ரா.விடம், “ நீங்கள் சொல்லும் மக்கள் தமிழில் எழுதுவது என்ற நோக்கம்

நல்லதுதான். அது சாத்தியமா?" என்று கேட்டார். ' பேசுவதுபோல எழுதுவதில் என்ன சிக்கல்?' என்று கேட்டார். தொடர்ந்த பழமலய், "வீட்டில் பேசுவதுபோல எழுதுவது என்றால், நீங்கள் வீட்டில் தெலுங்கு பேசிறீங்க. அதைத்தானே எழுதணும்; அதைத் தமிழ் வரிவடிவத்தில் எழுதினால் மக்கள் தமிழ் ஆகுமா?" என்று கேட்டார். அந்த உரையாடல் அப்போதைக்கு நின்றுபோனது.

17

கரிசல், கதைசொல்லி என்னும் கலைச்சொற்கள்

தொல்காப்பியச் சொல்லதிகாரம் சொற்களை வகைப்படுத்தும்போது பொது, சிறப்பு, காரணம், இடுகுறி என்ற நான்கைக் கூறி, அதற்கு மேலும் காரணப்பொதுப்பெயர், காரணச்சிறப்புப்பெயர், இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என விரித்துப் பேசும். இவ்வகைப்பாடு சொற்களை வகைப்பாடு செய்வதற்கான இலக்கணம் மட்டும் என்று நினைக்கவேண்டியதில்லை. தமிழில் சொற்களை – குறிப்பாகக் கலைச்சொற்களை உருவாக்குவதற்குமான இலக்கணமாகவும் கொள்ளவேண்டிய வரையறைகள். தொல்காப்பியமும் அதன் உரைகாரர்களும் இதனை விரிவாகப் பேசியுள்ளனர்.




ஒரு பொதுச்சொல்லைச் சிறப்புச் சொல்லாக மாற்றுவதற்குப் பின்னால் அந்தக் காலகட்டத்தின் தேவையும் நெருக்கடிகளும் இருக்கின்றன. கரிசல் என்ற சொல் நிலத்தின் பெயராக இருக்கும்போது பொதுச்சொல். ஆனால் இலக்கியம் என்னும் இன்னொரு பொதுச்சொல்லோடு சேரும்போது சிறப்புச் சொல்லாக – காரணச்சொல்லாக மாறுகிறது. அதாவது கலைச்சொல்லாக மாறுகிறது. எல்லாவற்றையும் பொத்தாம் பொதுவாகப் புரிந்துகொள்ளக் கூடாது; சிறப்பான அர்த்தங்களோடும், காரணங்களோடும் வினையாக்கங்களோடும் புரிந்துகொள்ள வேண்டும் எனக் கோருகிறது இந்த மாற்றம். நிலம் என்பது அதன் நிறம், அங்கு வாழும் மனிதர்களின் பாடுகள், நிலவியல் அடையாளங்களை உருவாக்கும் தட்பவெப்பம், கருப்பொருட்கள், பண்பாடு என எல்லாம் இணைந்தனவாக மாறுகின்றன.

இதே தன்மையில் உருவானதல்ல கதைசொல்லி என்னும் கலைச்சொல். Performance, Narrative என்ற இரண்டு ஆங்கிலச் சொற்களை அரங்கியல் பலவிதமாகப் பயன்படுத்தத் தொடங்கிய நவீனத்துவ காலகட்டத்துக் கலைச்சொல்

சொல்லுதலை நிகழ்த்துதலாக மாற்றிய காலகட்டத்தின் தேவையை உணர்த்தும் சொல். நிகழ்த்துதல் கோட்பாடு

என்னும் அரங்கியல் சிந்தனையின் வழியாக இலக்கியவியலுக்குள் நுழைந்த அச்சொல்லுதலின் தீவிரம் எல்லாவற்றையும் நிகழ்த்துதலாக்க நோக்கத்தோடு இணைத்தது. நிகழ்த்துதலுக்கேற்ப சொல்லப்படும் மொழியின் பண்புகளும் அடுக்குகளும் மாறவேண்டும் என்று வலியுறுத்தியது. இத்தகைய பின்னணிகளை- படைப்பாக்க நுட்பத்தைப் புரியாமல், படித்த கதையைத் தனது சொல்முறைப்படி திருப்பிச் சொல்லும் ஒருவர் தன்னைக் "கதைசொல்லி" என அழைத்துக் கொள்ளத்தொடங்கியதின் விளைவு அச்சொல் தமிழில் அர்த்தமிழந்த சொல்லாக மாறிப்போய்விட்டது.

கி.ரா. நினைவுகள் -18



இடைசெவலுக்கு வந்துபோன சினிமாக்காரர்கள் பற்றி அவரிடம் துருவித் துருவிக் கேட்டாலும் அதிகம் சொல்ல மாட்டார். பாரதிராஜாவின் ' முதல் மரியாதை' படத்தின் காட்சிகளும், உச்சநிலைத் திருப்பமும் அவரது கிடையும், கோபல்ல கிராமமும் என்பதைச் சொல்லிக் கேட்டபோதும் 'அது முடிந்துபோன சங்கதி என்று சொல்லிக் கடந்துவிடுவார். அந்தப் படத்தின் தொடக்கத்தில் போடப்பட்ட 'நன்றி'க்குப் பின்னால் இருந்த சங்கதிகளை அவர் அதிகம் சொல்ல நினைத்ததில்லை.

திரும்பவும் இடைசெவலுக்குப் போகப்போவதில்லை, புதுச்சேரியிலேயே இருந்துவிடப்போகிறார் கி.ரா. என்ற தகவல் சென்னையிலிருக்கும் பத்திரிகையாளர் களைவிடச் சினிமாக்காரர்களுக்கே அதிக வசதியாகத் தோன்றியது. அவ்வப்போது பலரும் வந்து போய்க்கொண்டே இருந்தார்கள். எப்போதும் அவரது எழுத்தின் மீது பிரியமும் முன்னோடியாக நினைக்கும் வாஞ்சையும் கொண்ட சினிமாக்காரர் தங்கர் பச்சான் அடிக்கடி வந்து பார்த்துச் செல்வார். அவரைச் சினிமாக்காரர் என்பதைவிட எழுத்தாளராகவே கி.ரா.வும் நினைத்தார்; நாங்களும் நினைத்தோம். கி.ரா.வுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்றால் தயங்காமல் செய்யும் விருப்பம் அவருக்குண்டு.

அவரைத் தாண்டி முதன் முதலில் புதுவையில் வந்து அவரைச் சந்தித்துப் போன சினிமாக்காரர் இயக்குநர் பாலச்சந்தரின் மகன் பால கைலாசம் என்றே நினைக்கிறேன். கிராமியம் வரலாற்றுப் பின்புலமும் கொண்ட கதையொன்றைத் தொடராக எடுக்க நினைப்பதாகவும் அதற்கான கதையாக அவரது நாவல்களைப் பயன்படுத்த நினைத்து வந்து கேட்டாராம். அதற்கு ஏற்கெனவே எழுதிய கதைகளைவிடப் புதிதாக ஒன்றைத் தருகிறேன் என்று சொல்லி ஒரு கதை சொல்லியிருப்பதாகச் சொன்னார். அந்தக் கதையைச் சுருக்கமாக என்னிடம் சொன்னார். இதையெல்லாம் எடுக்க வாய்ப்பில்லை

என்று நான் சொன்னபோது 'பார்ப்போம்; அவங்க எடுக்கலையின்னா, தொடர்கதையா எழுதிடலாம்'

அவர்கள் தொலைக்காட்சித் தொடராக எடுக்க நினைத்துக் கேட்டுப்போன கதைதான் பின்னர் 'அந்தமான் நாய்க்கர்' என்ற தொடராக வந்து நூலாக மாறியது.

19

சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப்பள்ளி மாணவர்களுக்குச் சிறப்பு வகுப்புகள் எடுப்பதற்காக வந்த நடிகர் நாசர், கி.ரா.வைப்பார்க்க விரும்பினார். அப்போது அவரது அவதாரம் வந்திருந்தது.

கடலைமிட்டாய்,கைமுறுக்கு, கடுங்காப்பி எனத் தந்த கணவதியம்மாவையும் உட்காரவைத்துக் கொண்டு பேச ஆரம்பித்து, பேசிக்கொண்டே இருந்தார். இடையில் எனது பிள்ளைகளை அழைத்துப் போய் நாசரைக் காட்டினேன். ஆனால் அவர்கள் பேச்சு ஒன்றைத்தொட்டு ஒன்றாய்ப் போய்க்கொண்டே இருந்தது. அவரிடம் கதை கேட்க நினைப்பவர்கள் இப்படிப் பேசிப்பேசிக் கதைகளை உள்வாங்கிக் கொள்வதைவிட, காட்சிகளை வடிவமைத்துக் கொள்வார்கள். சொல்ல நினைக்கும் ஒவ்வொரு செய்தியையும் ஒரு கதையின் துணுக்காக ஆரம்பம், உச்சம், முடிவு எனச் சின்னச் சின்ன அலகாகச் சொல்லிமுடிப்பார். அப்படி அவரிடம் கேட்டுக் கொள்ளும் ஒரு கதைத்துணுக்கை – காட்சித்துணுக்கை உருவாக்க நட்சத்திர விடுதியில் பத்துப்பன்னிரண்டு பேர் சில நாட்களைச் செலவழிக்க வேண்டும் என்பதை இயக்குநர்கள் பலரும் அறிந்தே இருந்தார்கள்.

அவரிடம் பேச்சுக்கொடுத்துக் காதில் திணித்துக் கொள்ள வரும் இயக்குநர்கள் சிலரென்றால், அவரையே சென்னைக்கு அழைத்துப் போய்த் தங்கவைத்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பும்போது பரிசுப்பொருட்களோடு கொண்டுவந்து விட்டுப் போகும் இயக்குநர்களும் உண்டு.

ஒரு தடவை ஔவை நகர் வீட்டில் படியேறிப்போனதும் ஒருநாள் நாலடி உயரமும் ஐந்துகிலோ எடையும் கொண்ட பேனா ஒன்று காட்சி தந்தது. பழைய நேவி பேனாவின் வடிவம். யார் தந்தது என்று கேட்காமலேயே சொல்லத்தொடங்கினார். எதையும் புதுமையாகச் செய்யும் விருப்பம் கொண்ட பார்த்திபன் பரிசு என்றார். அந்தப் பேனாவில் ஒரு எழுத்தும் எழுதமுடியாது. ஒரு மதிலில் அலங்காரமாகத் தொங்கவிடலாம்.

இன்னொரு தடவை நடிகர் பாக்கியராஜ் அழைத்துப் போய் அவர்களின் திருமணநாள் பரிசாகப் பட்டுவேட்டி, பட்டுச்சேலையோடு கொண்டுவந்து விட்டுப் போனார். ஆனால் அவர் தங்கியிருந்த இரண்டு நாட்களில் ஏராளமான கதைத் துணுக்குகளைக் கிரகித்துக் கொண்டிருப்பார். அறியப்பெற்ற இயக்குநர்களுக்கப்பால், அறியப்படாத இயக்குநர்களும் உதவி இயக்குநர்களும் அவரிடம் பேசிக்கொண்டிருப்பதற்காக – கதைகளைத் திரட்டிக்கொள்வதற்காக வந்துகொண்டே இருப்பார்கள். கி.ரா. ஒரு கதைச்

சுரங்கம் என்பது முழுமையாக உணர்ந்தவர்கள் சினிமா இயக்குநர்கள் என்றே சொல்ல வேண்டும்.

20

இலாசுபேட்டை, ராஜாஜி நகர் முகவரியிலிருந்து – எனது முகவரி- ஊடகம் என்ற இதழைக் கொண்டுவந்தோம். அதுவரை பத்திரிகை, தொலைக்காட்சி, சினிமா, தொலைபேசி எனத் தனித்தனியாகவும், மொத்தமாகச் சொல்லும்போது தகவல் பரப்பும் சாதனங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த நிலையை மாற்றி அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாக 'ஊடகம்' என்ற சொல்லைப்பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தோம்.

நான்கு இதழ்கள் தான் வந்தது என்றாலும் வெகுமக்கள் அரசியலும் ஊடகங்களும் இணைந்து செல்லும் நிலையைப் பலவித ஆய்வுகள் வழியாகவும் மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் வழியாகவும் கருத்தியல் விளக்கக் கட்டுரைகள் வழியாகவும் எழுதும் நண்பர்களின் மொழியைக் கி.ரா.வால் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை. வெளிப்படையாகவே என்னய்யா பத்திரிகை நடத்திறீங்க; ஒன்னுமே விளங்கலையே என்று சொல்லிவிட்டு, ' எனக்கு விளங்கல என்பதற்காக இப்படி ஒன்னு வரக்கூடாதுன்னு சொல்லமாட்டேன். தமிழுக்கு இப்படியான பத்திரிகைகளும் வரவேண்டும்' என்று சொன்னார்.

என்னிடம் அப்படிச் சொன்னவர், அவரைச் சந்திக்கவரும் ஒவ்வொருவரிடம் அதனை காட்டி அதன் சிறப்புகளையும் கவனப்படுத்தும் துறைகளையும் சரியாகவே முன்வைத்தார். அவரது அறிமுகம் மூலம் கிடைத்த நன்கொடைகள் உண்டு. சந்தாக்களும் உண்டு.

ஊடகம் வந்து நின்ற பிறகுதான் அவரது கதைசொல்லி வரத்தொடங்கியது. அதில் நானெல்லாம் ஒன்றும் எழுதவில்லை. அதற்காக நிறைய வேலை செய்தவர்களாகப் பஞ்சாங்கத்தையும் பிரேமையும் சொல்ல வேண்டும். பிரேம்:ரமேஷ் இருவரும் இணைந்து அவரது ஒட்டுமொத்த எழுத்துகளையும் வாசித்துக் கலைஞன் பதிப்பகத்திற்காகச் செய்து தந்த ' கி.ராஜநாராயணன் : எழுத்துலகம்' முக்கியமான ஒன்று. அதுபோல பஞ்சாங்கம் கி.ராவின் பங்களிப்புகளையும் படைப்புகளையும் குறித்துத் தொடர்ச்சியாக எழுதினார். தனியொரு நூலே – கி.ரா. என்னும் கதைசொல்லி' கொண்டுவந்தார். இவற்றின் சாராம்சங்களை ஆங்கிலத்தில் தந்திருந்தால் அவருக்கு ஞானபீட விருது வழங்க நினைத்து தெரிவுக்குழுவிற்கு அவரது பன்முக ஆளுமை தெரியவந்திருக்கும்.

இந்திரா பார்த்தசாரதி ஒருமுறை சொன்னார்: நமக்குள் தரம், தகுதி பற்றிய ஆயிரம் சண்டைகள் போடலாம். அதே நேரத்தில் தேசிய அளவில் -மற்றமொழிகளோடு போட்டி போடும்போது அதையெல்லாம் காட்டாமல் தமிழுக்குக் கிடைக்கிறது என்று பார்க்கவேண்டும். தமிழ்நண்டுகளாக இருப்பதைக் கைவிடாமல் தேசிய அளவு விருதுகளை எதிர்பார்க்கக் கூடாது. அவர் சொன்னதைத் தமிழ் எழுத்தாளர்களும் திறனாய்வாளர்களும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

கோபல்லபுரத்து மக்கள் – வாசிப்பனுபவம்

https://www.jeyamohan.in/141050/




கரிசல் மண்ணின் நாயகன் கி ராஜநாராயணன் அவர்கள் , `இந்த இவள்' என்ற நாவலை தனது 96-வது வயதில் எழுதியுள்ளார். வயசாயிருச்சு, நம்மளால இனிமேல் என்ன செய்யமுடியும் என்று தொய்வடையும் சமயம் இதை ஒரு ஊக்கமாக எடுத்துக்கொள்வோம் என்று சொல்லிக்கொண்டு, இந்த மாதம் அய்யா கி.ரா அவர்கள் எழுதிய கோபல்லபுரத்து மக்கள் நாவலை அடுத்து அடுத்து இருமுறை வாசித்த அனுபவத்தை பகிர்ந்துகொள்கிறேன்.

இந்த நாவல் , சுதந்திர போராட்ட காலத்தை ஓர் ஆவணம் செய்ததுபோல் இருக்கும் என்று என் அடிமனது ஞாபகத்தில் இருந்தது. அதற்குள் ஒரு அழகான காதல் கதையும் புதைந்திருந்தது என்பதை மறந்திருந்தேன். நண்பர் ஒருவரிடம் இதை வாசித்தேன் என்று சொன்னதும், அச்சிந்த்தலுவும் கிட்டப்பனும் வருவார்களே, அந்த நாவலா என்றார்.

நாவலில் இரண்டு பாகங்கள். மாடுகள் மேய்ந்துவிட்டு சென்றுவிட மாலை நேரத்தில் வரும் புல் வாசனையும், அலைந்து திரியும் காரியும், பிணைக்கு வந்த மாடு தின்ற கதிரும், நடு ஜாமத்தில் எழுந்து கூளம் போட வந்தவனைக் கண்டு விடிந்தது என்று கத்தும் ஆட்காட்டி குருவியும் என கரிசல் மண்ணின் மணமுடன் நாட்டார் மக்களின் வாழ்க்கை பின்னணியில் ஒரு அழகான காதல் கதையைச் சொல்லும் முதல் பாகம். காந்தி இர்வின் ஒப்பந்தத்தின்போது, பகத்சிங்கை விடுதலை செய்ய காந்தி பேசியிருக்கலாம், காந்தியை பின்பற்றி கள்ளுக்கடைகளை தவிர்ப்போம், எல்லோரையும் கோவிலுக்குள் அனுமதிப்போம் என்று சுதந்திர போராட்ட கால இளைஞர்களின் பேச்சை, நடவடிக்கைகளை ஆவணப்படுத்தும் பாகம் இரண்டாம் பாகம்.

கோபல்ல கிராமத்து மக்கள் அச்சிந்த்தலுவை சிறை என்று சொன்னார்கள். சிறை என்றால் சிறை எடுத்துச் செல்லுமளவு அழகுடையவள் என்று பொருளாம். நல்ல உடம்புன்னா , எப்பொழுது பசிக்கிறது, எப்பொழுது விழிப்பு வருகிறது என்பதை வைத்து நேரத்தை சொல்லிவிடலாமாம். அப்படிப்பட்ட நல்ல உடம்பை கொண்ட கிட்டப்பன்தான் காதலன். கிட்டப்பனை கட்டழகன் என்றார்கள். அவளுக்கு இவன், இவனுக்கு அவள்தான் என்று அச்சிந்த்தலுவின் அம்மா வெண்ணை ஊட்டி இருவரையும் ஒன்றாகவே வளர்க்கிறாள். குழந்தைகளாக இருவரும் கால்மேல் கால் போட்டு ஒன்றாகவே உறங்குகிறார்கள். அச்சிந்த்திலுவின் அம்மா கிண்டல் செய்தால், மக்கு கிட்டப்பனுக்கு அது புரிவதில்லை.



கி.ரா. சொல்கிறார், பால் உணர்வுச் சிந்தனையில் சின்ன வயதில் பெண்ணுக்குரிய சுதாரிப்பும், துருதுருப்பும் ஆண்பிள்ளைகளுக்கு இருப்பதில்லை. பெண் வேப்பமரம்; சீக்கிரம் வளர்ந்து விடுகிறாள். ஆண் அரசமரம்; நின்று நிதானித்து வளர்ந்து நிலைத்து நிற்கிறான். அழகாயிருப்பவர்கள் இருவர் சேருவது கடவுளுக்கே பிடிக்காதாம். இதில் ஊராருக்கு எங்கே பிடிக்கப்போகிறது. கண்ணு மூக்கு வைத்து கதை கட்டுகிறார்கள். இறக்கையெல்லாம் வைத்து பறக்கக்கூட விடுகிறார்கள். ஊரார் பேச்சால் குடும்பம் பகை பட்டு இருக்க , இவன் தன்னை தனியே வந்து பார்த்து தன் பிரியத்தைச் சொல்லமாட்டானா என்று தனது வீட்டு நாய்க்கு கருப்பட்டி துண்டை போட்டு கட்டி வைத்து அச்சிந்த்தலு காத்திருக்க, அது தெரியாமல், கிட்டப்பன் , தான் அவளைத் தேடிச் சென்றால், நாய் காட்டிக்கொடுத்துவிடும் என்று வராமல் இருப்பதும் என காதல் பகிர்ந்துகொள்ளப்படாமலே இருவருக்கும் வெவ்வேறு இடத்தில் கல்யாணம் முடிந்துவிடுகிறது.

அச்சிந்த்தலுவின் கணவன், பொலித் தகராறில் நான்காம் நாள் மரணம். கிட்டப்பனுக்கு வாழ்க்கைப்பட்ட ரேணு , தன் பிறந்த வீட்டில் சொல்லிக் கொடுத்ததுபோல புகுந்த வீட்டிலும் அடுப்பில் நெருப்பை எப்பொழுதும் மூட்டி வைத்து , வந்தவருக்கு இல்லை என்று சொல்லாமல் நெருப்பு தானம் செய்கிறாள். நெருப்புக் கேட்டு வந்தவர்கள் கிட்டப்பனின் பழைய காதலைச் சொல்லி நெருப்பை போட்டுவிட்டு செல்கிறார்கள்.

அச்சிந்த்திலுவின் காதலை அவளின் தாபத்தின்மூலம், கோபத்தின்முலம், பிரியத்தின் மூலம், கி.ரா. வாசகனை உணரச்செய்கிறார். மாநோம்பிற்கு வன்னிமரத்தை பலசாலிகள் பிடுங்கி தனது திறமையை ஊருக்கு காட்டுவது என்று ஒருமுறை. அச்சிந்த்திலு, அடி பாகத்தில் கவட்டை உள்ள வன்னி மரத்தை நடச்சொல்லி அதைப் பிடுங்க கிட்டப்பன் திணறட்டும் என்று பழி உணர்வு கொள்கிறாள். அதை மிகப்

பிரயத்தனப்பட்டு பிடுங்கப்போய் கிட்டப்பன் படுத்த படுக்கையாகிவிட, 'கிட்டப்பா, என் பிரியமானவனே' என்று தனிமையில் கண்ணீர் வடிக்கிறாள்.

தன் வீட்டு பசுவின் குரலை கேட்டு, எங்கிருந்தோ காரி அதை தேடி வர, அச்சிந்த்துலுவுக்கு கிட்டப்பனின் மேல் தாபம் மேலெழுகிறது.. இரு குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை நின்று போய் , ஒதுங்குவதற்கு கூட செல்லாமல் இருந்த, அவர்கள் புஞ்சையை பிரிக்கும் ஒரு கன்னி வேப்பமரத்தை பார்க்க வேண்டும் என்ற உணர்வு கிட்டப்பனுக்கும், அச்சிந்த்தலுவுக்கும் ஒரே நாளில் வருகிறது.

கி.ரா-வின் எழுத்தின் மகிமையில், வாசகனுக்கு கிடைப்பது இரு அழகிய கிளிகள் அலகை அலகால் கொஞ்சும் அழகு. அவர்களின் காதலோடு காதலாக, கி.ரா. கண்ணுக்கு குளிர்ச்சியான விளக்கெண்ணெய் தீபம் போய் மண்ணெண்ணெய் ஊற்றிய அரிக்கன் லாம்புகள் கிராமங்களை ஆக்ரமித்ததையும் சொல்கிறார்.புதிதாக ஏதாவது வந்தால், மக்களின் ஏற்றுக்கொள்ளுதல் எப்படி இருக்கும் என்று சொல்லியிருப்பது, இன்றைய மாற்றங்களை நாம் எப்படி ஏற்றுக்கொள்கிறோம் என்பதற்கும் பொருந்தும்.

"எந்த புதுசு வந்தாலும், முதலில் அதை சந்தேகிக்கிறதும், அதையே குறை பேசிப் பரப்புகிறதும், பிறகு தயக்கத்தோடு ஏற்றுக்கொள்கிறதும், ஏற்றுக்கொண்ட பிறகு புதிய வியாதிகள் அதனால்தான் பரவுவுதாகச் சொல்லுவதும் வழக்கம்".

ஜல்லிக்கட்டு பார்க்காதவர்கள், சி.சு. செல்லப்பாவின் வாடிவாசல் நாவலை வாசிக்கவேண்டும். இல்லை அதற்கு ஒரு ஜல்லிக்கட்டின் ட்ரைலர் போல , கிட்டப்பன் காரியை அடக்கி மூக்கணாங் கயிறு குத்தும் நிகழ்வை கி.ரா-வின் 'கோபல்லபுரத்து மக்கள்' வாசிப்பில் காண வேண்டும். நாவலிலிருந்து சில வரிகள்.

"தரையிலிருந்து ஒரே தவ்வலில் காரியின் மேல் விழுந்த கிட்டப்பனின், வலதுகை இடுக்குக்குள் காரியின் உயரமான திமிலும், இடதுகையின் பிடிக்கினுள் அதன் இடது அடிக்கொம்பும் பிடிபட்டது. உடனே காரி எகிறி குதித்து கிட்டப்பனை உதறித்தள்ள முயன்றது. அட்டைபோல ஒட்டிக்கொண்டு அவன் காரியின் முன்னந்தங்காலோடு தனது வலதுகாலைப் பின்னிக் கொண்டான்"

"காடுகள்ளே எதேச்சையாத் திரிஞ்சத நாம கொண்டுவந்து இப்படி ராப்பகலா அடிச்சி அதுகளை வேலை வாங்குரோம் " என்று கி.ரா. பிணையலுக்கு பிடித்து வரும் மாடுகளை பற்றிக் குறிப்பிடுகிறார். இதையே விரிவாக்கிய கதையாக , கந்தர்வனின் கொம்பன் கதையை நான் பார்க்கிறேன்.

சுதந்திர போராட்ட காலகட்டத்தில் மக்களை மாற்றும் மாற்றங்கள் வந்தடைகிறது. நாகரீகம் வளர்கிறது. கல்வியின் அவசியம் மக்களுக்கு பிடிபடுகிறது. மூட பழக்கங்கள் கேள்விக்கு உள்ளாகின்றன. மனிதனை மனிதன் இனம் பிரிக்காமல் அனைவரும் சமனுடன் நடத்தப்பட வேண்டும் என்ற மனமாற்றம் நிகழ்கிறது. வெள்ளைக்காரனை வெளியேறு என்றும் சொல்கிறார்கள், அவனால்

நல்லதும் வந்தது என்று பேசிக்கொள்கிறார்கள். வெளியூருக்கு படிக்கச் சென்ற நரசிம்மனும், கஸ்தூரியும் குடுமியை இழந்து, `சேக்கு'வெட்டிக்கொண்டு வருகிறார்கள். கள்ளுக்கடை வேண்டாம், அதை ஒழிப்போம் என்று கூடி பேசி ஆலோசிக்கிறார்கள். குடிப்பவனின் வீட்டுக்குச் சென்று , அவன் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் சொல்கிறார்கள். குடித்து அலுச்சாட்டியம் செய்யும் பாலனை தட்டி கேட்க, அதற்கு ஜாதி முலாம் பூசப்படுகிறது.

தாசில்தார் எங்கு வேலை பார்க்கிறாரோ அங்குதான் தாலுகா தலைநகரம் இருக்க வேண்டும் என்பதற்காக , ஓட்டப்பிடாரத்திலிருந்து கோவில்பட்டிக்கு ஒரே நாளில் மாறுகிறது. தாழ்ந்தவர் என்பதால் , தாசில்தார் நகரில் வசிக்க மறுக்கிறது உயர்வர்க்கம். வெள்ளைக்கார கலெக்டர் உத்தரவில் தாசில்தார் எங்கு இருக்கிறாரோ அதுவே தலைநகரம் என மாற்றப்படுகிறது.

செவ்வாய்க் கிழமைகளில் ஆண்கள் அனுமதிக்கப்படாமல் , பெண்கள் கொழுக்கட்டை செய்து பூஜை செய்கிறார்கள். நேசம் கொண்ட நெஞ்சங்களுக்கு இருட்டில் தனிமையில் சந்திக்க செவ்வாய்க்கிழமை நல்லதொரு வாய்ப்பு. அதற்கு வெடி வைக்க வந்தது டார்ச் லைட். முகத்தில் வெளிச்சத்தை பீய்ச்சி யாரென்று பார்க்கிறார்கள். ஜடாமுனி எட்டு எடுத்து வைத்தால், ஒரு கால் குரங்கடிச்சான் காட்டில் , மறு கால், ராமனுரணியிலே , இரண்டுக்கும் இடையில் மூன்று மைல் என்று இருட்டை வைத்துச் சொல்லப்படும் கட்டுக்கதைகளை டார்ச் லைட் முடிவுக்கு கொண்டுவருகிறது.

பள்ளிக்குள் அனுமதியில்லாமல் வந்தமர்ந்து ஊர்க் கதை பேசும் ஊர் பெரிய மனிதர்களை, வரவேண்டாம் எனச் சொல்லுமளவு வாத்தியார்கள் மனத்தைரியம் பெறுகிறார்கள். சுதந்திர போராட்டம் கோபல்ல கிராமம் எங்கும் பிரதிபலிக்கிறது. சிறுவர்கள், வந்தேமாதரம் என்று வண்டிப் பைதாவில், சுவற்றில் எழுதி வைக்கிறார்கள். சட்டப்பூர்வமாக அமைந்த பிரிட்டிஷ் சர்க்காரை என்று பத்திரிகையில் வந்த வாசகத்தை, கோபல்லபுர வாசி திரும்பத் திரும்பச் சொல்லி குரூரமாகச் சிரித்து "யாரு ஏற்படுத்தினாங்க சட்டப்பூர்வமாக இந்த பிரிட்டிஷ் சர்க்காரை?" என்று பரிகசிக்கிறார்.

பச்சைகுத்துபவர் காந்தியின் படத்தையும், ராட்டை சின்னத்தையும் கையில் பச்சை குத்துவதற்கு தயாராகிறார். மூவர்ணக்கொடியை மரத்தின் உச்சியில் கட்டுகிறார்கள். அதை வெள்ளை அதிகாரி பார்த்தால், ஊருக்கு பங்கம் வரும் என்று ஒரு சாரார் பயப்படுகிறார்கள். திருப்பூர் குமரன், வந்தே மாதரம் என்று சொல்லி பிடித்த கொடியை விடாமல் இருந்ததால், அடித்து கொல்லப்பட்டதை கேட்டு வருத்தப்படுகிறார்கள்.

தேதியும் , நாளும், கிழமையும் அய்யா கி.ரா, தனது நாவலில் எப்படி சரியாக எழுதியுள்ளார் என்று கூகுளையம், விக்கிப்பீடியாவையும் இதே நாள் அன்று என்று சொல்லும் பழைய செய்திகளையும் படித்து சரி பார்த்தேன். "அது 1911 ஆம் ஆண்டு ஜூன் மாசம் 17 ஆம் தேதி சனிக் கிழமை . அன்றைக்கு கொடைக்கானல்

போவதற்காக ரயில் ஏறிப் பயணமான நெல்லை ஜில்லாக் கலெக்டர் ஆஷ் துரையை மணியாச்சி ஜாக்சனில் வைத்து , செங்கோட்டை ரகுபதி அய்யரின் மகன் வாஞ்சிநாதன் என்பவன் சுட்டுக் கொன்று, தானும் தற்கொலை செய்துகொண்டான்"

எனது கூற்றை , நான் இனி இப்படி எழுதவேண்டும். கி.ரா. எழுதியபடி, விக்கிப்பீடியா-வில் சரியாக இருக்கிறதா என்று.

காந்தியம் சுபாஷ்போஸும், வாழ்ந்த காலத்தில் அன்றைய இளைஞர்களும், மக்களும் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை கோபல்லபுரத்து மக்களின் மூலம் , கி. ரா-வின் பதிவுகள், நமக்கு கற்பிக்கப்பட்ட சரித்திர புத்தகத்தில் இல்லாததை கற்பிக்கின்றன. இருபத்து நான்கு வயது பகத் சிங்கிற்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை, காந்தி இர்வின் ஒப்பந்தத்தின்போது , காந்தி இர்வினிடம் பேசி, தண்டனையை ரத்துச் செய்ய சொல்லுவார் என்று நம்புகிறார்கள்.

'லேமாண்டே' என்கிற பிரஞ்சு பத்திரிகையின் நிருபர் சார்லஸ் பேத்ராஸ் என்பவர் காந்திஜியை பேட்டி காண்கிறார். அந்த கூர்க்கா சிப்பாய்களை விடுவிக்கக்க கோரி நீங்கள் ஏன் வைஸ்ராய் இர்வின் பிரபுவிடம் கேட்கவில்லை என்று ஒரு கேள்வி கேட்கிறார். அதற்கு காந்திஜி சொன்ன பதிலை, கோபல்லபுரத்து கம்மாக்கரை மரத்து நிழலில் இளவட்டங்கள் காரசாரமாக விவாதம் செய்கிறார்கள். சுபாஷ்போஸ் காங்கிரஸ் தலைவராக ஜெயித்துவிட, காந்தி பரிந்துரை செய்த பட்டாபி சீத்தாராமைய்யா தோற்றுவிடுகிறார். "பட்டாபி தோல்வி என் தோல்வி" என்று காந்திஜி சொல்கிறார். கோபல்லபுரத்து இளைஞர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் போதெல்லாம் "பட்டாபி தோல்வி என் தோல்வி" என்று சொல்லிக்கொண்டார்கள்.

போலீஸ் பாதுகாப்புடன் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த தலைவர் சுபாஷ் சந்திர போஸ் பெண்வேடமிட்டு பாதுகாப்பிலிருந்து தப்பிக்கிறார். செய்தி படிக்கும் மக்கள் பரபரப்பான சந்தோசம் அடைகிறார்கள். தப்பிய சுபாஷ் வெவ்வேறு பெயர்களில், ஆப்கனிஸ்தான் வழியாக ஜெர்மன் செல்கிறார். ஜப்பானிய அரசு தங்களிடம் சுபாஸை அனுப்பிவைக்கச் சொல்ல, இரண்டு இந்தியர்களின் துணையுடன் சப்மெரினில் ஜப்பான் செல்கிறார். ஒவ்வொரு நிகழ்வுகளையும், சுபாஷ் உபயோகித்த வெவ்வேறு மாற்றுப் பெயர்களையும், தேதி விபரங்களையும் குறிப்பிட்டு, விபரங்களின் பிதாமகனாக, கி.ரா. நம்மை அசத்துகிறார்.

சுதந்திரம் அடையும் தினம் பத்திரிகைகளில் அறிவிக்கப்படுகிறது. "ஈவு இரக்கமில்லாமல், மக்களைத் தேய்த்து நசுக்கியவன் இப்போது ஒரு சலாம் போட்டு , நான் வெளியேறிக்கொள்கிறேன் என்று சொன்னால் எப்படி? அவன் இந்த நாட்டில் நிறுவிய மூலதனத்தையெல்லாம் விட்டு எப்படி போவான்?" என்று சிதம்பரம்பட்டி என்பவர், கோபல்லபுரத்துக்கு தேசாந்திரியாக வந்த மணி என்பவரிடம் கேட்கிறார். அவர் அதற்கு சொல்லும் பதில் ஆறு அத்தியாயங்களில் விரிகிறது. நல்ல பொருள்

போட்டு எடுத்தால், அந்த ஆறு அத்தியாயங்களையும் `கேம் ஆப் த்ரோன்' கொடுத்த விறுவிறுப்பில் எடுக்கலாம்.

புரியாத ஓவியங்களை முற்றங்களில் மாட்டி அழகு பார்க்கிறோம். ஓவியர் ஆதிமூலம் போட்ட கோட்டு ஓவியங்கள் கொண்ட , நாட்டார் வழக்குத் தமிழில் அழகிய காதல் கதை அடங்கிய சரித்திர உண்மைகள் நிரம்பிய கி.ராஜநாராயணனின் கோபல்லபுரத்து மக்களை வாங்கி வீட்டின் புத்தக அலமாரியில் அடுக்கி வைப்போம். கிடைக்கும் நேரத்தில் எடுத்து எடுத்து வாசிப்போம். –

வ. சௌந்தரராஜன்

கிராவின் திரைப்பட ரசனை

https://solvanam.com/2022/02/27/%e0%ae%95%e0%ae%bf%e0%ae%b0%e0%ae%be%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%a9%e0%af%8d-%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%b0%e0%af%88%e0%ae%aa%e0%af%8d%e0%ae%aa%e0%ae%9f-%e0%ae%b0%e0%ae%9a%e0%ae%a9%e0%af%88/

“மழைக்காகப் பள்ளிக்கூடத்தின் பக்கம் போனேன்; ஆனால் பள்ளிக்கூடத்திலிருந்து மழையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன்” என்பதைப் பல நேரங்களில் சொல்லியவர் கி.ரா. இப்படிச் சொன்னதால், அவர் பள்ளிக்கூடத்திற்கே போனவரில்லை என்பது பொருளில்லை. பள்ளிக்கூடப் பாடத்திட்டம், ஆசிரியர்கள், அவர்களின் கற்பித்தல் முறை போன்றவற்றில் அவருக்கு ஈடுபாடு இருந்ததில்லை; புத்தகங்களில் கற்றதைத் திருப்பிச் சொல்லும் ஆசிரியர்களிடமிருந்து கற்றுக்கொள்ளப் பெரிதாக எதுவுமில்லை என்பதையே இந்த விவரிப்பின் மூலம் உறுதி செய்தார். அதே நேரம் அவரது கற்றல் முறை என்பது கூர்ந்து கவனித்தல் வழியாகவும், பார்த்த ஒவ்வொன்றைப் பற்றியும் தெரிந்தவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்வதன் மூலம் கற்றுக் கொள்வதாகவும் இருந்தது.

அவரது பாடங்கள் எல்லாம் இயற்கையின் ஜீவராசிகளாகவே இருந்தன. தாவரங்களையும் விலங்கினங்களையும் நீர்நிலைகளையும் நிலத்தின் மண்வகைகளையும் படிமங்களையும் வகைபிரித்துப் பேசும் பல கதைகளை அவர் எழுதியிருக்கிறார். ஒன்றைப்பலவாக அடுக்கிச் சொல்லும் வாய்ப்புகள் கொண்ட புனைகதை வடிவத்திற்குள்ளேயே ஒரு சொல்லை விரித்துப் பேசும் வாய்ப்பை உருவாக்கிக்கொண்டு விரித்துப் பேசுவார். இந்தச் சொல்முறைக்கு நல்லதொரு உதாரணமாக இருப்பது அவரது கிடை குறுநாவல். ஆடு மேய்க்கும் இளம்பெண்ணும் இளைஞனும் கொண்ட காதலை -சாதி மீறிய உறவைப் பேசும் கதைக்குள் ஆடுகளின் வகைகளைப் பட்டியலிட்டுக்காட்டுவார். அதே போல, மாற்றிக் கட்ட இன்னொரு வேட்டி இல்லாத ஒருவரின் கதையைச் சொல்லும் கதைக்குத் தலைப்பு வேட்டி. அந்தக்

கதைக்குள் வகைவகையான துணிகளையும், வேட்டிகளின் வகைப்பாடுகளையும் நுட்பமான வேறுபாடுகளையும் சொல்லிவிட்டுக் கதையின் வடிவ அமைதி மாறாமல் கதையை முடித்துவிடுவார். இயற்கையைப் பாடமாகப் படிக்க நினைக்கும் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெற்றோர் வாங்கித்தர வேண்டிய கதைப்புத்தகம் அவரது பிஞ்சுகள் என்று சொல்வேன்.

புதுச்சேரியில் இருந்த காலத்தில் அவருடன் நடைபோவதற்குப் புதுப்புது இடங்களைத் தேடிச் செல்வதுண்டு. அப்படித்தான் இப்போது கருவடிக்குப்பம் மயானத்தோப்புக்குள் ஒருநாள் நுழைந்தோம். நூற்றாண்டைத் தாண்டிய மரங்கள் அடர்ந்த வனமாக இருக்கும் சுடுகாட்டை நான் வேறெங்கும் கண்டதில்லை. அந்த வனத்திற்குள் தான் தமிழ் நாடகத்தின் தந்தையென அழைக்கப்படும் சங்கரதாஸ் சுவாமிகளின் கல்லறை இருக்கிறது. நாடகப்பள்ளி மாணவர்களோடு ஒன்றிரண்டு தடவை அதற்கு முன் போனதுண்டு. புதுவையின் முதன்மையான சுடுகாடான கருவடிக்குப்பம் தோப்பை ஒருவரும் சுடுகாடாக நினைப்பதில்லை. மயானத்திற்குப் பக்கத்திலேயே ஒரு கோயில் உண்டு. அதுவும் வேறு ஊரில் இல்லாத ஒன்று. பாரதியின் குயில்பாட்டுத்தோப்பு இதுதான் என்று பலரும் சொல்வார்கள். அந்த அனுபவத்தில் கி.ரா.விடம் தோப்புக்குள் இருக்கும் மரங்களைப் பற்றிச் சொன்னேன். இதையெல்லாம் நாங்கள் பேசிக் கொண்டிருந்த இடம் ஒரு சினிமா தியேட்டர் வாசல்.

நல்ல படம்; பார்த்துவிடுங்கள் என்று யாராவது சொன்னால், ஏன்? எப்படி? என்று பேசிவிட்டு, அவர்களின் பேச்சை வைத்தே அந்தப் படத்தைப் பார்க்க வேண்டுமா? வேண்டாமா? என்று முடிவுசெய்துவிடுவார் கி.ரா. புதுவையில் இயங்கிய திரைப்பட ரசனை சார்ந்த வெளியீடுகளுக்கும், ஆண்டுதோறும் நடக்கும் புதுவைத் திரைப்பட விழாவிற்கும் முதல் ஆளாக நிற்பவர் கி.ரா. **நாசரின் அவதாரம்** படம் வந்தபோது “இயக்குநர் தங்கர் பச்சான் அந்தப்படத்தைப் பார்த்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்; அவர் சொன்னா நம்பிப் பார்க்கலாம்” என்று சொன்னார். இருவரும் படம் பார்ப்பதற்காக அந்தத் தியேட்டர் வாசலில் இருந்தோம். கருவடிக்குப்பம் போகும் பாதையில் இருந்த அந்த அரங்கில் புதுப்படங்கள் எதுவும் முதல் காட்சியாக வருவதில்லை. இரண்டாவது மூன்றாவது சுற்றில் தான் வரும். ஆனால் கலைப்படம் எனக் கருதப்பட்ட அவதாரத்தை நகரின் முதன்மை வரிசைத் திரையரங்குகள் வாங்காததால், இந்த அரங்கில் வெளியிட்டிருந்தார்கள்.
நாங்கள் போனபோது தியேட்டருக்கு முன்னால் ஒருவரும் இல்லை. டிக்கெட் கொடுக்கும் அடையாளமும் இல்லை. உள்ளே போய் விசாரித்தோம். கூட்டம் குறைவாகவே வருது. 100 பேர்களாவது வந்தால் அடுத்த காட்சி நடக்கும் என்று சொல்லி விட்டார்கள். என்ன செய்யலாம் என்று யோசித்தபோதுதான் குயில்தோப்பு என அறியப்பட்ட மயானத்திற்குள் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று சொன்னார் கி.ரா. காலாற நடக்கலாம் என்று நுழைந்து ஒவ்வொரு மரத்தின் பக்கமும் நின்று மரங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்தார். பட்டைகளையும் வழுவழுப்பையும் இலைகளையும் வைத்து அவற்றின் பெயர்களையும் அவைகளின் உறுதிப்பாட்டையும் சொன்னார். இதுபோன்றதொரு மயானத்தில் தான் அரிச்சந்திரன் – சந்திரமதி கதை நிகழ்ந்திருக்கவேண்டும். அந்தக் கதையைப்பாட்டாகவும் வசனமாகவும் எழுதி மேடையேற்றிய சங்கரதாஸ் சுவாமிகளின் சமாதிவரை போய்விட்டுத் திரும்பினோம்.

தோப்பின் வாசலில் நின்று திரையரங்கைப் பார்த்தோம். கூட்டம் வந்திருந்தது. நாங்கள் நடந்துபோகவும் டிக்கெட் கொடுக்கத்தொடங்கினார்கள். நான் சில தடவை அந்த அரங்கில் படங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் கி.ரா.வுக்கு அது முதல் முறை. முதுகுவலியை உண்டாக்கக்கூடிய இருக்கைகள் தான் இருக்கும் என்று சொல்லியிருந்தேன். பரவாயில்லை படம் நல்ல படம் என்றால் அதெல்லாம் தெரியாது என்று சொல்லிவிட்டார்.

படம் பார்த்துவிட்டுத் திரும்பும்போது படத்தின் காட்சிகளில் காடும் வீடும் பாதைகளும் இயற்கையை விட்டு விலகாமல் பிடிக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்தார். கண் தெரியாத பெண்ணாக நடித்துள்ள ரேவதியின் நாசி உணர்வைக் காட்ட இயற்கையின் ஒலிகளையும் வாசனையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று பாராட்டிப் பேசிக்கொண்டே வந்தார். 'நல்ல பாடல்கள் இருக்கு; நல்ல நடிப்பு இருக்கு; ஆனா நம்மெ ஆளுகளுக்கு இது போதாதே; படம் பார்க்க வரமாட்டாங்களே' என்று வருத்தத்தோடு சொல்லிக்கொண்டே வந்தார். சில நாட்களுக்குப் பின் நடிகர் நாசர் வந்தார். அவரிடம் அந்தப் படத்தைப் பற்றி விரிவாகப் பேசிக்கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அவரது சினிமா ரசனை என்னுடைய பார்வைக்கோணத்திலிருந்து பெரிய அளவு வேறுபட்டது என்பது புரிந்தது.

38

"சார் அப்பா விசாரிச்சார்

இப்போ அப்பா உடன்தான் இருக்கேன்

அழைக்கிறீர்களா?"

புதுவை இளவேனில் மெசஞ்சரில் இதை அனுப்பிய நாள் ஏப்ரல்-19/ நேரம் இரவு 9.27. அவரது தொலைபேசி எண்ணையும் தந்தார். அவர் அப்பா என விளித்த து கி.ரா.வை. இந்த நேரத்தில் வேண்டாம். நாளை பகலில் பேசிக்கொள்கிறேன். அடுத்த நாள் ஏதோ ஒரு வேலையால் மறந்துவிட்டேன். இரண்டு நாட்கள் கழித்து கி.ரா.வின் தொலைபேசிக்கு அழைத்தேன். யாரோ பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னது. இரண்டு தடவை முயற்சி செய்துவிட்டு விட்டுவிட்டேன். சில நாட்கள் கழித்து இளவேனில் பக்கத்தில், குதூகலமாக அவர் எழுதிக் கொண்டிருந்த படம் வந்தது. நானும் பார்த்துச் சிரித்துக்கொண்டேன். நூறைக் கடந்தும் இருப்பார்; இன்னும் சில நூல்களை எழுதுவார் என்று மனம் சொன்னது.

சிலநாட்கள் கழித்து மருத்துவமனைக்குப் போய்வருவதாகத் தகவல் வந்தது. நானும் மருத்துவமனையில் ஒருவாரம் இருந்துவிட்டு வந்தேன். இப்போது அழைப்பது சரியில்லை என்று தோன்றியது. அதனால் தொலைபேசியில் அழைக்காமல் விட்டுவிட்டேன். திரும்பவும் பாண்டிச்சேரிக்குப் போவோம். சந்திப்போம் என்றே மனசு சொல்லியது.

வழக்கமாக 12 மணிக்கு மேலும் விழித்திருப்பேன். தூங்குவதற்கு முன்னால் முகநூலில் ஒரு சுற்றுச் சுற்றுவிட்டுத் தூங்கிவிடுவேன். ஆனால் மே. 17 அன்று பத்தரை மணிக்கெல்லாம் தூங்கிவிட்டேன். மூன்றரை மணிவாக்கில் ஒரு தொலைபேசி அழைப்பு. வந்து உடனே நின்று விட்டது. எடுத்துப் பார்த்தால் அதொரு வெளிநாட்டு அழைப்பு. அப்படியான அழைப்புகளுக்குத் திரும்பவும் அழைத்து மறுமொழி சொல்வதில்லை. ஒரு தடவை வரும் அழைப்புகளைத் திரும்ப அழைத்தால் நமது தொலைபேசி திசைமாற்றம் செய்ய வாய்ப்புண்டு என்பதால் அதனைத் தவிர்ப்பேன். அப்படித்தான் அதையும் திரும்ப அழைக்கவில்லை. ஆனால் தூக்கம் கலைந்து விட்டது.

முகநூலின் பக்கங்களில் நுழைய நினைத்துத் திறந்தபோது முதல் பதிவாக வந்தது இளவேனில் பதிவுதான். அப்பாவைப் பறிகொடுத்த மகனின் கதறலாக இருந்தது அந்தப்பதிவு. நான் புதுச்சேரியில் இருந்த காலத்தில் கி.ரா.வுக்கும் இளவேனிலுக்குமான உறவு ஒவ்வொன்றாக மாறிக்கொண்டிருந்தது. தாகூர் கலைக்கல்லூரிக்குச் செல்லும் சாலையில் கி.ரா., இருந்தபோதுதான் அந்தச் சிறுவனைப் பார்த்தேன். பின்னொரு நாளில் அந்தச் சிறுவன் இளைஞனாக மாறிய தோற்றத்தில் இருந்தான்.

பின்னரும் புதுவை இளவேனிலோடு தொடர்புகள் இருந்தன. முகநூல் காலம் விலகிய தொடர்புகள் நெருங்கிய காலமாகிவிட்டது. வார்சாவிலிருந்து திரும்பிய பின்னர் உங்களையும் படங்கள் எடுக்க வேண்டும் என்று என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார். எப்போதும் புதுவை இளவேனிலைப் பார்க்கும்போது கி.ரா.வைப்பற்றியே பேசினார். கடந்த பத்தாண்டுகளில் கி.ரா.வின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியிருந்தார் இளவேனில். அவரது புதிய புத்தகங்களை அவருக்குச் சமர்ப்பணம் செய்தார். நூல்களின் உரிமையைப் பிரித்துப் பாகம் செய்யும்போது அவரையும் ஒரு மகனாகப் பாவித்துப் பிரித்து எழுதினார்.

அவரது மரணத்திற்குப் பின்னர் சில நாட்கள் கழித்து ஒரு குறுஞ்செய்தி அனுப்பினார் இளவேனில். “பேசாமல் இருந்தீட்டீங்க சார் என்று கோபமும் வருத்தமும் கூடியதாக அந்தச் செய்தி இருந்தது. ”

“அதுதான் பெருந்துயரம். உன்னிடம் சொன்ன சில நாட்களில் நானும் மருத்துவமனைக்குப் போய்விட்டேன்; கரோனாவின் தாக்குதல். ஒருவாரம் மருத்துவமனையில் தங்கித் திரும்பினேன் ” என்றேன்.

‘துயர கணங்கள் சார்.. கடைசி நாட்களில் ... உங்களிடமும் பேச விரும்பினார்’ – என்பது இளவேனில். எனக்கும் அவருக்குமிடையே ஒரு ரகசியம் ஒன்று உண்டு. அதை வெளிப்படையாகச் சொல்ல நினைத்திருக்கலாம். இனி அதை ரகசியமாகவே விட்டுவிட வேண்டியது தான் என்று சொல்லி முடித்தேன். அப்படியான பல ரகசியங்கள் என்னிடம் இருக்கின்றன என்றார் புதுவை இளவேனில்.

கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் எழுத்தாளர் கி. ராஜநாராயணன் (கி.ரா), தனது புகழ்பெற்ற **'கோபல்லபுரத்து மக்கள்'** என்ற

நாவலுக்காக **1991-ஆம் ஆண்டு** சாகித்திய அகாதமி விருதைப் பெற்றார். கரிசல் மண்ணின் வட்டார மொழியில், மக்களின் வாழ்வியலைச் சித்தரித்ததற்காக இந்த உயரிய விருது அவருக்கு வழங்கப்பட்டது.

கி. ராஜநாராயணன் - சாகித்திய அகாதமி விருது விவரங்கள்:

- **விருது பெற்ற ஆண்டு:** 1991
- **விருது பெற்ற படைப்பு:** கோபல்லபுரத்து மக்கள் (நாவல்)
- **படைப்பின் தன்மை:** கரிசல் வட்டார இலக்கியம் (தெலுங்கு மக்களின் இடப்பெயர்வு மற்றும் தமிழக மக்களின் வாழ்வியலைச் சித்தரித்தது)
- **விருது விவரம்:** சாகித்திய அகாதமி விருது

முக்கிய தகவல்கள்:

- கி.ரா 'கதவு' என்ற சிறுகதை மூலம் தமிழ் இலக்கிய உலகில் பிரபலமானவர்.
- 'கோபல்ல கிராமம்' மற்றும் 'கோபல்லபுரத்து மக்கள்' ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நாவல்களாகும்.
- கரிசல் காட்டு வட்டார வழக்கு அகராதியையும் தொகுத்தவர்.
- புதுவை பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றியவர்.

1991-ல் சாகித்திய அகாதமி விருதை வென்றதன் மூலம், தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக வட்டார இலக்கியத்தில் இவரது பங்களிப்பு மிக உயரியதாகக் கருதப்படுகிறது.

கரிசல் வட்டார வழக்கு அகராதி

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%B2%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%B0_%E0%AE%B5%E0%AE%B4%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81_%E0%AE%85%E0%AE%95%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BF

கரிசல் வட்டார வழக்கு அகராதி என்பது கரிசல் வட்டாரத்தில் சிறப்பாக வழங்கும் தமிழ்ச் சொற்களுக்கான அகராதி ஆகும். இதனைக் கரிசல் இலக்கியத்தின் முன்னோடியாகக் கருதப்படும் கி. ராஜநாராயணன் தொகுத்துள்ளார். தமிழில் வட்டார அகராதிகளுக்கு இது ஒரு முன்னோடி முயற்சியாகக் கருதப்படுகிறது.

இந்த நூல் 1982 ஆம் ஆண்டு அன்னம் வெளியீடாக வெளிவந்தது.



கரிசல் வட்டார வழக்கு அகராதி என்பது கரிசல் இலக்கியத்தின் முன்னோடியான **கி. ராஜநாராயணன்** **(கி.ரா)** அவர்களால் தொகுக்கப்பட்ட, கோவில்பட்டி மற்றும் அதன் சுற்றியுள்ள கரிசல் மண் பகுதிகளில் (பழைய திருநெல்வேலி மாவட்டம்) பேசப்படும் வட்டாரத் தமிழ்ச் சொற்களுக்கான அகராதியாகும். இது 1982-ல் முதன்முதலில் வெளியாகி, தமிழில் வட்டார வழக்குச் சொற்களைப் பதிவு செய்த முன்னோடி அகராதியாகும்.

கரிசல் வட்டார அகராதியின் சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** கி. ராஜநாராயணன்
- **பொருள்:** கரிசல் நிலத்து மக்களின் பேச்சுவழக்கு, வாழ்வியல் சொற்கள்.
- **சிறப்பு:** மண் மணம் மாறாத, கதைகள் மற்றும் நாவல்களில் பயன்படுத்தப்பட்ட தனித்துவமான சொற்களின் விளக்கம் இதில் உள்ளது.
- **பயன்:** கோபல்லபுரத்து மக்கள் போன்ற கதைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இந்த அகராதி உதவுகிறது.

சில முக்கிய கரிசல் வழக்குச் சொற்கள் (உதாரணங்கள்):

- **கெளிமதம்** - திமிர்
- **கெராக்கெட்ட** - அதிர்ஷ்டம் கெட்ட
- **சடை** - தடிமனான/கெட்டியான
- **புழுதி** - உழவு செய்யப்பட்ட நிலம்
- **கிடா** - ஆட்டுக்கடா
- **கட்டங்காரன்** - அண்டை வீட்டாருக்கோ/தெரிந்தவர்களுக்கோ ஆபத்து வரும்போது உடன் இருப்பவன்.

இந்த அகராதி தமிழ் இலக்கியத்தில் வட்டார மொழியைப் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தை உணர்த்திய ஒரு முக்கியப் படைப்பாகும்.


(😊)(😊) கி இராஜநாராயணன் (😊)(😊)

கரிசல் களம்



பன்னாட்டு கருத்தரங்கு

கரிசல் இலக்கியத்தந்தை நினைவாக



https://alchetron.com/Ki-Rajanarayanan


https://sahitya-akademi.gov.in/awards/akademi%20samman_suchi.jsp#TAMIL

தமிழ்த்துறை

கரிசல் களம்

(பன்னாட்டு கருத்தரங்கிற்கு வரப்பெற்ற
ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு)

நூல் தொகுப்பு
தமிழ்த்துறை
திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை





கரிசல் களம்

பன்னாட்டு கருத்தரங்கிற்கு வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு

முதற்பதிப்பு: ஜனவரி 2024

வெளியிட நிதியுதவி:

நா சுப்பு ரெட்டியார் 100

Na Subbu Reddiar 100 Educational Trust

AD-13, 5th Street, 10 Main Road, Anna Nagar West, Chennai—600 040

978-81-968802-1-7

ISBN 978-81-968802-1-7

Book Design: NSR 100 Centenary Committee
Printed by: DJ Prints, Chennai - 600 095

அன்புப்படையல்

PROF PV ARUNACHALAM



Founder & Vice-Chancellor [1997-2001]

Dravidian University

[Mathematician & Former President, Indian Math Society]

Interview

https://www.youtube.com/watch?v=5goN_0sNVig



ISBN 978-81-968802-1-7
9 788196 880217

பன்னாட்டுக் கருத்தரங்கம்

கரிசல் களம்

20.02.2024

எண் பக்கம்	ஆராய்ச்சிக்கட்டுரை கட்டுரையாளர்
1 1	**கி. ரா – ஒரு மானிடவியலாளர்** முனைவர் நா சுலோசனா உதவிப் பேராசிரியர், தமிழ்மொழி(ம)மொழியியல் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை-600113
2 8	**கி. ராவின் அழிந்துபோன நந்தவனம் – ஒரு மீள்பார்வை** மோ விஜயலட்சுமி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை - 95.
3 13	**கி. ராஜநாராயணன் புதினங்கள் காட்டும் இந்திய விடுதலைப் போராட்டம்** முனைவர் வே ரேணுகா உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) திருச்செங்கோடு - 637 205
4 20	**மானிடவியல் நோக்கில் கரிசல் மக்கள் – கி.ரா படைப்புகளை முன்வைத்து** ஷா முஹம்மது அஸ்ரின் முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) முதுகலைத் தமிழாய்வுத்துறை ஜமால் முகமது கல்லூரி, திருச்சி-20
5 27	**கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் சுதந்திரப் போராட்டம்** சூ ஜோஸ்பின் மாலதி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
6 31	**கி. ராவின் பாத்திரப்படைப்பு** முனைவர் ச தனலெட்சுமி உதவிப் பேராசிரியர் முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி சிவகாசி
7 37	**கி. ராஜநாராயணன் : வாழ்வும் பணியும்** முனைவர் பூ சு கணேஷ் மூர்த்தி உதவிப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம், குப்பம், ஆந்திர மாநிலம்

8 40	**கி. ராஜநாராயணனின் படைப்புகளில் கரிசல் பண்பாடு** **ப செண்பகவள்ளி,** உதவிப் பேராசிரியர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி) எளையாம்பாளையம் திருச்செங்கோடு-637205, நாமக்கல்(மாவட்டம்).
9 46	கி. ராஜ்நாராயணனும் தீப நடராஜனும் **முனைவர் மு.இராதாகிருஷ்ணன்** தமிழாசிரியர், தி இண்டியன் பப்ளிக் பள்ளி, ஈரோடு.
10 50	**கி.ராவின் தமிழ்ப்பணிகள்** **முனைவர் எஸ் ஏ சம்பத்குமார்** கல்லூரி நூலகர் (ஓய்வு), எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்.
11 55	*கி. ராஜநாராயணனின் 'கதவு" சிறுகதையில் சமுதாய நோக்கு* **முனைவர் மு கோவிந்தராசுலு** தமிழ்ப்பேராசிரியர் உலகநாத நாராயணசாமி அரசு கல்லூரி (தன்னாட்சி) பொன்னேரி - 601 204.
12 59	"அகராதிப்பேரறிஞர்" கி. ரா. **முனைவர் இர சிவசக்தி** இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர், இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600 004.
13 66	கிராவின் "கதைசொல்லி" இதழ் **முனைவர் எஸ் மீனாம்பிகை** கல்லூரி நூலகர், சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மஞ்சக்குடி.
14 71	கி. ராவின் 'கோமதி'யும் சினிமாவின் 'கௌரி'யும் **சண்முக விமல் குமார்** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக் கழகம், குப்பம் - ஆந்திரா: 517 426
15 78	**ஜடாயு** **இரா ஷர்மிளா** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரவாயல், சென்னை -600 095
16 83	**கரிசல் காட்டு கடுதாசியில் மண் மணம்** **ப விஜயலட்சுமி** முதுகலை மாணவி, தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம்,சீனிவாசவனம் குப்பம் - 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா
17 87	**"கோபல்ல கிராமம்" – வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக்கூறுகள்** **முனைவர் ந.சரஸ்வதி** உதவிப் பேராசிரியர் தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரி துரைப்பாக்கம். சென்னை-600 097
18 93	கொத்தைப் பருத்தி சிறுகதையில் இன்றைய வாழ்வியல் **முனைவர் பா அனுராதா** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்

19 100	கி. ராஜநாராயணனின் கன்னிமை சிறுகதை வெளிப்படுத்தும் பெண்ணின் மனமாற்றம் முனைவர் சு சத்தியா உதவிப் பேராசியர் தமிழ்த்துறை பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்
20 104	கி. ராஜநாராயணன் : சிறுகதையும் வாழ்வியலும் முனைவர் க முத்தழகி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி தஞ்சாவூர்.
21 112	கி. ராவின் சிறுகதைகளில் மழலை உள்ளம் முனைவர் ம தனப்பிரியா உதவிப்பேராசிரியர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை-641010
22 120	கி. ராஜநாராயணன் சிறுகதைகளில் மனிதநேயம் மு செந்தில்குமார் உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி அரும்பாக்கம், சென்னை
23 126	நாற்காலி – ஒரு பார்வை திருமதி சு ஈஸ்வரி (பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்) உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.
24 132	“சர்க்கார் திட்டமும் விவசாயி குடும்பமும்” (மாயமான்) திருமதி மு புவனேஸ்வரி (பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்) உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், அடையாளம்பட்டு, சென்னை - 600 095.
25 139	சமுதாயப் பார்வையில் கி.ரா.வின் நாற்காலி மதிப்புறு முனைவர் வெ பாலாஜி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை - 600 095.
26 144	“கி.ரா. சிறுகதைகள் காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்” சு பாரதி பதிவு எண் 2023PHDPTTM06 முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடாப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம் குப்பம் - 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா.
27 148	கதவு சிறுகதை ஓர் பார்வை மா அமுதா உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரவாயல், சென்னை – 600095.
28 153	கி . இராஜநாராயணின் படைப்புகளில் பன்முகப்பார்வை முனைவர் த ஹேமலதா உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறைத் தலைவர் இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம் - 612 001
29 157	கி. ரா கையாண்ட படைப்புலக உத்திகள் முனைவர் திருமதி இரா கவிதா உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அடையாளம்பட்டு, வளாகம் ஜஜஜ சென்னை – 600 095

30 161	கி .ராஜநாராயணன் படைப்புகளில் காணலாகும் கரிசல் வரலாற்றுச் செய்திகள் முனைவர் சு சதீஸ்குமார் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை - 600 095
31 167	கி. ரா எழுத்துக்களில் கரிசல் மண் மணம் எ நா ஜோதி பதிவு எண்: 2022PHDPTTM04 முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதிநேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாசவனம் குப்பம் - 517 426. ஆ.மா.
32 170	கி. ராஜநாராயணன் சிறுகதைகளில் சமுதாய சிக்கல் முனைவர் ப தனஞ்செயன் இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை, சர் தியாகராய கல்லூரி, சென்னை - 600 021
33 173	மாயமான் சிறுகதையின் கதைக்கரு முனைவர் ச சாந்திமதி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்
34 178	கி.ராவின் கதைகளில் கரிசல் வட்டார வழக்குகளும் பிறமொழிச் சொற்களும் முனைவர் க மாரியப்பன் உதவிப் பேராசிரியர் தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் - 517 426.சித்தூர் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்
35 183	கி.ரா. படைப்புகளில் நாட்டார் பண்பாட்டு மரபுகள் லு ஜினிஷா பதிவு எண் 2023PHDFTTM05, முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாசவனம் குப்பம் - 517426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா
36 186	கி.ராவின் 'பேதை' உணர்த்தும் சமூக அவலம் முனைவர் அ திலகவதி இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி - 635001
37 192	கி.ராவின் படைப்புகளில் பெண் பாத்திர படைப்பு முனைவர் வ கலையரசி உதவிப்பேராசிரியர் - பதிப்புத்துறை திராவிடப் பல்கலைக்கழகம் குப்பம் - 517 426, ஆந்திர மாநிலம்
38 196	கி. ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் அகராதியியல் உத்திகள் முனைவர் கோ பிரியா கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரிமங்கலம், தருமபுரி மாவட்டம் - 635111
39 201	கி. ராவின் நாற்காலிச் சிறுகதையில் கதைக் கூறுகள் முனைவர் தே தியாகராஜன் உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லம்பள்ளி, தருமபுரி.
40 207	நெல்லை வட்டார வழக்கு MM ஜெயசீலன் Senior Lecturer Department of Tamil

	Faculty of Arts University of Peradeniya, **Sri Lanka**
41 216	செட்டிநாட்டு வட்டார வழக்கு Dr AR Arunachalm Dean-Academic Phase: II Dr MGR Educational and Research Institute Maduravoyal (Adayalampattu), Chennai – 600 095
42 221	கொங்கு வட்டார வழக்கு Dr K Senthilkumar Dean-Administration Phase: II Dr MGR Educational and Research Institute Maduravoyal (Adayalampattu), Chennai – 600 095
43 226	வட்டார வழக்கு – ஒரு கண்ணோட்டம் **பேராசிரியர் சி.பி.பழனிவேலு** பதிவாளர் டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரவாயில், சென்னை - 600 095
44 233	தமிழக வட்டார வழக்குகள் MS Sankari Assistant: JR-CDE (Centre for Distance Education) Dr MGR Educational and Research Institute Maduravoyal, Chennai – 600 095
45 238	முல்லை நில வாழ்வியலில் கோபல்லபுரத்து மக்கள் **முனைவர் இரா மணிமேகலை** இணைப்பேராசிரியர் தமிழ்த் துறை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் - 29
46 250	கி.ராவின் பார்வையில் மொழிநடை **முனைவர் சி சிவசங்கரி,** மெயின் ரோடு, சி.என்.பாளையம், கருவாட்சி அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம், அ.கு. எண் : 605201.
47 256	கி.ராவின் சிறுகதைகளில் - வாழ்வியல் விழுமியங்கள் **முனைவர் கி அருள்ஜோதி** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 600 095
48 260	கிராவும் நாளிதழ்களும்.... **கு.ராமராஜன்** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை – 95.
49 264	கி. ரா.வின் தமிழ்ச் சொலவடைகள் – ஓர் பார்வை **முனைவர் கே.சி.ஆர். ஷிஜி** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,

	மதுரவாயல், சென்னை – 600 095
50 272	‘நிலைநிறுத்தல்’ சிறுகதை தரும் பண்பாட்டு வெளி **முனைவர் போ. மணிவண்ணன்** தமிழ்த் துறைத் தலைவர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அவிநாசி – 641 654
51 278	**கி.ரா. வின் சிறுகதைகளில் சமூகப் பார்வை** **முனைவர் ப சிலம்பரசன்,** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 600 095
52 282	*‘Along with the Sun’*: A Profile Prof Dr S Ramalingam Joint Registrar-Languages Dr MGR Educational and Research Institute Maduravoyal, Chennai – 600 095

கோபல்ல கிராமம்

கி இராஜநாராயணன்

https://tamilbookspdf.com/books/gopalla-gramam-by-ki-rajanarayanan/

முனைவர் இரா.மணிமேகலை
இணைப்பேராசிரியர்
தமிழ்த் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 029

அணிந்துரை

கரிசல் இலக்கிய தந்தை என்று போற்றப் பெறும் கி.ராஜநாராயணனின் நூற்றாண்டை முன்னிட்டு பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பில் டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் ஆந்திர மாநிலம் குப்பம் திராவிடப் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்துகின்ற பன்னாட்டுக் கருத்தரங்கம் பொருத்தமான நேரத்தில் நிகழ்கின்ற மிகத் திருத்தமான முன்னெடுப்பாகும்.

முன்னோர்களின் மொழியை ஆவணப்படுத்துவதற்காகவே வட்டார வழக்கில் எழுதத் தொடங்கியதாகக் கூறும் கி.ரா. அவர்கள் தன்னிலிருந்து தோன்றிய பெரும் இலக்கியப் பரம்பரையின் முன்னத்தி ஏராகத் திகழ்கிறார். எளிய உழைக்கும் மக்களின் பக்கமிருந்து பேசுகின்ற இவரின் குரல் மானுடம் பாடும் மரபில் வந்தது எனலாம். மானாவாரி மனிதர்களின் சுகதுக்கம் வியர்வை மணம் வீச இவரது எழுத்துகளில் பயணிக்கிறது. கரிசல் மணத்தை உலகெங்கும் பரவச் செய்த இவரது எழுத்து இலக்கிய உலகில் இருந்த பண்டித மேட்டிமை மனநிலையை மாற்றியமைத்தது. தொல்லியல் ஆதாரங்களின் மூலம் ஓர் இனத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் மீட்டெடுப்பது போல வட்டார மொழியின் மூலம் தாய் மொழியின் மூலவேரைப் பாதுகாக்கின்ற கரிசல் எழுத்து இயக்கத்தின் ஆதிபிதாவாகத் திகழ்கின்றார்.

மொழியியல் அறிஞர்கள் பலரும் கூடி பல காலம் செய்தாலும் முடிக்க முடியாத அருஞ்செயலாக கைமாறு நினையாத மாரியைப் போல கரிசல் வட்டார வழக்குச் சொல்லகராதியைத் தனி ஒருவராக உருவாக்கிய மாபெரும் இமாலய சாதனையைச் செய்தவர். அந்நூலை ஒரு முறை புரட்டி பார்க்கும்போதுதான் கிராமவாசிகளின் உலகியல் அறிவின் மேன்மையும் படிப்பறிவுள்ள நகரவாசிகளின் பட்டறிவு போதாமையும் நமக்கு நன்கு விளங்குகின்றது.

இந்தியாவில் இலக்கியத்திற்கு அளிக்கப்படும் உயரிய அங்கீகாரமாகிய சாகித்திய அகாதமி விருதினை இடைச்செவல் என்னும் ஒரேகிராமத்தைச் சேர்ந்த ஒரே தெருவில் வசித்து ஒன்றாக விளையாடிய தோழர்கள் இருவருமாகிய கு.அழகிரிசாமியும் கி.ராஜநாராயணனும் பெற்றுக் கொண்ட நிகழ்வு வரலாற்றில் எப்போதேனும் நிகழக்கூடிய அற்புத வியப்பாகும்.

சாகித்திய அகாதமி விருது ஏற்புரையில் கி.ரா. பேசும் போது பெருங்கவிஞர்கள் ஆண்டாள், மகாகவி பாரதி முதலாக பல்வேறு படைப்பாளிகள் தோன்றிய மண் தனது என்று சிலாகிக்கின்றார். உண்மையில் கரிசல் மண்ணின் பாலைவனம் தான் கருமுகில் திரட்டி உலகிற்கு உதவ பெருமழை பொழிந்திருக்கிறது பெய்த மழையில் பயிரும் பச்சையுமாய் தமிழ் இலக்கியப் பரப்பெங்கும் நல்ல அறுவடை கண்டு இருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

கரிசல் களம் எனும் தலைப்பில் நடைபெறும் பண்பாட்டுக் கருத்தரங்கில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் தேர்ந்தெடுத்த பொறுக்கு மணிகளாக இருக்கின்றன. தெள்ளத் தெளிந்து ஆய்வுச் சுழலில் புடைத்தெடுத்த அந்த மணிகள் விதை நெல்லாகவே கரிசல்களத்தில் பயன்படும் எனலாம்.

மனித இனம் பற்றிய அறிவியலாகிய மானுடவியல் சமூகப் பண்பாட்டிலும் மொழி சார்ந்து ஆய்வதற்குரிய கல்வித் துறையாகும். கி. ராஜநாராயண படைப்புகளில் ஆய்வு புரிந்து படைக்கப்பட்டுள்ள இக்கட்டுரைகள் மேற்காணும் இரண்டு வகையிலும் இயங்குகின்ற சமூகத்தைக் குறியீட்டு முறையில் விளங்கிக் கொள்வதுடன் அதை படிப்போர்க்குப் மனித மனம் செயல்படும் விதத்தைக் கற்பிக்கும் பயிலகமாகவும் உதவுகின்றன.

இக்கருத்தரங்க கட்டுரை நூலின் ஆய்வு கட்டுரைகள் மானுடவியல் நோக்கிலும் இந்திய விடுதலைப் போராட்டம் பாமர மக்களின் வாழ்வில் நிகழ்வித்த மாற்றங்கள் குறித்தும் பேசுகின்றன . கி.ரா வின் பன்முகப் பரிமாணங்களை அவரது படைப்புகளில் ஊடும் பாவுமாக நெய்யப்பட்டிருக்கும் மண்மனத்துடன் கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. ‘கதை சொல்லி’, என்ற இதழ் கி.ராவின் இதழியல் பணிக்கான மிகச் சிறந்த சான்றாகும்.

பேரிலக்கியம் ஆயினும் அதில் இடம்பெறும் சிறுவர்கள் உள்ளம் தனி உலகமாக இயங்கிக் கொண்டிருக்கும் .கி.ராவின் படைப்புகளில் உலாவும் சிறார்களின் மழலை உள்ளம் தொகுக்கப்பட்டால் குழந்தை உளவியலை அறிந்து கொள்வதற்கான மிகச்சிறந்த படிப்பகம் ஆகும். கி.ராவின் படைப்புகளில் தென்படும் மனிதர்களின் பொதுத் தன்மையாக உலகை நோக்கிய நையாண்டியாகவும் உலகை எதிர்கொண்டு வாழ்வதற்கான நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாகவும் கொள்ளலாம். கருணையும் வீரமும் மன வலிமையும் மிகுந்த இவரது பெண்பாத்திரங்கள் அனைத்தும் உழைக்கும் வர்க்கத்தின் உன்னதக் குறியீடுகள்.

கரிசல் தமிழின் தந்தையாகிய கி.ராஜநாராயணனின் நூற்றாண்டை முன்னிட்டு இப்பெரும் பணியினைச் செய்து படைப்புலகிற்கு வழங்க வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் உழைத்து வருபவர் முனைவர் சு .இராமலிங்கம். தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பல்வேறு களங்களில் நூற்றுக்கணக்கான ஆய்வு நூல்களைப் படைத்தளித்த பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் திருமகனாகிய இவர்கள் இணைப்பதிவாளராக டாக்டர் எம் .ஜி .ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். அவரது எண்ணங்கள் ஒவ்வொன்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்கான புதிய பாதைகளை வகுக்கின்றன. இவர் அருமையில் எளிய அழகுடன் பெரிதினும் பெரிது கேள் என்ற மனப்பான்மையுடன் உள்ளுவதெல்லாம் உயர்வுடன் உள்ளுபவர் ஆவார். தேமதுரத் தமிழோசை அயலகக் கல்வி நிறுவனங்களிலும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற ஆவலுடன் அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பல்வேறு ஆய்வு பொருண்மைகளில் கருத்தரங்குகளைக் களம் காண்கின்றார்.

இவ்விரு பல்கலைக் கழகங்களில் உள்ள தமிழ்த்துறைகள் இணைந்து முன்னிறுத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் வெளியிடப்பெறும் இந்நூல் (*கரிசல் களம்*) கி.ராஜநாராயணனை 21 – ஆம் நூற்றாண்டின் இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைந்திருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. இந்நூல் கனிதரும் பெருமரமாய் மக்களுக்குப் பயனளிக்கின்றது.

DRADVIDIAN UNIVERSITY
ద్రావిడ విశ్వవిద్యాలయం
(An Inter-State University Accredited by NAAC with "B" Grade)
Srinivasavanam, KUPPAM-517 426, Chittoor Dist., (A.P.) INDIA

Prof.Kolakaluri Madhu Jyoti
Vice-Chancellor

FOREWORD

In Tamil literature a good number of writers with valuable credentials have contributed their mind and might for the enrichment of Tamil literature. They anointed their Tamil mother with their valuable literary output. Among Tamil literati, Ki. Ra, who is also known as Ki. Raja Narayanan, occupies a prime place in the literary annals.

He remained as the main source which transformed and reshaped the creative literature of Tamil language in 1960's. He is considered to be the first to throw light on the living conditions of the people of a particular region. His intense focus on the black soil area and making it as an ingredient of his works, attributes flora and fauna to the Tamil literature. His seminal work entitled "Gopala Purathu Gramam" gave him the status of the father of black soil literature. He received Sahitya Akademi award for this work in 1991.

The life and daily chores of the people living in the black soil land form the content of his works. In a way his works stand equivalent to historical records that give information about the society, land and people of a region. Owing to portrayal of people's life in his works in a beautiful manner, Ki. Ra gains the name 'literary weaver.' Mi. Ra studied the works of Ki. Ra and drew inspiration from them.

He moved, travelled and mingled with native people to an extent that he attained mastery over their language and the same has been reflected in his works. He is instrumental in preparing the famous Tamil dictionary "Black Soil Local Dictionary" with an aim of protecting this language from extinction. The short stories of him have always been remaining electrifying and inspiring. Any effort of bringing him and his works close to the reading public will surely enlighten many.

With the aegis of Dravidian University, Tamil department is organizing a seminar on him under the title "Karisal Kalam of Ki. Ra". The momentum of conducting a seminar on Ki. Ra has been initiated and navigated by the auspicious efforts of Dr. M.G.R Education and research institute, Chennai. I thank Dr. S. Ramalingam, founder of 'N. Subbureddiyar Education Foundation and joint registrar of Dr. M.G.R Education and research institute, who is playing a key role in organizing this seminar. I wish Dr. P. S. Ganesh Moorthy, co-ordinator of this seminar, a grand success.

22/1/24


(KOLAKALURI MADHU JYOTI)

Place: Kuppam
Date : 22.01.2024

Office : +91 8570 278236; Mobile: +91 9441000188; Fax : +91-8570-278209
e-mail : dravidianuniversityvc@gmail.com, madhujyotik@gmail.com Web: dravidianuniversity.ac.in


2024.01.23 16:34


RAILWAY TRACK
NATIONAL HIGHWAY
TAR ROAD
KARISAI SEEMAI
THE LAND OF BLACK SOIL





















ISBN 978-81-968802-1-7



